



கல்கி

KALKI

30.1.1972 45காசு



விரோதிக்ருது, தை 16 ★ ஜனவரி 30, 1972

கல்கி

பொருளடக்கம்



ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனி நடனம் இருக்கிறது என்றால் பாரதத்திலோ ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒரு தனிப் பாணி நடனக் கலை உண்டு. இந்த இதழ் அட்டையை அலங்கரிப்பது குலு பள்ளத்தாக்குப் பிரதேசத்துக்குரிய நடனம். சுதந்திர உணர்வுடன் கவலையற்று வாழும் மலைப்பிரதேச மக்களின் இந்த வீர நடனத்தைக் கவலையைத் துறந்து நாடோடியாக அயல்நாட்டிலிருந்து வந்த ஒரு ஹிப்பி வெகுவாக ரசிப்பதில் வியப்பில்லையல்லவா ? புகைப்படங்கள் : வித்யாஸ்ரதா

கல்கி
மலர் 31
இதழ் 27

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

மாரீச மான்!

பல ராஜ்யங்களில் சட்ட சபைக்குப் பொதுத் தேர்தல் நெருங்குகிறது. தேர்தல் பிரசாரமும் தொடங்கிவிட்டது. ஆள்கிற காங்கிரஸ் கட்சியினர் சமீபத்துப் போரில் வெற்றி பெற்றுத் தந்த ஸ்ரீமதி இந்திரா காந்தியின் கட்சிக்கே மக்கள் தங்கள் வாக்குகளைத் தர வேண்டும் என உரிமை கோருகின்றனர்.

வெற்றிக்குப் பூரண பாத்தியதையும் ஆள்கிற காங்கிரஸுக்கே சாரும் என்பது சற்றும் நியாயம் அல்ல. பாகிஸ்தானை எதிர்பாராமல் ஒருதலைப்பட்சமாகப் போரை நிறுத்தியதற்கு மட்டுமே ஸ்ரீமதி இந்திரா காந்தி சொந்த ஹோதாவில் தனிப் பாராட்டுக்குப் பாத்திரமாவாரேயன்றி, போரை வெற்றிகரமாக நடத்திய முழுப் பலனையும் அவருக்கே தருவதற்கில்லை.

'இந்தப் பிரதமர்தான் நமக்கு வெற்றி பெற்றுத் தந்தார்' என்று மக்களே கருதிச் சுயேச்சையாக அவரது கட்சிக்கு வோட்டுப் போடுவது வேறு விஷயம். ஆனால் அவரது கட்சிப் பிரசாரகர்கள் வெற்றியைச் சுட்டிக்காட்டி அதிலிருந்து தங்களுக்குத் தனியானதோர் ஆதாயம் பெறப் பார்ப்பது முற்றிலும் வேறு விஷயமாகும். பிரதமரின் கட்சி மட்டுமின்றி அக்கட்சிக்கு மாறான எல்லாக் கட்சிகளுமே யுத்த முயற்சிகளை முற்றிலும் ஆதரித்தன. எனவே, எந்த ஒரு கட்சியும் இந்த அம்சத்தைக் கொண்டு தனி உரிமை கேட்பதற்கில்லை. ஸ்ரீமதி சுசேதா கிருபளானி முதலியோர் இதனை எடுத்துக் காட்டி ஆட்சேபம் தெரிவித்திருப்பது மிகவும் நியாயம்.

தனிமனிதர் எவருக்கும், தனிக் கட்சி எதற்கும் வெற்றியில் விசேஷ உரிமை கோர இடமில்லை. நமது தரைப் படையும், கடற் படையும், விமானப் படையும், அவற்றின் தளபதிகளும் மட்டுமின்றி இந்திய மக்கள் அனைவரும் சேர்ந்தே வெற்றி பெற்றனர். அவர்கள் அனைவருக்குமே வெற்றிப் பெருமையில் சம பங்கு கேட்க உரிமை உண்டு. அதிகப்படி பங்கு எவருக்குமில்லை.

ஏழை மக்களைக் கவருகிற பிரசார மந்திரங்களுக்குப் புத்துருக் கொடுத்து ஆள்கிற கட்சியின் தேர்தல் பிரசாரகர்கள் கோஷிக்கத் தொடங்கிவிட்டனர். கோஷத்தினால் ஏழைமை தொலையாது. பொருளாதார அடிப்படையையே மாற்றினாலன்றி, நம் தேசத்தில் சுபிட்சமும், உற்பத்திப் பெருக்கும் ஏற்படுத்தி ஏழை மக்களை வளப்படுத்துவது இயலாத காரியம்.

உற்பத்திப் பெருக்கம் ஏற்பட வேண்டுமாயின் தொழில்கள் அபிவிருத்தி காண வேண்டும். மூலதனம் இல்லாமல் தொழில்களை அபிவிருத்தி செய்ய முடியாது என்பது நிதரிசனமான உண்மை. முதலீடு செய்கிறவர்கள் இல்லாமல் மூலதனம் கிடைக்காது என்பதும் அதே போல் நிதரிசனமான உண்மை. எனவே, முதலீட்டாளர்களை அழித்துவிட்டு முன்னேற்றம் காண முயல்வது முடியாத காரியம். சர்க்காரே சகல தொழில்களையும் எடுத்துக் கொண்டு நடத்துவதானால்தான் இப்படிச் செய்யலாம். சர்க்கார் ஒன்றே தொழில் நடத்துவது என்பது கம்யூனிஸம் தவிர வேறில்லை. அந்த நிலையில் மக்கள் யாவரும் அடிமைகளாக வேண்டியதுதான். சர்க்காருக்குத் தொழில் துறையில் அதிகப்படி அதிகாரம் தருவதை இன்று மக்கள் ஒருகாலும் ஏற்பதற்கில்லை. அதிகாரத்திலுள்ளவர்கள் தெய்வத்துக்குப் பயந்து நடப்பவர்களாக இருந்தால், அல்லது குறைந்த பட்சம் அக்கிரமமாக சுயநலனைப் பேணுபவர்களாகவாவது இல்லாமலிருந்தால், அவர்களிடம் ஓரளவு அதிக அதிகாரம் தரலாமோ, என்னவோ? இன்று இந்தியாவின் அதிகார பீடத்தினர் உள்ள நிலையில் இந்தத் திசையில் விஷப் பரீட்சை செய்து பார்ப்பதற்கே இல்லை. பிரசார மந்திரத்தால் ஏழைகளை ஏமாற்றி வோட்டுக்களைப் பெற்றுக் குவித்துவிடலாம். ஆனால் உண்மையாக மக்கள் வாழ்வை உயர்த்த வேண்டுமாயின் சர்க்காரின் பொருளாதார சிந்தனை அடியோடு மாறியாக வேண்டும். கண்ட்ரோல்களையும் கட்டுப்பாடுகளையும் நீக்க வேண்டும். உச்சவரம்பு

களை ரத்தாக்க வேண்டும். பெர்மிட் — லைசென்ஸ் ராஜ்யத்துக்கு மங்களம் பாட வேண்டும். சுதந்திரத் தொழில்களுக்கு உயிரளித்து, வளர்ச்சி காண வாய்ப்புத் தருவதே இன்று செய்ய வேண்டுவது.

இன்று ஆட்சியில் இருப்பவர்கள் தமது கொள்கைகளை மாற்றிக் கொள்வார்களெனத் தோன்றவில்லை. அவர்களுக்கு எப்படியேனும் தேர்தலில் வெற்றி கண்டு தங்களது அதிகாரத்தை நீடித்துக் கொள்வதிலேயேதான் முழுக் கவனமும் உள்ளதேயன்றி, தேசத்தின் முன்னேற்றத்தில் கருத்து இல்லை. தந்திரத்தாலேயே ஆட்சி நடத்துகிறார்கள்; விவேகத்தினால் அல்ல. உச்ச ஸ்தானங்களிலும்கூட பாப பயமேயின்றிச் செய்யப்படுகிற ஊழல்களைப் பற்றிக் கவலைப்படுவோரே அவர்களில் இல்லை. பக்தி போயிற்று, அதோடு பயமும் போயிற்று. பிரசார மந்திரங்களே படாடோபமாக நாட்டியமாடுகின்றன. சீதா தேவியை ஏமாற்றிய மாரீச மானைப் போல் மினுக்கிக் கொண்டு மக்களின் முன் பிரசார கோஷங்கள் தாண்டவமாடுகின்றன.

ஆண்டவன் நம்மைக் காப்பானாக!

(அடிப்படை: ராஜாஜி ''ஸ்வராஜ்யா''வில் எழுதியது)

ராஜாஜியின் கருத்துக்கள்

வங்க தேசத்துக்கு வாழ்த்து

வங்காள தேசத்தைச் சுற்றியுள்ள எட்டு நாடுகளும் அதனை அங்கீகரித்துள்ளன. வங்காள தேசத்தை ஸ்விட்ஜர்லாந்துபோல் செழிப்புள்ள நாடாக்க வேண்டும் என்ற உயரிய ஆர்வத்தைக் கொண்டிருக்கிறார் முஜிப்—உர்—ரஹ்மான். இந்த அபிலாஷை நடைமுறையாவதற்குத் தேவைப்படுகின்ற பரந்த மனப் போக்கையும், தன்னடக்கத்தையும், விவேகத்தையும் அவரது மக்களுக்கு ஆண்டவன் அருள்வானாக!

பூட்டோ செய்ய வேண்டியது

இந்தியாவுக்கு எதிராகத் தமது அண்டை முஸ்லீம் நாடுகளுடன் பகிரங்கமாகவோ ரகசியமாகவோ ராணுவ உடன்படிக்கைகள் செய்து கொள்வது பற்றித் திரு பூட்டோ எண்ணுவாராகில் இது நிச்சயமாக நல்லறிவுக்கு உகந்ததாகாது. அந்த அண்டை நாடுகள் பாகிஸ்தானுக்கு உதவி செய்வதாக முன் வந்தாலும் கூட, பொருளாதார ரீதியிலோ ராணுவ ரீதியிலோ கணிசமான ஸ்தூல உதவி எதுவும் தர அவற்றால் இயலாது. இந்த நடவடிக்கையின் ஒரே விளைவு இந்தியாவின் விரோதத்தைப் பெற்றுக் கொள்வதேயாகும். இப்போது எஞ்சியுள்ள பாகிஸ்தானுக்கான அறிவுசார்ந்த ஒரே வழி மேற்படி ஏற்பாட்டைக் கைவிட்டு, இந்தியாவை நட்பு நாடாக்கிக் கொள்வதேயாகும். நம்மிரு நாடுகளிடை நல்லெண்ணமும் நட்பும் உறுதிப்படுத்தப் பெற்றால், இரு நாடுகளின் பொருளாதாரமும் வளர்ச்சி காணும். முஸ்லீம் நாடுகள் பாகிஸ்தானிடமிருந்து எந்த லாபமும் பெறுவதற்கில்லை. பாகிஸ்தானும் இந்தியாவுமோ நல்லெண்ணத்தாலும், ஒத்துழைப்பாலும் பரஸ்பரம் பெரு லாபம் அடையும்.

சிலர் ஜோஸ்யம் சொல்வதுபோல் பாகிஸ்தானை மேற்கேயுள்ள முஸ்லீம் நாடுகளுடன் சமஷ்டி அடிப்படையில் இணைப்பதற்குத் தாம் எவ்வித முயற்சியும் செய்யவில்லை என்று ஜனாதிபதி பூட்டோ கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. அப்படி என்றேனும் ஒரு காலத்தில் பாகிஸ்தானை ஓர் அங்கமாகக் கொண்ட சமஷ்டி ஏதேனும் ஏற்படத்தான் வேண்டுமாயின், அது தேசப் பிரிவினைக்கு முன்பு இருந்ததுபோல் இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்த சமஷ்டியாகத்தான் இருக்கும்; பாகிஸ்தானும் முஸ்லீம் நாடுகளும் இணைந்த சமஷ்டியாக இராது என்றும் பூட்டோ பேசியிருக்கிறார். இவ்வாறு கூறியதால் யதார்த்தமாக மேற்கொள்ள வேண்டிய ஒரு முயற்சியைப் பற்றி பூட்டோ பேசியதாகாது. என்றேனும் ஏற்படக்கூடிய ஒரு சாத்தியக் கூற்றினைப் பிரஸ்தாபித்தார்; அவ்வளவே. இருப்பினும், உலக நாடுகளின் பொருளாதார நெரிசல் காரணமாக, இவ்விதமான இந்திய—பாகிஸ்தான் சமஷ்டி உண்மையிலேயே ஏற்படலாம் எனக் கற்பனை செய்து மகிழ்கிறேன். ஆயினும் இந்த யோசனையை இந்தியா ஒருகாலும் முன்மொழியக் கூடாது. அவ்விதம் செய்வது நமக்கு மண்ணாசை இருப்பதாகத் தவறான எண்ணத்தை உண்டாக்கும். பாகிஸ்தானுக்கு நம்மிடமுள்ள அவநம்பிக்கை அதிகமாகும். இந்தக் கருத்து என்றைக்காவது ஆலோசனைக்காக வெளியிடப்படுமாயின், பாகிஸ்தானே அதனை முன்மொழிய வேண்டும்.

சொத்து போனால் சுதந்திரமே போகும்

பிரஜைகள் தாமாகச் சம்பாதித்த, அல்லது பிதுரார்ஜிதமாகப் பெற்ற சொத்துக்களைச் சர்க்கார் பறிமுதல் செய்யலாமெனில் சுதந்திர வாழ்முறையே போய்விட்டதாகத்தான் அதற்குப் பொருள். சுதந்திரமாக இயங்கும் நீதி மன்றத்தின் ஆணை எல்லைக்கு உட்பட்டு நியாயமான காரணங்களுக்கு மட்டுமே தனியாரின் சொத்துக்களைச் சர்க்கார் ஆர்ஜிதம் செய்ய அனுமதிக்கலாம். அரசியல் மூல சாஸனத்தில் இவ்விதமான உத்தரவாதத்தை ஸ்ரீ ஜவாஹர்லால் நேருவும் மற்றவர்களும் உள்ளடக்கியதற்கு நிரம்பக் காரணமுண்டு. இப்போது பத்திரிகைத்

துறையினரும், எழுத்தாளரும், பேச்சாளரும் எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஆகியன குறித்தே அதிக கவனம் செலுத்து கிறார்கள். எழுதவும் பேசவும் சுதந்திரம் பெறுவதைவிட, சொத்தைக் காத்துக் கொள் ளும் சுதந்திரமே மனித வாழ்வுக்கு மிக அவசியமாகும். மக்கள் தாங்கள் சம்பாதித் துச் சேர்த்த, அல்லது பிதுரார்ஜிதமாகப் பெற்ற சொத்தில் உரிமை கொண்டிருப்பது சுதந்திர வாழ்வுக்கு ஜீவாதாரமாகும். இல்லா விடில் அது அடிமை வாழ்வேயாகும். தேர்தல் அறிக்கைகளிலோ, மேடைப் பேச்சுக்களிலோ 'சொத்துரிமையைப் பறிக்க மாட்டோம்' என்று மேலெழுந்தவாரியாக 'உறுதி' கூறிப் பயனில்லை. இதுவரை சட்டப்படி சாஸனம் தந்த காப்பு இனியும் மக்களுக்குக் கிடைக்க வேண்டும்.

தென் வியட்நாம் தகராறு

வட வியட்நாமில் உள்ள இந்திய தூதரகத்தின் அந்தஸ்தை உயர்த்தியதால் தென் வியட்நாமுக்கு நம்மீது பெருத்த மனத்தாங்கல் ஏற்பட்டு விட்டது. தூதரக அந்தஸ்தை உயர்த்தியதில் உள்ளர்த்தம் ஏது மில்லை என்றும், இது சாதாரண ராஜரீகக் காரியம்தான் என்றும் இந்தியத் தரப்பில் விளக்கங்கள் தரப்பட்டும்கூட, இச்செய்கை வட வியட்நாமுக்கு தார்மிக ஆதரவு தருவதே யாகும் என்று தென் வியட்நாம் கருதுகிறது. இதன் ஓர் அடையாளமாக அங்கு வாலி பர்கள் ஸ்ரீமதி இந்திராகாந்திக்குக் கொடும் பாவி கட்டிக் கொளுத்தி யிருக்கிறார்கள். சைகோனில் உள்ள இந்திய வியாபாரிகள் கடந்த பல நாட்களாக மக்களின் தாக்குத லுக்குப் பயந்து தமது கடைகளை அடைத் திருக்கிறார்கள். சுதந்திரவாழ் முறையை மேற் கொண்டுள்ள தெற்கு வியட்நாமிடம் நமக்கு அநுதாபம் உண்டு என்பதையும், அதனைக் கம்யூனிஸ ஆதிக்கத்தில் பலவந்தமாகக் கொண்டு வரப் பார்க்கும் ஹனோயிடமும் வியட்காங்கிடமும் நமக்கு அபிமானம் இல்லை என்பதையும் ஏதேனும் ஒருவிதத்தில் இந்தியா அழுத்தம் திருத்தமாகத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம். ஸைகோன் ஆர்ப் பாட்டத்துக்கு ஸ்ரீ நிக்ஸன்தான் காரணஸ்தர் என்று பழியை அவர் மீது தள்ளுவதை எவரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

இரு பெரும் அபத்தங்கள்

உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டு மானால் இயந்திர முறைச் சாகுபடியை மேற் கொள்ள வேண்டும் என்று ஒருபுறத்தில் சொல்லிக் கொண்டே, மறுபுறத்தில் இயந்திர முதலீட்டைத் தாங்கவொண்ணாத அளவுக்கு நில வரம்புகளைக் குறைப்பது ஓர் அபத்தக் கொள்கையாகும். நில உடைமைகளின் அளவை இவ்விதம் உற்பத்திப் பெருக்கத் துக்கு உதவாத வகையில் குறைத்து வருகிற வர்கள், சர்க்கார் தொழிலகங்கள் பலவற்றை ஒன்று சேர்த்து ராட்சத வடிவாக்க எண்ணு வது மற்றோர் அபத்தம். இப்போதுள்ள பெரிய அரசாங்கத் தொழில் நிறுவனங்கள் லாபகரமாகச் செயல்படவில்லை என்பதால் அவற்றை ஒன்று திரட்டி ஒரே நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வருவது, ஒருகாலும் பிரச்னைக் குத் தீர்வு ஆகாது. இப்போதுள்ள சர்க்கார் தொழிலகம் ஒவ்வொன்றையும் தனித் தனி அடிப்படையில் கண்காணித்து, அதனதன் நிருவாகத்தைச் செப்பம் செய்வதே அவற்றை லாபகரமாக்க வழி. இயற்கையான தொடர்பு அற்ற பல உற்பத்தி சாலைகளை ஒரு ராட்சதக் கூட்டாகச் சேர்ப்பதால் பிரச்னை மேலும் குழப்பமடையும். தனித் தனி நிறு வனங்களின் தவறுகளை மறைக்க மட்டுமே இந்த ஏற்பாடு உதவும். பெரிய நிலங்களைத் துண்டாடுவதும், அதே போதில் தொழில் நிறுவனங்களைப் பெரிய அளவில் ஒன்று சேர்க்க முனைவதும் விசித்திரமான மனக் கோளாறையே காட்டுகிறது.



ஆலயங்களின் தூய்மை



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசாரிய ஸ்வாமிகள்

பேட்டைக்குப் பேட்டை, காலனிக்குக் காலனி புதுக் கோயில்கள் கட்டுகிறார்கள். எங்கே பார்த்தாலும் பழைய கோயில்களையும் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்கிறார்கள். புதுக் கோயில், பழைய கோயில் கும்பாபிஷேகங்களுக்காக என்னிடம் பலர் வந்து யோசனையும், பிரசாதமும் கேட்டபடி இருக்கிறார்கள். இது எனக்கு நிரம்ப சந்தோஷமாகத்தான் இருக்கிறது.

அதே சமயத்தில் என் மனசுக்கு நிரம்ப வருத்தம் தருகிற விஷயங்களையும் பல பக்தர்கள் வந்து தெரிவித்துக் கொள்கிறார்கள். வேறு யாரிடமும் சொல்லிக் கொள்ள முடியாமல், ஸ்வாமிகளிடம் சொல்லலாம் என்று என்னிடம் வந்து முறையிடுகிறார்கள். மற்றவர்கள் வெளியே சொல்லத் தயங்குகிற இந்த விஷயங்களை நானும்கூடச் சொல்லாமல் இருக்கக் கூடாது. எனவே, மனசுவிட்டு இப்போது சொல்கிறேன்:

கோயில்களின் சூழ்நிலை அமைதியாக இருக்க வேண்டும். பகவத் ஸ்மரணை தவிர மற்ற நினைவுகள் மறந்து விடும்படியாக இருக்க வேண்டும். ஆனால் இப்போது என்ன பார்க்கிறோம்? பெரும்பாலான க்ஷேத்திரங்களில் கோயிலைச் சுற்றி ஏகப்பட்ட கடைகள் வந்து விட்டன. டீக்கடை, சிகரெட் கடை எதுவுமே பாக்கியில்லை. கோயில் அதிகாரிகளே கோயிலுக்கு வருமானம் கிடைக்கிறது என்பதால் இந்த இடங்களை வாடகைக்குக் கொடுக்கிறார்கள் — அதாவது, அநேகமாகக் கோயிலையே வாடகைக்குக் கொடுத்திருப்பதாகச் சொல்லலாம். இம்மாதிரியான சூழ்நிலையில் தெய்வ சாந்நித்தியத்தை நாம் கிரகித்துக் கொள்கிற சக்தி குறைகிறது. நம் பக்தி சுற்றுச் சூழலால் குறைகிறது.

ஆபீஸ் கட்டிடங்கள், 'காட்டேஜ்'கள் எல்லாம் இப்போது பல க்ஷேத்திரங்களில் ஏராளமாக முளைத்து விட்டன. அங்கெல்லாம் தெய்வ சம்பந்தமற்ற காரியங்கள் நிறைய நடக்கின்றன. இது சாந்நித்தியத்தைப் பாதிக்கிறது. ஏதோ எட்டாக் கையில் இருக்கிற கோயில்களில்தான் விச்ராந்தியான சூழல் உள்ளது. அபிவிருத்தி என்ற பெயரில் இவற்றிலும் அதிகாரிகள் அநாகரிகத்தைப் புகுத்தி விடப் போகிறார்களே என்று பயமாக இருக்கிறது.

இப்போது கோயில்களுக்குத் தனித் தனி நிர்வாகம் இல்லாமல் ஒரே சர்க்கார் நிர்வாகத்தில் இருப்பதால் அவர்களுக்குப் பொது ஜனங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். துரதிருஷ்டவசமாக, ஆலய ஆபீசர்கள் ஏதாவதொரு நல்ல காரியத்தை ஆரம்பித்து முடிக்கு முன்பே வேறு ஊருக்கு மாற்றப்பட்டு விடுகிறார்கள். 'செய்கிற கா^ரி^யத்தைப் பூர்த்தி செய்து பலனைப் பார்க்கலாம்' என்கிற உற்சாகம் இருந்தால்தான் அதிகாரிகளிடமிருந்து சிறப்பான பணியை எதிர்பார்க்க முடியும்.

ஆலயங்களின் உட்புறமும், சூழ்நிலையும் சுத்தமாக இல்லாதவரையில் ஆஸ்திக காரியம் எத்தனைதான் நடந்தாலும் நாம் திருப்திப்படுவதற்கில்லை. பிரஜைகள் இவ்விஷயத்தில் தீவிரமான கவனம் செலுத்தினால், அதிகாரிகளுக்கும் சர்க்காருக்கும் பொறுப்புணர்ச்சி அதிகரித்து ஆவன செய்வார்கள்.

ஆலயங்களுக்கு உள்ளேயே நடக்கிற அபசாரங்களை என்னைத் தவிர யாரும் எடுத்துச் சொல்ல மாட்டார்கள் போலிருக்கிறது. அதையும் நானே சொல்கிறேன்: இப்போதெல்லாம் காலேஜ் பெண்கள், டிரெயினிங் ஸ்கூல் பெண்கள் என்று பலர் கூட்டம் கூட்டமாகக் கோவில்களுக்கு பஸ்கள் அமர்த்திக் கொண்டு வருகிறார்கள். அவர்களில் எத்தனையோ பேர் விலகியிருக்க வேண்டிய காலத்திலும் தரிசனத்துக்கு வந்துவிடுகிறார்கள். இப்படிச் செய்வது தோஷம் என்று தெரியாததாலேயே பெரும்பாலும் கோயிலுக்கு வந்து விடுகிறார்கள். முன்னெல்லாம் 'வீட்டு விலக்கு' என்று எவர்களை வீடுகளிலேயே தனித்துவைத்தார்களோ அவர்கள் இப்போது கோயிலிலும் கூட விலக்கு இல்லாமல் பிரவேசித்து விடுகிறார்கள். 'ஸ்வாமிக்கு ஏது தீட்டு?' என்று சீர்திருத்தக்காரர்கள் நான் சொல்வதை ஆட்சேபிக்கலாம். தீட்டு இல்லாத ஸ்வாமி எங்கேயும் இருக்கிறார். அவரைக் கோயிலில்தான் வந்து தரிசிக்க வேண்டுமென்பதில்லையே? சாஸ்திரப் பிரகாரம் ஸ்வாமியின் சாந்நித்தியத்தைக் கிரகித்துத் தரும் கோயில்களில், அந்த சாஸ்திரங்கள் சொன்ன விதிப்படிதான் இறைவனைத் தரிசிக்க வேண்டும். இந்த விதிகளை மீறுவதால்தான் பல மகா க்ஷேத்திரங்களில் விபத்து, விபரீதம் எல்லாம் ஏற்படுகின்றன என்பது என் அபிப்பிராயம்.

காட்டேஜ், எக்ஸ்கர்ஷன் எல்லாமே அநேக க்ஷேத்திரங்களில் பக்தியைவிட, உல்லாசக் கேளிக்கைகளைத்தான் அதிகப்படுத்தியிருக்கின்றன. மொத்தத்தில், நம் வீட்டில் நம்மால் சகிக்க முடியாத அபசாரங்களை சாக்ஷாத் வேங்கடரமண ஸ்வாமி சந்நிதியிலும் மற்றும் பல ஸ்வாமி சந்நிதிகளிலும் இழைக்கிறோம்.

இது எனக்கு நன்றாகத் தெரிந்தும், அதைச் சொல்லாமல் வெறுமனே இருந்தேனாயின், அதுவே எல்லாவற்றிலும் பெரிய அபசாரம் என்பதால் என் மனசிலிருந்ததைச் சொன்னேன். உங்களிடம் சொல்வதாக மட்டும் நினைக்காமல், சாக்ஷாத் வேங்கடேசுவர ஸ்வாமியிடமே பிரார்த்தனையோடு சொல்கிறேன். இந்த அபசாரங்களைத் தடுத்து நிறுத்துவதில் ஆஸ்திக மகாஜனங்கள் கண்ணும் கருத்துமாக இருக்க ஸ்வாமி அருள்வாராக!



இரு இல்லத்தரசிகளின் சந்திப்பு

இவ் வாரம் உரையாடலில் பங்கு பெறுபவர்கள் :

ஸ்ரீமதி சுந்தரவதனா பாலசுப்பிரமணியன்
ஸ்ரீமதி ரெஜினா ஜெயராஜ்

அரும்பாக்கம் ஜெயம்மாள் தெருவின் மையப் பகுதி. 'தமிழகம்' என்ற பெயர்ப் பலகை கொண்ட புதிய வீட்டின் முகப்பில் தமிழறிஞர் டாக்டர் பாலசுப்பிரமணியன், கைக்கடிகாரத்தையும், தெருவையும் கண்ணோட்டமிட்டபடி நின்றார். சில நிமிஷங்களில் ஸ்கூட்டரோட்டிக் கொண்டு தம் மனைவியுடன் வந்து சேர்ந்தார் ஓவியர் திரு ஜெயராஜ். 'வணக்கம்! வாங்க' எனக் கனிந்த குரலில் திரு பாலசுப்பிரமணியன் கைகூப்பி வரவேற்று, கூடத்துக்குள் அழைத்துச் சென்றார். இல்லத்தரசிகள் இருவரும் அறிமுகமாயினர்.

ஸ்ரீமதி சுந்தரவதனா பாலசுப்பிரமணியன்: குழந்தைங்களை அழைச்சிண்டு வரல்லீங்களா? பையனுக்கு என்ன பெயர்? பெண்ணுக்கு என்ன பெயர்?

ஸ்ரீமதி ரெஜினா ஜெயராஜ்: மூத்தவன் பையன். அவருக்கு வால்ட் டிஸ்னியிடம் ரொம்ப பக்தி; அதனால் பையனுக்கு 'டிஸ்னி' என்றே பெயர் வைத்திருக்கிறார். பெண்ணுக்குப் பெயர் வைக்கத்தான் ஒரே குழப்பம். என்ன பெயர் வைக்கிறதுன்னு முடிவாகல்லே. 'பாப்டிஸ்டு'க்குப் போறதுக்குள்ளே பெயர் வைக்கணும்னு குருட்டாம் போக்கிலே, 'ஹில்டா' என்ற பெயரை வைச்சிட்டோம்! உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்? எல்லாம் தமிழ்ப் பெயராக இருக்குமே?

சு. வ. பா.: மூன்று பிள்ளைகள். சேரன், வளவன், செழியன்! பெண் பிறக்கவில்லையே என்று குறைப்படுகிறார்!

ரெ. ஜெ.: உங்கள் கணவர் யாரிடம் தமிழ் இலக்கியம் கற்றார்?

சு.வ.பா.: டாக்டர் மு. வரதராசனாரின் மாணவர்களுள் இவரும் ஒருவர். பச்சையப்பன் கல்லூரியில்தான் படித்தார். உங்கள் கணவர் எந்த ஊர் ஓவியப் பள்ளியில் படித்துத் தேறினார்?


ரெ. ஜெ.: அவர் பள்ளிக்கூடம் போய் ஓவியம் கற்கவில்லை! மதுரையில் பி. ஏ. படிச்சிண்டிருந்தபோதே, வீட்டில் ஏராளமாகப் படம் போட்டுக் கொண்டிருந்தாராம். 'ரொம்ப அழகாகப் படம் போடறீங்களே, பத்திரிகைகளுக்கு அனுப்பலாமே...' என்று பலர் சொன்னார்களாம். படங்களை எழுதிக் கொண்டு மெட்ராஸ் வந்தாங்க. குமுதம் ஆசிரியர் திரு எஸ். ஏ. பி. அண்ணாமலையைச் சந்திச்சு, எழுதின படங்களைக் காட்டினார். முதன் முதல் திரு ரா. கி. ரங்கராஜன் கதைக்குப் படம் போடச் சொல்லிக் கொடுத்தார்களாம்.


சு. வ. பா.: பி. ஏ. படிப்பு என்னவாயிற்று?

ரெ.ஜெ.: பட்டம் வாங்கவில்லே!... ஆனால் 'ஓவியர்' என்ற பட்டம் கிடைத்துவிட்டது ! உங்கள் கணவர் டாக்டர் பட்டம் வாங்கியிருக்கிறாரே, தமிழில் எதைப் பற்றி ஆராய்ச்சி செய்தார் ?

சு. வ. பா.: 'சேரநாட்டு செந்தமிழ் இலக்கிய'த்துக்காக 'எம். டி.' பட்டமும், 'குறுந்தொகை' ஆராய்ச்சிக்காக 'எம். லிட்.' பட்டமும் பெற்றார்.

'சித்திரமும் கைப் பழக்கம்' என்பதை நிரூபிப்பது போல, வீட்டிலே படங்கள் போட்டே வளர்ந்து பத்திரிகைகளுக்கும் புத்தகங்களுக்கும் இன்று ஓவியம் தீட்டிக் கொண்டிருக்கிறார்,


திரு பாலசுப்பிரமணியன்



திரு ஜெயராஜ்

ரசிகர்களும் பாடிய கச்சேரி!

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் அண்மையில் நிகழ்த்திய அற்புதமான கச்சேரியில் ஒரு தனிச் சிறப்பு.

ரசிகர்களின் கோரிக்கைக்கு இணங்க அவர் ராம்துன் பாடினார்.

நவராணாவின் ஆதரவில் மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் அரங்கில் நடைபெற்ற இந்தக் கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருந்த ரசிகர்கள் பலர் ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் கடைசியில் ராம்துன் பாட வேண்டும் என்று கோரினார்கள். அவர்களது விருப்பத்துக்கு இசைந்தார் ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள். ரசிகர்களும் சேர்ந்து பாடலாம் என்று ஸ்ரீமதி ராதா விசுவநாதன் 'மைக்'கில் அறிவித்தார்.



மேடை விளக்குகள் மட்டும் ஒளி சிந்த மற்ற எல்லா விளக்குகளும் அணைக்கப்படவே அடக்கமான அமைதிச் சூழல் உருவாயிற்று. காந்திஜி அநுதினமும் தமது பிரார்த்தனையில் பாடிய ரகுபதி ராகவ ராஜாராம் என்ற கீதம் எம். எஸ்ஸின் இனிய குரலில் கணீரென எழுந்தது. அதையே ரசிகர்கள் அடிக்கு அடி கருதி பிசகாமல் ஒரு குரலாய் ஒன்றித் திரும்பப் பாடியதானது மெய்சிலிர்க்கும் அனுபவமாயிருந்தது. ரசிகப் பெருமக்களின் இறையுணர்வுக்கு ஸ்ரீமதி எம். எஸ். கரம் கூப்பி வணக்கம் செலுத்தி விட்டு, காஞ்சி பெரியவர்கள் இயற்றிய 'மைத்ரீம் பஜத' பாடிக் கச்சேரியை முடித்தார்.

அது சரி, ராம்துன் பாடுமாறு கேட்டுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ரசிகர்களில் சிலருக்கு எப்படி ஏற்பட்டது?

மா ஆனந்தமயீ அவர்கள் கல்கி காரியாலயப் பூங்காவில் அவருக்கெனப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட சிறு குடிலில் சில தினங்கள் தங்கி யிருந்தபோது நடைபெற்ற நாம சங்கீர்த்தன நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட சிலர், மேற்படி கச்சேரிக்கும் வந்திருக்கிறார்கள். தாங்கள் அங்கு பெற்ற அரிய அனுபவத்தை இங்கு குழுமியிருந்த ரசிகர்களில் சிலருக்கும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உடனே அந்தச் சிலர், பக்தி ரசத்தைத் தாமும் பருக வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்தக் கோரிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்!

— குட்டி கிருஷ்ணன்

உங்கள் கணவர். அவருக்கு நீங்கள் எந்த வகையில் உதவி செய்கிறீர்கள்?

ரெ. ஜெ.: பத்திரிகை ஆபீஸ்களிலிருந்து படங்கள் போடக் கதைகளும், தொடர் கதைகளும் வரும். எல்லாவற்றையும் முதலில் என்னைப் படிக்கச் சொல்லுவார். அவற்றில் படம் போடக்கூடிய சில கட்டங்களை எடுத்துச் சொல்லுவேன். அவரும் கதைகளைப் படித்துப் பார்ப்பார். சில சமயங்களில் நான் சொன்ன கட்டத்தையே ஒரு கதையில் அவரும் தேர்ந்தெடுப்பார். சில சமயங்களில் வாஷ் டிராயிங் ஸ்கெச்சில் காகிதத்தில் கறுப்பு வர்ணம் தீட்டி உதவுவேன்.... சித்திரம் போடத் தெரியாது!

சு. வ. பா.: உங்கள் வீட்டுக்காரர் போடும் படங்களில் எல்லாப் பெண்களுமே 'கவர்ச்சி'யோடுதான் இருக்கிறார்கள்.... இதைப் பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ரெ.ஜெ.: கதைகளில் வரும் கதாநாயகிகளின் வர்ணனைக்கு ஏற்றாற் போலத்தான் படம் போடுகிறார். அதென்னவோ அந்த மாதிரி நவநாகரிகப் பெண்களைக் கதாநாயகிகளாகக் கொண்ட கதைகளைத்தான் இவருக்கு அதிகமாகப் படம் போடச் சொல்லி அனுப்புகிறார்கள். பத்திரிகை ஆசிரியர்கள், 'இந்தக் கதையில் வரும் இந்தக் கட்டத்துக்கு இப்படி ஒரு படம் வேண்டும்' எனச் சில சமயம் குறிப்பு அனுப்புவார்கள். அந்தக் குறிப்புப் படி போடுவார்.

(இந்தக் கட்டத்தில் பாலசுப்பிரமணியன் ஒரு விளக்கம் கேட்கிறார்.)

பால: மிஸ்டர் ஜெயராஜ்! என்னுடைய சந்தேகமும் கொஞ்சம் இதில் இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் கதையின் கதாநாயகி கவர்ச்சிக் கன்னியாக இல்லாவிட்டாலும் நீங்கள் படங்களைக் கவர்ச்சிக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துப் போடுகிறீர்கள் என்று நான் கருதுகிறேன். இதற்குச் சில உதாரணங்களை நான் கூற முடியும்.

ஜெயராஜ்: பத்திரிகை ஆசிரியரோ அல்லது புத்தகப் பிரசுரகர்த்தரோ கேட்டுக் கொள்ளும் முறையில்தான் நான் பெரும்பாலும் படங்கள் போடுகிறேன். என் படங்களைப் பற்றி ஒரு சிறு விளக்கம் தர விரும்புகிறேன். பெண்கள் படமாக இருக்கட்டும், ஆண்கள் படமாக இருக்கட்டும். தேக அமைப்பு அளவுகள் சரிதமாக இருக்க வேண்டும் என்றுதான் முதலில் நினைப்பேன். அதில் குறை காண முடியாதபடி வரைவேன். பத்திரிகைகளில் கதையோ, தொடர் கதையோ வெளியிடும் போது, வாசகர்களை ஈர்ப்பதற்காகவே சித்திரங்கள் வரையச் சொல்கிறார்கள். கதைகளில் நாவல்களில் கவர்ச்சி இருக்கும்போது, சித்திரங்களில் இருப்பது தவறா? 'என் லெட்டர் ஹெட்'டில் நான் யாருடைய படங்களைப் போட்டிருக்கிறேன், தெரியுமா? 'குமுத'த்தில் நான் வரைந்த 'சீதாப் பாட்டி — அப்புசாமி' ஜோடியின் 'லைன் டிராயிங்கை'த்தான் பொறித்திருக்கிறேன்!

சு.வ.பா.: தொடர்கதைகளிலும், சிறு கதைகளில் வரும் யுவதிகளிடம் 'லேடஸ்ட் பாஷன்' உடையலங்காரம், நகையலங்காரம், சிகை அலங்காரம் தென்படுகின்றனவே... உங்கள் கணவர் இவற்றை எங்கே பார்த்து வைத்துக் கொள்கிறார்?

ரெ.ஜெ.: வேறு எங்கே! சபையர், ஆனந்த் தியேட்டர்களிலும், கல்லூரிகளில் நடைபெறும் விழாக்களிலும் காணப்படும் இளம் பெண்களிடம்தான்! ரொம்ப ஃபாஷனாக அலங்காரம் செய்துகொள்ளும் பெண் யாராவது தென்பட்டால், நானே இவரை அந்தப் பெண்ணிடம் காணும் உடையலங்காரத்தைக் கவனிக்க வைப்பேன்!

('பரவாயில்லையே, பொறிக!' என்ற குரல் எழும்ப சிரிப்பொலியும் கேட்டது!)

சு.வ.பா.: கணவரின் ஓவியத் திறனை நீங்கள் இப்படி வளர்க்கிறீர்களே.... உங்களை ஓவியமாக எழுதியிருக்கிறாரா?

ரெ.ஜெ.: அதை ஏன் கேட்கிறீர்கள்....! திருமணத்துக்குமுன் அவரது படம் ஒன்றிரண்டுதான் பார்த்திருக்கிறேன். திருமணமானதும், இளம் மனைவிக்கு மற்றவர்கள் மாதிரி இவர் கடிதங்கள் எழுதவில்லை! தினமும் என் உருவங்களை வெவ்வேறு கோணத்தில் வரைந்து உறையிலிட்டு அனுப்பினார்...

ஒரு வாரப் பத்திரிகையின் அட்டைப் படத்தில் என்னையே தீட்டிவிட்டார்! அந்த வாரம் முழுதும் தோழிகள் கேள்விகளால் என்னைத் துளைத்தவண்ணம் இருந்தனர். அது சரி, நம் தமிழ் நாட்டு கவர்னருக்குத் தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுப்பது உங்கள் கணவர்தானே? ரொம்ப ஆர்வத்தோடு கவர்னர் கற்றுக் கொள்கிறாராமே?

(திரு பாலசுப்பிரமணியன் இந்தக் கட்டத்தில் பேசத் தொடங்கினார்.)

பால: தமிழ் நாடு கவர்னர், தமது தினசரி முக்கிய நிகழ்ச்சிகளில், தமிழ் கற்றுக் கொள்வதைத்தான் முதலாவதாக வைத்திருக்கிறார். ஒரு நாள்கூடத் தமிழ்ப் பாடம் கற்கத் தவறுவதில்லை. வெளியூர் சென்றால்தான் பாடம் இல்லை....ஒரு நாள் ராஜாஜி ஹாலில் இரவு பன்னிரண்டு மணி வரையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு ராஜ்பவன் திரும்பினார். நான் மறுநாள் காலை அவருக்குப் படிக்க அவகாசம் இருக்காது என நினைத்தேன். என்னை வியப்பில் ஆழ்த்துவதுபோல் மறுநாளும் வழக்கம்போல் காலை ஏழரைக்குப் பாடம் கற்கத் தயாராகி விட்டார். நான் சில பயிற்சிப் பாடங்கள் கொடுத்ததைக்கூட இரவு படுக்குமுன்பே எழுதி முடித்துவிட்டிருந்தார்!

(இந்த அளவில் உரையாடல் முடிவுற்றது.)

உரையாடல் தொகுப்பு: **ஏ. சுவாமிநாதன்**



மதுசாரம்

ராஜாஜி

எல்லாவித மதுபானங்களிலுமுள்ள விசேஷ குணம் போதை. இதற்குக் காரணம் அப்பானங்களில் உள்ள மதுசாரம்தான்.

மனிதனுடைய உணர்ச்சி, புத்தி, ஞாபகம், விவேகம், தேகத்தின் அங்கங்களை நடத்தும் சக்தி இவைகளுக்கெல்லாம் மூலஸ்தானம் மூளையாகும்.

இந்த மூளையானது தன் இயற்கையமைப்பை இழந்து, தான் செய்ய வேண்டிய வேலையைச் சரிவரச் செய்யும் சக்தியற்றுத் தடுமாறுவதற்குப் பெயர்தான் போதை.

ஒருவன் எவ்வளவு புத்திக் குறைவான மனிதனானாலும், சாதாரணமாய் அவனுடைய மூளை சுபாவக் கிரமம் தவறாமல் வேலை செய்யும். ஆனால் ஒருவன் எவ்வளவு புத்திசாலியானாலும் அவனுக்குப் போதை உண்டாகிவிட்டால் கீழ் மேல் தெரியாமல் தடுமாறுவான்.

சாதாரண இயந்திரக் கல்லானாலும் அச்சு சரியாய் நின்றால் அது தன் வேலையைச் செய்யும். ஆனால் எவ்வளவு உயர்ந்த இயந்திரமாயிருந்த போதிலும் சக்கரங்கள் கெட்டிருந்தால் வேலை செய்யாதல்லவா?

மதுசாரம் ஒருவித விஷம். அந்த விஷம் ரத்தத்துடன் கலந்து மூளைக்குச் செல்கிறது. அங்கே நுட்பமான நரம்பு ஸ்தானங்களையும், தேகத்தை யெல்லாம் நடத்தும் மின்சார ஜீவசக்தியையும் விவேகம் என்னும் தெய்விக சக்திக்கு இருப்பிடமான கேந்திரத்தையும் அது கெடுத்து விடுகிறது.

இதனால்தான் மதுபானம் செய்த மனிதனுடைய எண்ணமும், பேச்சும், செயலும் மதுசார விஷம் ஏறிய அளவுக்கு இயற்கை வழி தவறிச் செல்கின்றன. ஆனால் மனிதனிடத்தில் இயற்கையாகவுள்ள ஜீவசக்தி முழுதும் உடனே தோல்வியடைவதில்லை. இந்த ஜீவசக்தியானது மதுசார விஷத்துடன் போர் செய்து வென்று மனிதனுடைய மூளையை இயற்கை நிலைக்குக் கொண்டு வரும். இதனால்தான் போதை தெளிகிறது.

ஆனால் இப்படி எவ்வளவு காலம்தான் அக்கொடிய விஷத்தை எதிர்த்து நின்று போர் செய்ய முடியும்? நாளடைவில் இயற்கைச் சக்திக்கும் பலம் குறைந்து போகும். அதன் பின்னர் உள்ளே செல்லும் மதுசாரம் தீராத நோய்களை உண்டாக்கும்.

கள்ளு, சாராயம், பிராந்தி, விஸ்கி முதலிய பானங்கள் எல்லாம் நரம்புத் தளர்ச்சி உண்டாக்கும். இவைகளால் தேகத்துக்குச் சக்தி உண்டாகுமென்று சாதாரண ஜனங்கள் நம்புவது முற்றிலும் தவறு. குடித்தவுடனே உண்டாகும் உற்சாகம் ஒரு மோசடி. அது சக்தியின் அடையாளமல்ல.

மனத்தில் தோன்றும் எண்ணங்களையும், பேச்சையும் செயலையும் அடக்கியாண்டு, வேண்டிய துறைகளில் செலுத்துவது மதி. இந்த மதியை முதலில் மதுசார விஷம் தாக்குகிறது.

எஜமானன் வீட்டில் இல்லாமற் போனால் வேலைக்காரர்கள் கூத்தாடி (விளையாடி) வேண்டியதைச் செய்வார்கள்.

உபாத்தியாயர் தூங்கினால் குழந்தைகள் கொண்டாட்டமாய்த் தடையின்றி விளையாடுவார்கள்.

இம்மாதிரிதான் மதுசார விஷம் மூளைக்கு ஏறி, மதி தன் வேலையைச் செய்ய முடியாமல் தடுமாறிப் போனதும், மதியின் வேலைக்காரர்களான நரம்புகள் ஒழுங்கும் கட்டுப்பாடும் இன்றி இஷ்டப்படி கூத்தாடும். இதைத்தான் உற்சாகம் என்று நாம் தவறாக எண்ணுகிறோம். நாளாக ஆக, விஷம் அதிகமாக ஏறி எல்லா நரம்புகளும் தளர்ச்சியடைந்து விடுகின்றன.

''விமோசனம்'' மாதப்பத்திரிகை

தொகுதி 1, பகுதி 8 (1929)

நன்றி: **'குமரி மலர்'**

அம்மா

ரா. கணபதி

17. பட்டாபிஷேகமும் சந்நியாசமும்

அம்பிகை; பகவதி; கல்வித் தெய்வமும் செல்வத் தெய்வமும் வழிபடும் கலியாணி; கல்பகக் கொடியாக வேண்டியன வழங்கும் அழகி; கைலாசநாதனுக்கு அன்பானவள்; வேதாந்தத்தால் விளக்குறும் வைபவம் பொருந்தியவள்; ஞானிகளின் உள்ளத்தில் உலக அநுக்கிரகம் என்ற செம்மையைச் செய்பவள்; ஸ்ரீசக்ரத்தில் மணிபீடத்தில் எழுந்தருளுபவள்; இப்படிப்பட்ட ஸ்ரீ ராஜராஜேசுவரி மாதாவை வணங்குகிறேன்.

—'வந்தே மாதரம்' எனத் தொடங்கும் ஆதிசங்கரர் சுலோகம்

'கணவனே கண்கண்ட தெய்வம்' என்பது பொது வழக்கு. எல்லாப் பெண்களுமே பதியைத் தெய்வமாகக் கொள்ள வேண்டும் என்பது பாரத மரபு. சாரதையின் விஷயத்தில் இது வெறும் உபசாரச் சொற்றொடராக இல்லை. மெய்யாலுமே 'இவர் தெய்வ அவதாரம்' என்று உணர்ந்து பயபக்தியுடன் கணவரை வணங்கிப் பூஜித்தாள். அவளது இயற்கையான அடக்கமும், நாணமும், பணிவும் கணவர் முன் சிகரமேறி விடும். அப்படிப்பட்டவள்தான் அவதார புருஷன் வணங்கிப் பூஜிக்க வேண்டிய ஸ்ரீ ராஜராஜேசுவரியாக வந்தமர்ந்தாள் கம்பீரமாக.

அவள் தன்னை வேறுவிதமாக எண்ணிக் கொள்ளவில்லை.

அவரும் அவளை வேறுவிதமாக எண்ணவில்லை.

இருந்தாலும் சாஸ்திரப் பிரகாரம் விக்கிரகத்திலும் யந்திரத்திலும் செய்வதுபோல் அந்த ராஜ ராஜேசுவரியினுள் ராஜராஜேசுவரியைப் பிராணப் பிரதிஷ்டை செய்தார்.

கலசத்திலிருந்து மந்திர ஜலம் எடுத்து அவள் மேல் தெளித்து, "நித்ய கன்னிகே! தாயே, திரிபுர சுந்தரி! சர்வ சக்திகளுக்கும் ஆதாரமே! பூரணத்துவத்தின் கதவங்களை இவளுக்கு முழுமையாகத் திறந்துவிடு! இவளது சரீரத்தையும் மனத்தையும் புனிதப்படுத்தி, இவளில் உன்னையே ஆவிர்பவித்துக் கொண்டு, சர்வ மங்களங்களையும் பொலிவிப்பாயாக" என்று வேண்டிக் கொண்டார்.

உயிர்களுக்கெல்லாம் உயிராக விளங்கும் பிராணாதார சக்தியான அவளுக்குப் பிராணப் பிரதிஷ்டை செய்து, ஒலிப் பிரபஞ்சம் அனைத்துக்கும் ஆதாரமான அவளது அங்கங்களில் திவ்விய அட்சரங்களை நியாஸம் செய்தார்.

பரமசிவ ஜோதியிலிருந்து மாறுபடாத தமது ஆத்ம சக்தியை சுழுமுனை நாடிவழியாக சிரசின் உச்சியிலுள்ள மோக்ஷ ஸ்தானத்தில் கொண்டு வந்து நிறுத்தி, பிரம்ம சக்தியில் அதனை இரண்டறக் கரைத்து, அதன் அநுபவ ஆனந்தத்தை புஷ்பாஞ்சலியுடன் சாரதையின் உட்புகுத்தினார். "என்றும் அழியாமல் பிரகாசிக்கும் ஞான வடிவம்" — "அமிருத சைதன்ய மூர்த்தி" — என்று அவளை வாய் நிறைய அழைத்து, அப்படியே ஆக்கினார்.

திவ்ய போதம் என்ற போதையில் மேலும் மேலும் ஆழ்ந்து போகிறாள் சாரதாமணி. சாக்ஷாத் ஸ்ரீ வித்யா லலிதா மகா த்ரிபுரசுந்தரியாம் ராஜ ராஜேசுவரியே ஆகிவிடுகிறாள்.

அழகுக்கும், அன்புக்கும், ஆனந்தத்துக்கும் எது மூலமோ அதுவே ஸ்ரீ.

தன்னையன்றி வேறொன்றும் அறியாத அத்வைத ஞான உணர்வு எதுவோ அதுவே வித்யா.

லட்சியப் பொருளாம் 'ல'வும், அடையாளமாம் லிங்கம் ஏதுமற்ற நிர்குண 'லி'யும், சம்ஸாரத்திலிருந்து கடத்துவிக்கும் தாரகமாகிய 'தா'வும் இணைந்து 'லலிதா' வாகிறது. அன்னையுருவில் குழந்தைகளைக் கொஞ்சி லாலனம் செய்து பாலனம் தரும் மதுர மாதாவே லலிதா.

மூவுலகிலும் அழகிய வஸ்து திரிபுரசுந்தரி என்பது வெளியர்த்தம். அழகு என்றால் அது பௌதிக சௌந்தரியம் மட்டும் அல்ல; அது அன்பின் அடர்த்தியில் உண்டான அழகு, ஆனந்தத்தின் எல்லையில் உண்டான அழகு, சத்தியத்தின் செறிவில் உண்டான சௌந்தர்யம் என்பது உள்ளர்த்தம். அதற்கும் உள்ளே ஆழத்தில் இன்னோர் அர்த்தமும் உண்டு. முப்புரங்கள் என்பது ஜீவதசையின் மூன்று நிலைகள். அணுக்களாலான, பௌதிக உடல் ஒருபுரம். இதனுள் கர்மங்களை அநுபவிப்பது இன்னொரு புரம். பௌதிக உடல் அழிந்த பின்னும் கர்மத்தை அநுபவிப்பதற்காக மறுபிறப்

பெடுப்பது இந்த சூட்சும உடல்தான். இந்த சூட்சும உடம்புக்கும் ஆதாரமாக ஒரு காரண சரீரம் மூன்றாவது புரமாக உள்ளது. கர்மமே அற்ற ஆத்மாவில் எப்படியோ ஒரு பேத உணர்வு வந்தது அல்லவா? அந்த உணர்வுதான் இந்த மூன்றாவது புரம். இந்த முப்புரங்களையும் அழகு செய்யும் ஒழுங்குக்கு, தர்மத்துக்குத்தான் மகா திரிபுர சுந்தரி என்று பெயர்.

முப்புரங்களை அழித்து, பேதத்தை நீக்கி, சிவமாக்கி நம்மை ஆளுபவன் திரிபுர சம்ஹாரன். இவளோ திரிபுர சுந்தரி. சிவமான பின் — பிரம்ம நிலை அடைந்த பின் — எல்லாமே சுந்தரமாகத்தான் தெரியும். அணுவும் கர்மமும் பேதமும் கூட பிரம்மமாகவேதான் தெரியும். ஞானம் அடையும் முன் சாதகன் எவற்றையெல்லாம் மாயை எனக் கருதி அழித்தானோ அவையும்கூட ஞானம் எய்திய பின் அழகுக்கு நிலைக்களன்களாகத் தோன்றி அன்புக்குப் பாத்திரமாகி விடும். 'எல்லாம் மாயை' என்று ஒதுக்கும் நிலை தாண்டி 'எல்லாம் ஈசனால் பூரித்து நிற்பவை' என்ற சௌந்தரியப் பிரேம உணர்வைத் தருவதுதான் திரிபுர சுந்தரி மதம்.

அந்தத் திரிபுர சுந்தரி எப்படி இருக்கிறாள்? உதிக்கின்ற சூரியன் போல், ஜோதிச் சிவப்பாக ஒளி காந்துகிறாள். ஆயினும் அதில் வெப்பமே இல்லை. குளுமை வெள்ளமே பெருகுகிறது. குளிர்ந்த பிறை அவளது சிரசில் திகழ்கிறது. சூரிய, சந்திர, அக்னி மயமான தன் முக்கண்ணின் அசைப்பாலேயே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற



முத்தொழிலையும் புரிகிறாள். இந்த முத்தொழிலுக்கும் மேல் இரு தொழில்களைச் சொல்வதுண்டு. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் மூன்றுமே மாய உலகைச் சேர்ந்தவை. இவற்றுக்கு ஆதாரமான மாயையை உண்டாக்கும் திரோதானம் என்பதும் பிரம்ம சக்தியாகிய அவளது ஒரு தொழில். அந்த மாயையை நீக்கி அடியாரை உய்விக்கும் அநுக்கிரகம் இன்னொரு தொழில். பிரபஞ்சத்தின் சகல சக்திகளும் தன்னை ஸ்ரீ சக்கரத்தின் பல கோணங்களில் சூழ்ந்திருக்க, படைக்கும் சக்தியும் காக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் மாயா சக்தியும் நாலு கால்களாகித் தாங்கும் அநுக்கிரக பீடத்தில், 'பராபட்டாரிகை' எனப்படும் உத்தமோத்தம பரப்பிரம்ம சக்தியாம் தேவி எழுந்தருளியிருக்கிறாள்.

அவளது நாற்கரங்களில் ஒன்று பாசத்தைத் தாங்கி, அடியாரின் பாசத்தைக் களைகிறது. அத்வைத நிலையில் எது எதைப் பற்றிப் பாசம் வைக்க இயலும்?

மற்றொரு கரம் அங்குசத்தைத் தாங்கி துவேஷத்தை அடக்குகிறது. அத்வைத நிலையில் எது எதைத் துவேஷித்து விலகும்?

தேவியின் பிறிதொரு கரம் தாமரை, செவ்வல்லி, கல்ஹாரம், இந்தீவரம், ஒட்டு மாம்பூ ஆகிய பூக்களை அம்புகளாகத் தாங்குகிறது. விந்தையான அம்பு! அம்பு என்றால் கூரிய முனையுடன் உலோகத்தாலானதாக இருக்கும். இங்கோ நளின மலர்களை அம்புகளாக வைத்திருக்கிறாள்! அது சரி, அம்பு தனியாக இயங்காதே, வில்லுடன் சேர்ந்துதானே இயங்கும்? இவள் வைத்திருக்கும் வில் எது? நாமக் கரும்பையே வில்லாகப் பிடித்திருக்கிறாள். அதிமதுரமான கரும்பு வில், அதிசுகந்தமான ஐந்து பூ அம்புகள். மனத்தோடு சேர்ந்து இயங்கும் ஐந்து புலன்களையும் தன்னிடம் ஆட்படுத்திக் கொள்வதற்கு இந்த தநுசையும் பஞ்ச பாணங்களையும் தரித்திருக்கிறாள். உலகைக் காமத்தில் ஆழ்த்துவதற்காகக் கரும்பு வில்லும் மலரம்பும் ஏந்தினவன் காமதேவன். உலகினரின் காமத்தை நீக்குவதற்காகவே கரும்பு வில், மலரம்பு தாங்கியவள் இந்தக் காமாக்ஷி. உலகம் என்று ஒரு தோற்றம் ஏற்பட்டபின் அதை ரக்ஷிக்கவேண்டும் என்ற ஒரு காமம் பிரம்மத்துக்கு ஏற்பட்டதல்லவா? பிரம்மத்துக்கு அந்தக் காமத்தை ஊட்டியவளே இந்தக் காமாக்ஷி. தன்னைத் தானே பலவாறாகத் தோற்றுவித்துக் கொள்ள வேண்டும் என்று பிரம்மத்துக்கு ஏற்பட்ட சிந்தனையே இவள்தான். அதனால்தான் பிரபஞ்சம் உண்டாகிச் சம்சார சக்கரம் சுழல்கிறது. சக்கரத்தின் இருசாக — அந்த மூல காமத்தின் அச்சாக, அட்சமாக — இருப்பவள் இந்தக் காமாட்சி. சக்கரத்திலிருந்து விடுவிக்கிற அநுக்கிரக எண்ணத்தைப் பிரம்மத்துக்கு ஊட்டி, அவனைக் காமேசுவரனாக்கியிருப்பவளும் இவளே. அவனும் அவளும் வேறல்ல. மணியும் அதன் ஒளியும், பாலும் அதன் சுவையும், மலரும் அதன் மணமும்போல் பிரம்மமும் பிரம்ம சக்தியும் ஒன்றேதான்!

இந்தப் பிரம்ம சக்தியைத்தான் ராஜ ராஜேசுவரி என்பது. ராஜா என்பவன் நாட்டை ஆள்பவன். அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாக அனைத்துச் சக்திகளையும் இயக்கி ஆளுபவள் ஸ்ரீ ராஜராஜேசுவரி.

லலிதாம்பிகைக்கு நாற்கரம் இருப்பதாகப் பொது வழக்கு. ஆயினும் நாலு கரம் கொண்ட கணேசனைப் பத்துக் கரம் படைத்த மகா கணபதியாகவும், நாற்கரம் கொண்ட சிவபெருமானைப் பத்துக் கரம் கொண்ட ஸாம்ப பரமேசுவரனாகவும் அநுபூதிமான்கள் தரிசிப்பது போல், லலிதா திரிபுர சுந்தரியே ராஜ ராஜேசுவரியாக தரிசனம் தரும்போது பத்துத் திருக்கரங்களுடன் திகழ்கிறாள். அப்போது மேலே சொன்ன நாலு கரங்களுடன் ஞான வடிவாம் சாரதைக்கு உரிய சுவடி, ஜபமாலை இவற்றை இரு கரங்களில் ஏந்துகிறாள்; அழகுகளில் பேரழகாகிய சங்கீதத்தின் மூர்த்தியாகி வீணையை இருகரங்களால் மீட்டுகிறாள்; மேலும், ஆதிசங்கரர் நவின்றதுபோல் அவளது திருவடிகளே அபயமும் வரமும் அளிக்குமாயினும், இந்த சூட்சுமத்தைப் பேதையர் புரிந்துகொள்ளாதிருந்து விடுவரோ என்று கருதித் தன் கைகளிலும் அபய, வரத முத்திரைகளைக் காட்டுவாள் ஸ்ரீ ராஜராஜேசுவரி.

ராமகிருஷ்ணர் பரம்பொருளின் பல தெய்வ ரூபங்களையும் கண்ணாரக் கண்டவர். அவர் தமது திவ்விய தரிசனங்களின் இறுதி நிலையாகவும் உச்ச நிலையாகவும் ஷோடசியாம் ராஜ ராஜேசுவரியைக் கண்டதாகக் கூறியுள்ளார்.

''அம்மாவின் அத்தனை ரூபங்களுமே மகா அழகுதான். ஆனாலும் மற்ற ரூபங்களையும் ஷோடசியின் சுந்தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கறதுக்கே இல்லை. ராஜ ராஜேசுவரியான எங்கம்மா ஷோடசிதான் பரஞானமான மகாவித்யா ரூபிணி. அவள் அப்படியே ஜொலிக்கிற செங்கொழுந்தாக என் முன்னே நின்னு திவ்ய தரிசனம் தந்தாள். நான் பார்த்துண்டேயிருக்கச்சே அந்த சௌந்தரிய

ஸ்வரூபம் அப்படியே உருகிச் செக்கச் செவேலென்கிற அலைகளாக சகல திக்குத் திகந்தங்களிலேயும் பொங்கிப் பரவியது '' என்று ராமகிருஷ்ணர் தொண்டையடைக்கச் சொல்லுவார்.

வெண்மையான சிவனுடைய சாந்தம் சகல பிரபஞ்சத்தையும் அநுக்கிரகிக்க எண்ணம் கொள்கிறபோது ஜோதிச் சிவப்பாகும். 'சம்புவின் கருணை செக்கச் செவேல் என மூர்த்திகரித்துத் திக்விஜயம் செய்கிறது' என்கிறது சௌந்தரிய லஹரி.

செம்பட்டு உடுத்தி, செம்பருத்தி வண்ணத்தில் ஜொலிக்கும் ஷோடசியாகிய ராஜ ராஜேசுவரியைச் சகல கர்ம பலன்களுக்கும் ஆதாரமாகவும், அந்தமாகவும் கருதி இன்று பலஹாரிணி பூஜை செய்கிறார் ராமகிருஷ்ணர். மனிதனை சம்ஸாரத்தில் ஆழ்த்தும் மனைவியையே 'சம்ஸாரம்' என்பது உலக வழக்கு. இவரோ அவளையே சம்ஸாரத்திலிருந்து கடத்துவிக்கும் பலஹாரிணியாகப் பூஜிக்கிறார்.

அது வெறும் பாவனையல்ல. இதோ, அவள் மெய்யாலுமே அகண்ட பிரம்மத்தின் ஆதிசக்தியிலே ஆழ்ந்து தோய்ந்து அதுவே ஆகி இருக்கிறாள்! தன் குழந்தை கதாயீ தன்னை அன்போடு பூஜிப்பதாகவே உணர்கிறாள்!

ராமகிருஷ்ணர் அவளது பக்தன் என்கிற ஒரே உணர்வை வைத்துக் கொண்டு பூஜிக்கலானார்.

ஆவாகனத்துக்குப் பின் ஆசன உபசாரம்.

பிறகு அவளது பாதங்களில் நீர் வார்த்துத் துடைத்தார். அப்படிச் செய்வதில் அவருக்குத் தயக்கமேதும் இருக்கவில்லை. அவரைப் பக்தனாகவும் தம்மை பகவதியாகவுமே கண்டு கொண்ட சாரதைக்கும் அதை ஏற்பதில் தயக்கம் இருக்கவில்லை.

அர்க்கியம் அளித்தார்.

ஆசமனீயம் அளித்தார்.

திவ்விய தீர்த்தத்தை அவள் மீது புரோட்சித்தார் — அபிஷேகமாக.

அவளது சேலையின் மீதே புதிதான தொரு பீதாம்பரத்தைப் போர்த்தினார்.

கமுகுக் கழுத்திலே செழுஞ்சித சந்தனத்தைக் குழைத்துப் பூசினார்,

வகிட்டிலே சிந்தூரம் அப்பினார்,

அவளது பாதத்தைப் பவ்வியமாகப் பிடித்து, தமது திருக் கரத்தால் அதிலே செவ்வரக்குக் குழம்பு பூசினார்,

சங்கு வளையல்களை அவளது கரங்களில் சூட்டினார்,

மணக்கும் மாலைகளைச் சூட்டினார். தாய்க்கு மகவின் மாலையாக மட்டும் அல்ல; ஜீவாத்ம—பரமாத்ம மணமாலையாகச் சூட்டினார்.

இப்படியாக ஷோடசியாகிவிட்ட சாரதாமணிக்கு ஷோடச உபசாரங்களும் செய்தார்.

குருதேவர் இப்போது பிரணவத்துடனும் பீஜாக்ஷரங்களுடனும் திவ்யநாமங்களைச் சேர்த்துக் கூறி அவளுக்கு மலர் தூவி அர்ச்சனை புரியலானார். 'நம:' என்னும்போது மலர் மட்டும் அவள் மீது விழவில்லை. அவரது மனமும் விழுந்து கும்பிட்டது.

ஸிம்ஹாஸனேச்யை	நம:
லலிதாயை	நம:
மஹாராக்ஞ்யை	நம:
வராங்குசாயை	நம:
சாபின்யை	நம:
த்ரிபுராயை	நம:
மஹாத்ரிபுரஸுந்தர்யை	நம:
ஸுந்தரீசக்ரநாதாயை	நம:
ஸம்ராக்ஞை	நம:
சக்ரிண்யை	நம:
சக்ரேச்வர்யை	நம:
மஹாதேவ்யை	நம:
காமேச்யை	நம:
பரமேச்வர்யை	நம:
காமராஜப்ரியாயை	நம:
காமகோடிகாயை	நம:
சக்கரவர்த்தின்யை	நம:
மஹாவித்யாயை	நம:
சிவாயை	நம:
அனங்கவல்லபாயை	நம:
ஸர்வ பாடலாயை	நம:
குலநாதாயை	நம:
ஆம்னய நாதாயை	நம:
ஸர்வாம்னய நிவாஸின்யை	நம:
ச்ருங்கார நாயிகாயை	நம:

சிருங்காரமே அறியாத தம்பதியர்! இவர் அவளை 'ச்ருங்கார நாயிகை' என்று இறுதியாக அழைத்து மலர் தூவினார்! ராஜ ராஜேசுவரிக்கும் இந்த உலகத்துச் சிருங்காரம் தெரியாதுதான்! திரிபுர தகனம் என்ற மயானத்தில் அன்பு முளை விட்டு அது திரிபுர சுந்தரமாயிற்றல்லவா? அன்புமுளை விளையவேண்டுமானால் அதற்கொரு அப்பாவும் அம்மாவும் வேண்டும். அப்பாதான் உணர்வற்ற பிரம்ம சிவம். உணர்வற்ற அவரிடம் அன்பு தோன்ற முடியாது. அன்பை அவரிடம் பெற்றெடுக்க ஓர் அம்மா உண்டானாள். உணர்வற்ற அப்பா, 'நான் இருக்கிறேன்' என்பதாக ஓர் உணர்வை முதலில் பெற்றார். சத்திய வஸ்துவுக்கு ஏற்பட்ட அந்த ஞானம்தான் அம்பிகை. சத்தியமும்

ஞானமும் செய்து கொண்ட இந்தக் கல்யாண சிருங்காரத்தி லிருந்துதான் அன்பு, அருள், பிரேமை, பரிவு, கருணை, கிருபை, அநுக்கிரகம் என்றெல்லாம் சொல்கிற ஆனந்தக் குழந்தை பிறந்தது!

ஆனாலும் இந்த அப்பாவையும், அம்மாவையும் கணவன், மனைவி என்று சொன்னால் மட்டும் போதாது. அந்த அப்பா அன்பு என்ற தன் தொழிலைச் செய்யத் தொடங்குவதற்கு முன்னரே அவரிடம் 'நான் இருக்கிறேன்' என்ற ஞான அம்பிகை வெளிப் போந்துவிட்டாள். செயலில்லாமல் தன்னிலேயே திளைத்திருந்தவரை அவர் இருந்ததாகவே சொல்வதற்கில்லை. ஆகையினால் ஞான அம்பிகைதான் அவரையுமே பெற்றெடுத்தவள் என்று ரிஷிகள் சொல்வார்கள். இந்த உண்மையையே ''அபிராமி அந்தாதி'',

...இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே அவர் தமக்(கு) அன்னையும்
ஆயினள்...

என்று கூறும்.

''இமவான் மகளுக்குத் தன்னுடைய கேள்வன் மகன்'' என்பது திருவாசகம்.

''சத்திதான் சிவத்தை ஈன்றும்'' என்று ''சிவஞான சித்தியார்'' கூறும்.

ஈசனும் அம்பாளும் பல விதத்தில் உறவு கொண்டிருப்பது போல், ராமகிருஷ்ணர் சாரதையை மனையாளாகவும், சிஷ்யையாகவும், சகாவாகவும், தாயாகவும் கொண்டார். அதோடு மட்டுமின்றி பரமேசுவரன் அம்பிகையைத் தனது தெய்வமாகவும் கருதிப் பூஜிப்பதுபோல் இவர் அவளைத் தெய்வமாகவே வைத்து வழிபட்டும் விட்டார்.

சாரதையைச் சர்வ ஆதார சக்தியான பூமியாக பாவித்து சுகந்தம் பூசிய ராமகிருஷ்ணர், இப்போது அவளை சர்வ ஆனந்த சக்தியான ஆகாயமாகப் பாவித்து மலர் தூவி அர்ச்சனை முடித்தார். அடுத்து அவளை சர்வ பிராண சக்தியான வாயுவாக பாவித்து அவளுக்குத் தூபம் காட்டினார். பிறகு அவளை சர்வ ஞான சக்தியான அக்கினியாகப் பாவித்துத் தீபாராதனம் செய்தார். முடிவாக சர்வ காருண்ய சக்தியான அமுதமாக அவளைப் பாவித்து அவளுக்கு நைவேத்தியங்களைச் சமர்ப்பித்தார். சாதாரணமாகப் பூஜை செய்யும் போது தூபம் காட்டுவதைப் போலவும், தீபம் காட்டுவதைப் போலவும், நிவேதனமும் இறைவனுக்குக் **காட்டத்தான்** படுகிறது. ஆனால் இந்த அற்புத பூஜையிலோ இனிய ராமகிருஷ்ணர், இனிப்புப் பட்சணங்களை அள்ளி எடுத்து இனிய சாரதையின் திருவாயிலேயே சமர்ப்பித்தார். அவளும் அமிருத சைதன்ய மூர்த்தி நிலையிலே அதனை உண்டாள். 'மூகே தே தாம்பூலம்' என்று ஆதி சங்கரர் துதித்த வண்ணம் அவளுக்குத் தாம்பூலமும் ஊட்டினார். வெண் சுண்ணமும், சிவப்புப் பாக்கும், பச்சை வெற்றிலையும் சத்துவ — ரஜோ — தமோ குணங்களாகி அவளால் மெல்லப்பட்டு, கருணையின் அடர்ந்த சிவப்பு மட்டுமே அவளது அதரத்தில் நின்றது. தாம்பூலத்தை அவள் உண்ணும்போது கருணை தவிர சகல தத்துவங்களையும் உண்டு விட்டாள்; சர்வ கர்மங்களையும் உண்டாள்; சர்வ தர்மங்களையும் உண்டாள்; காலத்தையும், இடத்தையும் உண்டாள்; எது உண்டதோ அதையும் உண்டுவிட்டாள். தான் மட்டுமே தனி ஒன்றாக நிர்விகல்ப சமாதியில் முழுகிவிட்டாள்!

நைவேத்தியத்துடன் தம்மையே நிவேதித்துக்கொண்ட ராமகிருஷ்ணரும் அவதார வியக்திக்குரிய சிறிய 'நானும்' கூட விலகி, ஒரே பெரிய நானாக ஆகிப் பிரம்மநிர்வாணத்தில் ஆழ்ந்துவிட்டார்.

யாமம், யாமமாக ஓடிக் கொண்டேயிருந்தது!

'காலமாம் வனத்தில் அண்டக் கோல மாமரத்தின் மீது ரீங்காரமிட்டுலவும் வண்டாகிய' காளி பவதாரிணிக்குப் பூஜை முடிந்து ஹ்ருதயரும் மற்றும் சேவார்த்திகளும் வெளி வந்தனர். ஆனால் 'பட்டாசாரியரி'ன் அறைக் கதவு இன்னும் சாத்தியபடியேதான் இருந்தது. உள்ளே என்ன நடக்கிறது என்றறியாமல் அவர்கள் காத்துக் காத்துப் பார்த்து வெளியேறிவிட்டனர்.

பொழுது புலரும் முன்னே ராமகிருஷ்ணருக்கு வெளிப் பிரக்ஞை வந்தது. அவர் உடலைக் குலுக்கிக் கொண்டு எழுந்தார். அதே சமாதிச் சங்கிலியில் கட்டுண்டிருந்த சாரதையும் அந்த அசைவிலே உலுக்கப்பெற்று அசைந்து கொடுத்தாள்.

ராமகிருஷ்ணர் மீண்டும் பக்தரானார். சாரதையைப் பிரதக்ஷிணம் செய்து சாஷ்டாங்க தண்டனிட்டார்.

''நீ பலஹாரிணி! என் கர்ம பலன் அனைத்தையும் உனக்களித்தேன். நான் செய்த ஜபம், தியானம், பூஜை, பாராயணம், நாம சங்கீர்த்தனம் அனைத்தின் பலனையும் எனக்கென்று அணுவளவும் வைத்துக் கொள்ளாமல் பரிபூரணமாக இதோ உனக்கே அர்ப்பணித்தேன்'' என்று சொல்லிக் கொண்டு தமது ஜப மாலையை தேவி சாரதாமணியின் திருவடிகளில் சமர்ப்பித்தார்.

ஆதி சாரதைக்கு ஜப மாலை உண்டு. ஆனால் நம் அம்மா சாரதை பெற்ற ஜபமாலைக்கு அதுவும் ஈடாகாது! ஆதி சாரதையின் ஜப மாலை வித்யைக்கு மட்டும் உருவகம். சர்வ வித்யைகளுக்கும் மூர்த்தியான ராமகிருஷ்ணரின் வித்யாவிலாசம் மட்டுமின்றி, அவற்றை அடியோடு தியாகம் செய்த அவரது ஒப்பற்ற சந்நியாசமும்கூட இப்போது இந்த ஜபமாலையில் ஐக்கியமாகிவிட்டன. ஸ்தூலமாக ரூபாய் நாணயத்தை நாம் இன்னொருவருக்கு எடுத்துக் கொடுப்பது போல், ராமகிருஷ்ணர் தமது ஆத்ம நிதியத்தை சாரதாமணிக்கு அளித்து விட்டு, வித்யாபாரமும் ஞானச் சுமையும்கூட இல்லாமல் பரம லேசாக, ஆகாயம் போலாகி விட்டார்! இவளுக்குப் பட்டாபிஷேகம்; அவருக்குப் பூரண சந்நியாசம்!

வேலைச் சுமைகளைத் தாங்கிப் பழகிய சாரதை வித்யைச்சுமையையும் மலர்ச்சியுடன் தாங்கிக் கொண்டாள்.

ஸர்வ மங்கல மங்கல்யே சிவே
ஸர்வார்த்த ஸாதிகே!
சரண்யே த்ர்யம்பகே கௌரி
நாராயணி நமோஸ்துதே!!

"அன்பும் அழகும் நலனும் இழைந்த மங்களங்களுள் எல்லாம் மகாமங்களமே! சிவசக்தியே! அனைத்துப் பொருள்களையும் அடைவிப்பவளே! அடைக்கலப் பொருளே! மூவருக்கும் மூத்த முக்கண் மாதாவே! சுவர்ண வர்ணத்தவளே! நாராயண சக்தியே! உனக்கு வந்தனம்."

சாரதையான பிரம்மனின் சக்தியை சிவசக்தியாகவும் நாராயண சக்தியாகவும் துதித்தார் ராமகிருஷ்ணர்.

வழிபாடு முடிந்தது.

முடிகிற வழிபாடுதானா அது? 'ஒரு காலமன்றிது சதா கால பூஜையாய் ஒப்புவித்தேன்' என்று தாயுமானவர் சொன்னபடி சதாகால பூஜகரான ராமகிருஷ்ணர், குறிப்பிட்ட நிமித்தமாகச் செய்த ஒரு பூஜைமுடிந்தது அவ்வளவே!

கணவனே கண்கண்ட தெய்வம் என்பதற்கு உட்கிடை, மனைவியைக் **கண் கண்ட** தெய்வமாகக் கொள்வது என்று நிரூபித்துவிட்டார் ராமகிருஷ்ணர்.

சமாதி நிலை கலைந்த பின்னும் சாரதை மருளவில்லை, மிரளவில்லை.

தன்னை சாங்கோபாங்கமாகப் பூஜித்த நாயகனின் பாதங்களில் இயல்பாக விழுந்து நமஸ்கரித்தாள்.


மகான்களின் வாழ்வில் மகோன்னதங்கள் நிகழும். அந்த மகோன்னதங்களையும் அவர்கள் அலாக்காக விழுங்கி விட்டு எளிமையாக நிற்பதுதான் அவற்றிலும் உன்னதமாயிருக்கும்!

"ஸ்வாமீ! இந்தப் பீதாம்பரத்தையும், சங்கு வளையலையும் என்ன செய்யட்டும்?" என்று வினவினாள்.

ராமகிருஷ்ணர் சிறிது நேரம் சிந்தித்தார். "உன் அம்மாவுக்கு இதுகளைக் கொடுத்துவிடு. ஆனா அவளை வெறும் மநுஷின்னு நினைக்காமல், ஜகன்மாதான்னு நினைச்சுக் கொடு" என்றார்.

"அப்படியே ஸ்வாமீ! நான் வரேன்" என்று விடைகொண்டு நஹவத்துக்கு விரைந்தாள் சாரதை.

பிரம்மாதி தெய்வங்களும், இந்திராதி தேவர்களும் தொழும்பு செய்யும் ஸ்ரீ ராஜராஜேசுவரியாகப் பூஜைபெற்றவள், மாமியாருக்கும் கணவருக்கும் சேவார்த்திகளுக்கும் தன் சேவையைத் தொடங்கிவிட்டாள்! **(தொடரும்)**



அலை ஓசை

அமரர் கல்கி

5. கிட்டாவய்யர் குடும்பம்

ராஜம்பேட்டை கிட்டாவய்யர் அவருடைய தந்தைக்கு ஒரே புதல்வர். தகப்பனார் அகண்ட காவேரிக் கரையில் தேடி வைத்திருந்த பல ஏக்கரா நன்செய் நிலத்துக்கும் கிராம முனிசிப் வேலைக்கும் உரிமை அடைந்தார். வளமான பூமி; பொன் போட்டால் பொன் விளையக் கூடியது. ஆயினும் அந்நிலத்தில் பொன்னைப் போடாமல், பொன்னைக் காட்டிலும் சிறந்த சம்பா நெல், கதலி வாழை, வெற்றிலை, கரும்பு முதலியவை பயிராக்கி வந்தனர்.

தகப்பனார் காலத்திலேயே அவருடைய சகோதரிகள் இருவருக்கும் கல்யாணம் ஆகிவிட்டது. ஆகவே அவர் குடும்பத் தலைவரான பிறகு குடும்பத்துக்கும் பெரிய செலவு ஒன்றுமில்லை. எனினும் தான தர்மங்களிலும் பொதுக் காரியங்களிலும் சிநேகிதர்களுக்கு உதவி செய்வதிலும் பிள்ளைகளைப் படிக்க வைப்பதிலும் தாராளமாகப் பணம் செலவழிந்து கொண்டிருந்தபடியால் தகப்பனார் காலத்துக்குப் பிறகு சொத்து விருத்தியடையவில்லை. புதல்வி லலிதா

வுக்கு மட்டும் வருஷத்துக்கு ஒரு வயது வீதம் கூடிக்கொண்டேயிருந்தது. சென்ற வருஷமே கல்யாணம் செய்திருக்க வேண்டும் — இந்த வருஷமும் கல்யாணம் செய்யாமலிருந்தால் குடி முழுகிப் போய்விடும் என்பது அவருடைய மனைவி சரஸ்வதி அம்மாளின் திடமான அபிப்பிராயம்.

சென்ற வருஷம் கிட்டாவய்யர் லலிதாவின் கல்யாணத்தில் அதிக சிரத்தை காட்டாததன் காரணம் அவர் குடும்ப சகிதமாய் பம்பாய்க்குப் பிரயாணம் செய்ய நேர்ந்ததுதான்.

கிட்டாவய்யரின் சகோதரிகளில் ஒருத்தி அவருக்கு மூத்தவள். அந்த அம்மாளுக்குச் சமீப கிராமம் ஒன்றில் வைதிக குடும்பத்தில் கல்யாணமாகியிருந்தது.

கிட்டாவய்யரின் தங்கை ராஜமோ பம்பாயில் இருந்தாள். சிறு பிராயத்தில் ராஜம் கிட்டாவய்யரின் வாஞ்சைக்குப் பெரிதும் உரிமை பெற்றிருந்தவள். அவளுடைய கல்யாணத்தின்போது கிட்டாவய்யர் காட்டிய உற்சாகத்துக்கும் பெருமைக்கும் அளவே கிடையாது. ராஜத்தை மணந்த மாப்பிள்ளையைப் பல தடவை ''அதிருஷ்டக்காரன்'' என்று அவர் பாராட்டியதுண்டு. ஆனால் யாரும் அறிய முடியாத தெய்வ சித்தத்தினால் ராஜத்தின் அதிர்ஷ்டம் அவ்வளவு சரியாக இல்லை. கல்யாணம் ஆன உடனேயே மாப்பிள்ளை துரைசாமிக்கு பம்பாய் ரயில்வே காரியாலயத்தில் நல்ல உத்தியோகம் ஆயிற்று. கொஞ்ச காலத்துக்குப் பிறகு ராஜம் பம்பாய்க்குப் போனாள்.

ராஜத்தின் இல்வாழ்க்கை அவ்வளவு ரம்மியமாக இல்லை என்று சீக்கிரத்திலேயே தெரிய வந்தது. ஆனாலும் விவரம் இன்னதென்று தெரியவில்லை. மான



உணர்ச்சி அதிகம் உள்ளவளான ராஜம்மாள் தன்னுடைய கஷ்டங்களைப் பகிரங்கப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. பம்பாய்க்கும் ராஜம் பேட்டைக்கும் போக்குவரவு அடிக்கடி இருக்க முடியாதல்லவா? நாளடைவில் கடிதப் போக்குவரவுகூட நின்று போயிற்று. சிற்சில சமயம் கிட்டாவய்யர், ''ராஜம் எப்படி இருக்கிறளோ?'' என்று எண்ணி ஏங்குவார். அப்போது அவருடைய கண்களில் கண்ணீர் துளிக்கும். கண்ணைத் துடைத்துக் கொண்டு, ''அவள் தலைவிதி அப்படி!'' என்று எண்ணி ஒரு பெருமூச்சு விட்டுவிட்டுத் தம் காரியத்தைப் பார்க்கத் தொடங்குவார்.

இந்த நிலையில் ஒரு வருஷத்துக்கு முன்னல் ராஜத்திடமிருந்து கடிதம் ஒன்று வந்தது.



உருக்கமான கடிதம் அது. இத்தனை வருஷங்களாக எவ்வளவோ பொறுமையுடன் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டிருந்தும் தன்னுடைய மன வேதனை தீர்ந்தபாடில்லை என்று ராஜம் எழுதியிருந்தாள். வர வரத் தன் உடம்பு நிலையும் மோசமாகி வருகிறதென்றும், கூடிய சீக்கிரம் வந்து தன்னை ஒரு தடவை பார்த்துவிட்டுப் போக வேண்டுமென்றும் தமையனைக் கேட்டுக்கொண்டிருந்தாள். ''வரும்போது மன்னியையும் லலிதாவையும் அழைத்து வரவேண்டும். சீதா அவளுடைய அம்மங்காளைப் பார்க்க வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருக்கிறாள்'' என்றும் எழுதியிருந்தாள்.

கிட்டாவய்யருக்குத் தம் மனைவியை பம்பாய்க்கு அழைத்துப் போக விருப்பமில்லை. ஆனால் சரஸ்வதி அம்மாளின் மனநிலை அதற்கு நேர்மாறாக இருந்தது. லலிதாவுடன் பம்பாய்க்குப் போவதில் அவள் துடியாக இருந்தாள். குழந்தைகளுக்குத் தலை மொட்டை போடுவதற்காகத் திருப்பதி யாத்திரை போனதைத் தவிர அந்த அம்மாள் பிரயாணம் அதிகமாகச் செய்ததில்லை. பிரயாணம் செய்ய ஆசைப்பட்டதும் கிடையாது. ஆனால் இப்போது பம்பாய்க்குப் போவதில் ஆத்திரம் காட்டினாள். காரணம் லலிதாவுக்கு வயது பதினாலு ஆகியிருந்ததுதான். ''நாலு இடத்துக்குப் போய்ப் பார்த்தால்தானே நல்ல வரனாகக் கிடைக்கும்? இந்தப் பட்டிக்காட்டிலேயே உட்கார்ந்திருந்தால் எப்படி?'' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள்.

ஆகவே கிட்டாவய்யர் குடும்ப சகிதமாய் பம்பாய்க்குப் போனார். சரஸ்வதி அம்மாள், லலிதா, லலிதாவின் தம்பி சுண்டு ஆகியவர்களும் போயிருந்தார்கள். பிரயாணம் வெகு உற்சாகமாக இருந்தது. துரைசாமி ஐயர் ஸ்டேஷனுக்கு வந்து அவர்களைத் தாதரில் இருந்த தம் ஜாகைக்கு அழைத்துச் சென்றார்.

பம்பாயில் தங்கியிருந்தபோது லலிதாவும் சுண்டுவும் வெகு குதூகலமாயிருந்தார்கள். லலிதாவும் அவளைவிட ஒரு வயது மூத்தவளான சீதாவும் பிராண சிநேகிதிகளானார்கள். ஒருவரையொருவர் மறப்பதில்லை என்றும் கையடித்துச் சத்தியம் செய்து கொண்டார்கள்.

லலிதாவுக்கும் சுண்டுவுக்கும் பம்பாய் நகரத்துக் காட்சிகளையெல்லாம் காட்டுவதில் சீதாவுக்கு அளவில்லாத பெருமை; சொல்ல முடியாத உற்சாகம். மிருகக் காட்சி சாலை ஆகட்டும், மியூஸியம் ஆகட்டும், ரயில்வே ஸ்டேஷன்கள் ஆகட்டும், தாஜ்மகால் ஹோட்டல் ஆகட்டும், எட்டு மாடியுள்ள மாளிகைகள் ஆகட்டும், மலபார் குன்றிலுள்ள மச்சுத் தோட்டம் ஆகட்டும்—லலிதா பார்த்ததையே பார்த்துக் கொண்டு பிரமித்துப் போனபடி நிற்பாள். சீதாவோ, அடிக்கடி, ''இங்கே வாடி! இதைப் பாரடி! இப்படிப் பார்த்ததையே பார்த்துக் கொண்டு நின்றால் பட்டிக்காடு என்று பரிகாசம் செய்வார்கள். ஓடி வாடி! ஓடி வா!'' என்று அவசரப்படுத்துவாள். கையைப் பிடித்து இழுப்பாள்; முதுகைப் பிடித்துத் தள்ளுவாள்; ''சீ அசடே!'' என்று சில சமயம் வையவும் வைவாள். ஆனால் இதையெல்லாம் லலிதா பொருட்படுத்தவில்லை. சீதாவிடம் அவளுக்கு ஏற்பட்டிருந்த அளவில்லாத பிரியமும் அவளாலேதானே இந்த பம்பாய்க் காட்சிகளையெல்லாம் பார்க்கிறோம் என்ற நன்றி உணர்ச்சியும் சேர்ந்து சீதா இழுத்த இழுப்புக்கெல்லாம் லலிதா ஒத்துப் போகும்படியும் செய்திருந்தன. இதனால் லலிதா பம்பாயில் தங்கிய நாட்களில் எப்போதும் ஒரே உற்சாகமாயிருந்தாள். இதற்கு முன் எந்த நாளிலும் அவள் இவ்வளவு சந்தோஷமாயிருந்ததில்லை.

ஆனால் கிட்டாவய்யரும், அவருடைய மனைவி சரஸ்வதி அம்மாளும் வெவ்வேறு காரணங்களால் லலிதாவுக்கு நேர்மாறான மன நிலையை அடைந்திருந்தார்கள்.

ராஜத்தின் வாழ்க்கை ஏமாற்றமும் மன வேதனையும் நிறைந்தது என்று கிட்டாவய்யர் அறிந்து கொண்டார். ஆனால் அதன் காரணங்களை அவர் தெளிவாக அறிய முடியவில்லை. அவர்கள் பம்பாயில் தங்கியிருந்த நாட்களில் துரைசாமி அபூர்வமாகவே வீட்டுக்கு வந்தார். வந்தபோதெல்லாம் முகமலர்ச்சியோடு மரியாதையாகவே பேசினார். இரவு நேரங்களில் பெரும்பாலும் 'டியூட்டி' இருக்கிறதென்பதாய்ச் சொல்லி அவர் வீட்டுக்கு வருகிறதில்லை.

ராஜத்தின் கஷ்டங்களைக் கிட்டாவய்யர் அறிந்து கொள்ள முயன்றார். பணக் கஷ்டம் இருப்பது பிரத்தியட்சமாகத் தெரிந்தது. ராஜத்தின் கழுத்தில் மஞ்சள் கயிற்றில் தொங்கிய திருமாங்கல்யத்தைத் தவிர வேறு ஆபரணம் என்பதே கிடையாது.

கிட்டாவய்யர் எதிர்பார்த்தபடி ராஜம் அதிகமாக மெலிந்து, படுத்த படுக்கையாக இல்லை. கலகலப்பாக நடமாடிக் கொண்டுதான் இருந்தாள்.

கிட்டாவய்யர் ராஜத்தைக் கேட்ட போது, ''எனக்கு உடம்பு ஒன்றுமில்லை

துரிதமாக.
ஜாக்கிரதையாக.
நிச்சயமாக.


எப்படி?

இப்போது இடையில் நிற்காதபடி ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு நேராக எங்கள் லாரிகளைச் செலுத்துகிறோம். இந்த துரித சர்வீஸை எங்கள் வாடிக்கையாளர்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

ஏனெனில் இந்த முறையில் பார்சல்களை மேலும் துரிதமாக, ஜாக்கிரதையாகக் கொண்டு சேர்க்க முடிகிறது. இது போன்ற துரித சர்வீஸ்களை நாங்கள் மேலும் விரிவுபடுத்தி, பல நகரங்களை நேரிடையாக இணைத்து வருகிறோம்.

இந்த சர்வீஸை வியாபாரிகள் சமூகம் மிக மிக வரவேற்கிறது. ஏனெனில் வியாபாரத்திற்கான சாமான்களை ஜாக்கிரதையாக தடங்கலின்றி அடைவதால் அவர்கள் தேவையான அளவே ஸ்டாக் செய்கின்றனர். இதனால் அவர்கள் மூலதனத்தை அனாவசியமாக முடக்கத் தேவையில்லை.

ஓரிடத்திலிருந்து
மற்றொரு இடத்திற்கு
நேரிடை
பார்சல் சர்வீஸ்



இந்தச் சிறப்பான பணி ஸதர்ன் ரோட்வேஸினால் எப்படி முடிகிறதென்றால்:

- தனியார் துறையில் ஸதர்ன் ரோட்வேஸ் நிறுவனமே மிகவும் பெரிய ஸ்தாபனம்.
- அவர்கள் தங்களுக்குச் சொந்தமான லாரிகளையே இயக்குகிறார்கள்.
- அவர்களின் பயிற்சி பெற்ற ஊழியர்கள், லாரி ஸ்தாபனத்தின் ஒவ்வொரு இயக்கத்தையும் தனித்தனியே கண்காணிக்கின்றனர்.
- அவர்களின் டிரைவர்கள், உடலியலிலும், உளவியலிலும் பொருத்து நடத்தும் பரிசோதனைகள், மற்றும் தூரத்தைப் பற்றி மதிப்பிடும் பரிசோதனைகள், கண் கால்களிடை கச்சித ஒத்துழைப்புக்கான பரிசோதனைகள் ஆகியவற்றிற்கு உள்ளாகிய பிறகுதான் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.
- 100 மைல்கட்கு ஒன்றுவீதம் ரிப்பேர் மற்றும் பராமரிப்புக்கான வசதிகொண்ட தொழில் பட்டறைகள் அமைத்திருக்கிறார்கள்.

தென் இந்தியா முழுமையிலும் சரக்குகளை புக் செய்யும் ஆபீஸ்கள் பரவி உள்ளதால் மக்களிடை ஸதர்ன் ரோட்வேஸ் பெருநம்பிக்கை பெற்றிருக்கிறது.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

TVS

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(இது ஒரு டிவிஎஸ்
ஸ்தாபனம்)
மதுரை

அண்ணா! உங்களையெல்லாம் பார்க்க வேண்டுமென்று ஆசையாயிருந்தது. அதற்காகத்தான் அப்படி எழுதியிருந்தேன்'' என்றாள்.

கிட்டாவய்யர் இதனால் ஏமாந்து விடாமல் மேலும் மேலும் கேள்விகள் கேட்டு உண்மைகளை அறிய முயன்றார்.



27ம் பக்கம் பார்க்க.

''ஏன், அம்மா, ராஜம்! உன் அகத்துக்காரருக்கு ஏதேனும் கெட்ட பழக்கம் உண்டோ? குடி, கிடி...?''

''குடி, குதிரைப் பந்தயம் இன்னும் எல்லாம் உண்டு, அண்ணா! அதையெல்லாம் ஏன் கேட்டு என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறாய்?'' என்று ராஜம் சொல்லிவிட்டுக் கலகலவென்று கண்ணீர் வடித்தாள். கிட்டாவய்யர் அவளுக்குத் தேறுதல் கூறிக் கொஞ்சம் கொஞ்சமாக எல்லா விவரங்களையும் தெரிந்துகொண்டார். சூதாட்டங்களோடு கூடச் சிற்றின்ப விவகாரங்களிலும் துரைசாமி ஈடுபடுவதுண்டு என்று ராஜத்தின் சிற்சில வார்த்தைகளிலிருந்து கிட்டாவய்யர் ஊகித்தார். ஆனால் தங்கையிடம் இதைப் பற்றி அதிகம் கேட்பதில் உள்ள விரஸத்தைக் கருதி நிறுத்திக் கொண்டார்.

துன்பப் பட்டிருந்த ராஜத்தினிடம் கிட்டாவய்யர் காட்டிய பிரியத்தையும் அநுதாபத்தையும் பார்க்கப் பார்க்க, சரஸ்வதி அம்மாளின் உள்ளத்தில் குரோதப் புகை கிளம்பத் தொடங்கியது. ராஜத்தின் கஷ்டங்களைத் தெரிந்து கொள்வதற்காக அவர் தனியாகப் பேசும்போதெல்லாம் சரஸ்வதி அம்மாள் அங்கே தேடிக் கொண்டு வந்து சேருவாள். ''சரசு! நீ போ!'' என்றால், ''இரகசியம் என்ன இரகசியம்? நல்ல வெட்கக்கேடு!'' என்று கன்னத்தைத் தோள்பட்டையில் இடித்துக்கொண்டு திரும்பிச் செல்வாள்.

''அந்தப் பிராமணர் பரம சாது; தங்கக் கம்பி; பார்ப்பதற்கு மகா ராஜா மாதிரி இருக்கிறார். இந்தத் துக்கிரிதான் இப்படிக் குடித்தனத்தைப் பாழாக்கியிருக்கிறாள்!'', என்று முணுமுணுப்பாள். தன் புதல்வி லலிதாவைக் காட்டிலும் ராஜத்தின் மகள் சீதா சிவப்பாகவும் இலட்சணமாகவும் இருப்பதைப் பார்க்கப் பார்க்க சரஸ்வதிக்கு ஆத்திரம் பொங்கியது. சீதா கலகலவென்று பேசுவதும் சிரிப்பதும் இவளுக்குக் குரோதத்தை உண்டாக்கியது. லலிதா எப்போதும் சீதாவைப் பின்தொடர்ந்து போவதும், அவள், ''சீ, போடி! வாடி'' என்று அதட்டுவதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருப்பதும் சரஸ்வதி அம்மாளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவேயில்லை.

இந்த நிலைமையை ராஜம் ஒருவாறு அறிந்து கொண்டு தன்னுடைய இனிய பேச்சினாலும்—உபசாரத்தினாலும் மன்னியைக் கூடுமானவரையில் சாந்தப்படுத்தி வந்தாள். லலிதாவின் பேரில் ரொம்பவும் அதிகாரம் செலுத்தாதபடி சீதாவுக்கும் அடிக்கடி எச்சரிக்கை செய்து வந்தாள்.

இதனாலெல்லாம் சரஸ்வதி அம்மாளின். மனம் சாந்தமடையவில்லை. லலிதா, சீதா இவர்களின் தோற்றத்தை அவளுடைய உள்ளம் அடிக்கடி ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது. லலிதா மாநிறமானவள். சீதாவின் மேனியோ வெண் பட்டினையொத்த சந்தன வர்ணம் கொண்டது. சாமுத்திரிகா இலட்சணம் அறிந்தவர்கள் ஒருவேளை சீதாவைவிட லலிதாதான் அழகுடையவள் என்று சொல்லக்கூடும். ஆனால் மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்கு இருவரில் சீதாதான் அழகி எனத் தோன்றும். லலிதாவின் கண்கள் நீண்டு சாந்தம் குடிகொண்டு தாமரை இதழின் வடிவை ஒத்திருந்தன. சீதாவின் கண்களோ அகன்று வட்ட வடிவமாய்க் குமுத மலரையொத்திருந்தன. அவளுடைய கண்ணிமைக்குள்ளே கரு விழிகள் அங்குமிங்கும் சுழன்று சஞ்சல புத்தியைக் காட்டின என்றாலும், பார்ப்பவர்களை உடனே பிரமிக்கச் செய்யும் தன்மை வாய்ந்திருந்தன.

சீதா பம்பாய்ப் பட்டணத்தின் நாகரிகத்தில் பிறந்து வளர்ந்தவள். லலிதாவோ பட்டிக்காட்டிலேயே இருந்தவள். அதற்குத் தகுந்தபடி அவர்களுடைய நடை உடை பாவனைகள் அமைந்திருந்தன. சீதாவின் காதுக்கருகில் தொங்கிய சுருட்டை மயிர் ஒன்றே போதும், அவளுடைய முக வசீகரத்தை ஸ்தாபிதம் செய்வதற்கு.

அவளுடைய பேச்சுத் திறமையைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. கலகலவென்று வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டிருப்பாள். லலிதா ஒரு வார்த்தை சொல்லுவதற்குள் சீதா பத்து வார்த்தை சொல்லி விடுவாள். 'கான்வெண்ட்' பள்ளிக்கூடத்தில் படித்தவளாதலால் பேசிக் கொண்டேயிருக்கும்போது திடீரென்று ஓர் இங்கிலீஷ் பாட்டைப் பாடி லலிதாவைத் திகைக்க வைத்துவிடுவாள்.

இவ்வளவுக்கும் மேலாக லலிதாவை விடச் சீதா ஒரு வயது அதிகமானவள். ஆகையால் அவளிடம் யௌவனத்தின் சோபை பிரகாசிக்கத் தொடங்கியிருந்தது.

இப்படியெல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்து, லலிதாவைக் காட்டிலும் சீதா வசீகரம் பெற்றிருப்பதேன் என்பதாகச் சரஸ்வதி அம்மாளால் நிர்ணயிக்கமுடியவில்லை. மொத்தத்தில் தன் புதல்வியைக் காட்டிலும் தன் நாத்தனாரின் மகள் அதிக அழகு பெற்று விளங்குகிறாள் என்பதை மட்டும் அவள் உள்ளம் உணர்ந்தது. இது காரணமாக அந்த அம்மாளின் சுபாவமே மாறி விட்டது.

ராஜம்பேட்டை போஸ்டுமாஸ்டர் பங்காரு நாயுடு சரஸ்வதி அம்மாளைப் பற்றிக் கொடுத்த அபிப்பிராயம் ஒரு வருஷத்துக்கு முன்னால் வரையில் உண்மையாயிருந்தது. பம்பாய்க்குப் போய்த் திரும்பியதிலிருந்து சரஸ்வதி அம்மாளின் இயற்கையில் கோப தாபங்கள் அதிகமாகிக் கொண்டிருந்தன. லலிதாவைச் சிங்காரிப்பதிலும் அழகுபடுத்துவதிலும் முன்னைக் காட்டிலும் பன் மடங்கு சரஸ்வதி அம்மாள் முனைந்தாள். இந்த முயற்சியில் லலிதாவுக்குக் கிடைத்த அடிகள், திட்டுகளுக்குக் கணக்கேயில்லை. அதிலும் சீதாவின் பேச்சை லலிதா எடுத்து விட்டால் அன்று வீடு அமர்க்களம்தான். பல முறை தலையில் பட் பட்டென்று குட்டுக்கள் விழுந்த பிற்பாடும் லலிதாவுக்கு மட்டும் புத்தி வரவேயில்லை. அத்தங்காள் சீதாவைப் பற்றி யாரிடமாவது ஏதாவது பெருமை அடித்துக் கொள்ளா விட்டால் அவளுக்கு அன்றிரவு தூக்கம் வராது. அப்படித் தூங்கினாலும் சொப்பனத்தில் அக்கிரகாரத்துப் பெண்களிடம் தன் பம்பாய் அத்தங்காளைப் பற்றி ஏதாவது சொல்லியே தீருவாள்.

6. மந்திராலோசனை

கிட்டாவய்யர் சாய்மான் நாற்காலியிலிருந்து எழுந்தபோது கீழே விழுந்த கடிதத்தை எடுத்து நின்ற வாக்கிலேயே அதைப் பிரித்துப் படித்தார். பாதி படிக்கும்போதே, ''சீச்சீ! சீச்சீ! இங்கிலீஷ் படித்தவர்களுக்குப் புத்தியே இருப்பதில்லை. அதிலும் மதராஸில் குடியேறிவிட்டால், அவர்களுக்குத் தலைகால் புரிகிறதில்லை. சுத்த கர்வம் பிடித்தவர்கள்!'' என்றார்.

சரஸ்வதி அம்மாளுக்கு, 'நீங்கள் இங்கிலீஷ் படிக்கா விட்டால் படித்தவர்களை எதற்காகத் திட்டுகிறீர்கள்?' என்று சொல்லத் தோன்றியது. ஆனாலும் 'மதராஸ்' என்றதும் அவளுடைய நினைவு வேறு பக்கம் திரும்பியது. கடிதத்தின் விஷயத்தைத் தெரிந்துகொள்ளும் ஆவலினால் நாவை அடக்கிக் கொண்டாள். கிட்டாவய்யர் கடிதத்தை முழுவதும் படித்த பிறகு, ''கடிதம் யார் எழுதியிருக்கிறார்கள்? என்ன எழுதியிருக்கிறது?'' என்று கேட்டாள்.

கிட்டாவய்யருக்குத் தம் மனைவியின் பேரில் ஏற்பட்டிருந்த அற்பக் கோபம் இதற்குள் மாறி மதராஸ்காரர்களின் மீது திரும்பி யிருந்தது. ஆகையால் சரஸ்வதி அம்மாளின் கேள்விக்கு அவர் பதில் சொன்னார்.

''பழைய மாம்பலத்தில் இருக்கிறானே, ஒரு பிரகஸ்பதி, அவன் எழுதியிருக்கிறான். அவனுடைய புத்தி உலக்கைக் கொழுந்துதான்!''

''ஓகோ! உங்க சின்ன மாமா எழுதியிருக்கிறாரா? என்ன எழுதியிருக்கிறார்?'' என்று சரஸ்வதி அம்மாள் கேட்டாள். அவளுடைய குரலில் பரபரப்பு அதிகமாயிருந்தது.

கிட்டாவய்யர், ''பட்டணத்தில், பத்மாபுரத்தில் ஒரு நல்ல வரன் இருக்கிறது என்று சீமாச்சு சொன்னான் அல்லவா? அதைப் பற்றி விசாரித்து எழுதும்படி சொல்லியிருந்தேன். பிள்ளையின் தாய் தகப்பனாரைப் போய்ப் பார்த்தானாம். அவர்கள் பெண்ணை மதராஸுக்கு அழைத்துக் கொண்டு வந்து காட்ட வேண்டும் என்கிறார்களாம்! மதராஸ்காரர்களுக்கே தலையில் மூளை இராது போலிருக்கிறது. சந்தைக்கு மாட்டைக் கொண்டு போவது போல் பெண்ணை அழைத்துக் கொண்டு போக வேண்டுமாம்! அப்படியாவது அவர்கள் பணம் கொடுத்து வாங்கிக் கொள்கிறார்களா? பெண்ணையும் கொடுத்து


ஆரோக்கியம் வேண்டுவோர் விரும்புவது விவா
ஆரோக்கிய பானத் தயாரிப்பில் ஓர் அரிய சாதனை—விவா!
விவாவின் ஒவ்வொரு ஸ்பூனிலும் புரதம் தரும் ஆரோக்கியம், கார்போஹைட்ரேட் தரும் சக்தி, பால் ஏடு தரும் வளமை மற்றும் மால்ட் தரும் சுவையான சிறப்பு சேர்ந்துள்ளன.
விவா—முழுமையான, முன்கூட்டியே சீரணிக்கப்பட்ட போஷாக்குப் பானம்.
விவா
இரு செயல் புரியும் ஆரோக்கிய பானம்
VIVA
The Double Action Health Drink
FORTIFIES YOU FOR THE DAY
RELAXES YOU FOR THE NIGHT
"விவா—ஆரோக்கிய பானங்களில் கண்டறியாத அருஞ்சுவையுள்ள பானம்":

...இட்டால் இதமளிப்பு



டெட்டால் அரவணைப்பு



காயங்களைத் தூய்மைப் படுத்துவதோடன்றி ஆற்றவும் துணை டெட்டால்.

பட்ட காயம் எதுவாயினும் இட்டுப் பயன்காணத் தட்டாமல் உதவுவது டெட்டால். உங்கள் டாக்டரே கூறுவார் : ஒழுங்குதவறாமல் காயத்தின்மீது அடிக்கடி இட்டால், கிருமிகள் அணுகாமல் காக்க உதவுவது டெட்டால் ... பரிபூரணமான ஆன்ட்டிஸெப்டிக் பாதுகாப்பு அது.

குளி நீரிலே இட்டால் : புத்துணர்வூட்டுகிறது டெட்டால்.
க்ஷவரத்திற்கான நீரிலே : பாதுகாக்கிறது டெட்டால்.

புதுமைக் கோல டெட்டால்- பரிபூரண ஆன்ட்டிஸெப்டிக் பாதுகாப்பு

லின்டாஸ்-DTL. 2-140 TM(R)

தட்சிணையாகப் பணமும் கொடுக்க வேண்டுமாம்! அவர்கள்தான் அப்படிப் புத்தி இல்லாமல் சொன்னார்கள் என்றால், இவனுக்கு எங்கே புத்தி போயிற்று? 'லலிதாவை இங்கே ஒரு தடவை அழைத்துக் கொண்டு வருவது நலம்' என்று எழுதியிருக்கிறான்! நலமாம் நலம்! நலத்தைரொம்பக் கண்டு விட்டான் இவன்!'' என்று கிட்டாவய்யர் சரமாரியாகப் பொழிந்தார்.



''இருந்தாலும் உங்களுக்கு இவ்வளவு கோபம் வரக் கூடாது. கோபம், பாவம், சண்டாளம் என்று நீங்களே அடிக்கடி சொல்லுவீர்களே? உங்கள் சின்ன மாமா யோசிக்காமல் எழுதப்பட்டவர் அல்ல. அப்படிக் குழந்தையை அழைத்துக்கொண்டு போனால் அவர்கள் வீட்டுக்கா நேராகப் போகப் போகிறோம்? உங்கள் சின்ன மாமா வீட்டில்தானே போய் இறங்குவோம்? அங்கே வந்து பார்க்கச் சொன்னாலும் போயிற்று! அதற்காக நீங்கள் இவ்வளவு கோபித்துக் கொள்வானேன்?'' என்று சரஸ்வதி அம்மாள் கிட்டாவய்யருக்குச் சாந்தம் உபதேசம் செய்தாள்.

லலிதாவுக்கு நல்ல வரன் கிடைக்க வேண்டும் என்பதில் சரஸ்வதி அம்மாளுக்கு இருந்த ஆர்வம் சில சமயம் அவளை ரௌத்ராகாரம் கொள்ளச் செய்தது; வேறு சில சமயம் அபாரமான சாந்த குணத்தை மேற்கொள்ளும்படியும் செய்தது.

''அதெல்லாம் முடியாத காரியம்.. கண்ட முட்டாள் பயல்களுக்கு முன்னால் நம்ம லலிதாவை அழைத்துக் கொண்டு காட்டுவதா? அப்படி என்ன இப்போது வந்து விட்டது? இவன் இல்லாவிட்டால் இன்னும் எத்தனையோ பேர். ஒரு பையன் வந்து பெண்ணைப் பார்ப்பது, அப்புறம் பெண் வேண்டும், வேண்டாம் என்று சொல்வது—இதுவே ஆபாசமான காரியம். பெண்களை அழைத்துக் கொண்டு போய்க் காட்டுவது ரசாபாசமான விஷயம்!...''

சரஸ்வதி அம்மாள் குறுக்கிட்டு, ''இப்போது என்ன குடி முழுகிவிட்டது? எதற்காகக் கோபித்துக் கொள்கிறீர்கள்? எல்லாவற்றுக்கும் கோடி வீட்டுக்காரரை யோசித்துக் கொண்டு தீர்மானம் செய்தால் போகிறது!'' என்றாள்.

கோடி வீட்டுக்காரர் என்று சரஸ்வதி அம்மாள் குறிப்பிட்டது சிமாச்சுவய்யரைத்தான். அவரைக் குறிப்பிட்டவுடனே கிட்டாவய்யரின் கோபம் அடங்கிவிடும் என்று அந்த அம்மாள் நன்கறிந்திருந்தாள். அவள் நினைத்தபடியே ஆயிற்று. கிட்டாவய்யர் அவசரமாய்ச் சாப்பிட்டுவிட்டு வெளிக் கிளம்பினார்.

* * *

மேலக்கோடி வீட்டுத் திண்ணையில் ஏற்கனவே மூன்று பேர் தயாராகக் காத்துக் கொண்டிருந்தார்கள். சிமாச்சுவய்யர் என்கிற சீனிவாச அய்யர் கையில் சீட்டுக் கட்டுடன் உட்கார்ந்திருந்தார். பஞ்சுவய்யரும், அப்பாத்துரை சாஸ்திரிகளும் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் தலைக்கு ஓர் ஏட்டைப் பிரித்து வைத்துப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

கிட்டாவய்யர் வந்ததும் சாஸ்திரிகள் பத்திரிகையிலிருந்து தலையைத் தூக்கி, ''ஐயர்வாள்! தெரியுமோ சமாசாரம்? பீகாரிலே பெரிய பூகம்பமாமே?'' என்றார்.

பஞ்சுவய்யர், ''அது என்ன, அவருக்குத் தெரியுமா என்று கேட்கிறீர்? பூகம்பத்தை உண்டாக்கினதே அவர் தானே? 'லலிதா தபால் ஆபீஸுக்குப் போனால் பூகம்பமா வந்துவிடும்!' என்று

''பாகிஸ்தானை நொறுக்கு'' (Crush Pakistan) என்று சென்னையில் எல்லா கார்களிலும் கல்லூரி மாணவர்கள் பலர் அச்சடித்த 'லேபிள்' ஒட்டினார்களே அது போல், இங்கிலாந்தில் கார்களில் இப்போதெல்லாம் ஒரு விநோத லேபிள் காணப்படுகிறது. 'போலீஸ்' என்ற வார்த்தை பெரிய கொட்டை எழுத்துக்களில் அந்த லேபிள்களில் காணப்படுகிறது. இந்த வார்த்தையைப் படித்ததுமே மற்றக் காரோட்டிகளும் பாதையைப் பயன்படுத்தும் இதர மக்களும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்கிறார்கள். ஆனால் அருகில் சென்று பார்த்தால் அந்த லேபிளில் 'போலீஸ்' என்ற வார்த்தைக்கு அருகே பொடியான சிறிய எழுத்தில் ''நான் ஏன் பயப்பட வேண்டும் போலீஸுக்கு? நான் ஏதும் குற்றம் செய்தால் தானே?'' என்ற வாசகம் காணப்படும்!

- சம்பத்குமார்

இவர் சம்சாரத்திடம் சொல்லிக் கொண்டே யிருந்தாராம். அடுத்த நிமிஷம் சீமாச்சு 'பீகாரிலே பூகம்பம்' என்று சொல்லிக் கொண்டு உள்ளே சென்றானாம். முனிபுங்கவரின் வாக்கு அந்த க்ஷணமே பலிதமாகி விட்டது!'' என்றார்.

''ஒரு காலத்தில் பிராமணனுடைய வாக்குப் பலித்துக் கொண்டுதான் இருந்தது. இப்போதெல்லாம் தலைகீழாகி விட்டது. நானும்தான் கேட்கிறேன். அந்தப் பெண் குழந்தை தபாலாபீசுக்குப் போகாவிட்டால் என்ன முழுகிப்போகும்? தபாலாபீசுக்குப் போக அய்யர் வீட்டில் ஆள் இல்லையா, தேள் இல்லையா?'' என்றார் சாஸ்திரிகள்.

சீமாச்சு ஐயர் குறுக்கிட்டு, ''ஆள் இல்லாவிட்டாலும் தேள் நிறைய இருக்கிறது. சட்! சும்மா இருங்காணும்! லலிதா தபாலாபீசுக்குப் போனதினால் என்ன முழுகிப் போய்விட்டது? அதைத்தான் சொல்லுமே? உலகம் எப்படியெல்லாம் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறது என்று உமக்குத் தெரியுமா?'' என்றார்.

''நீங்கள் இப்படி முன்னேற்றம், பின்னேற்றம் என்று பேசப் போகத்தான் ஊரிலே பூகம்பம் வருகிறது!'' என்றார் சாஸ்திரிகள்.

''நாம் இங்கே பேசுவதற்காகப் பூகம்பம் பீகாரிலே வருவானேன்?'' என்று கேட்டார் பஞ்சுவய்யர்.

''அந்தப் பூகம்பம் இங்கே வருவதற்கு எத்தனை நேரமாகும்? பகவான் திருவுளம் செய்தால் அடுத்த நிமிஷம் இங்கேயே வந்து விடுகிறது!''

''பூகம்பம் வருகிறதோ, இல்லையோ, மகாத்மா காந்தி நம்முடைய மாகாணத்துக்கு வரப் போகிறாராம்!'' என்று சொல்லிப் பஞ்சுவய்யர் பத்திரிகையில் போட்டிருந்த கொட்டை எழுத்துத் தலைப்பைக் காட்டினார்.

''எதற்காக வருகிறாராம் தெரியுமா? கோயில்களையெல்லாம் பறிதார்களுக்குத் திறந்து விடுவதற்காக வருகிறாராம். பூகம்பம் ஏன் வராது என்று கேட்கிறேன். பூகம்பம் மட்டும்தானா வரும்? பூகம்பம், புயற்காற்று, பெருமழை, பிரளயம், மகா பிரளயம் எல்லாந்தான் வரும். வந்து உலகமே அழிந்து போகும்!''

''ஓய்! சாஸ்திரிகளே! பஞ்சாதி சொல்கிற வாயினால் இப்படித் துர்வாக்குச் சொல்லி வைக்காதீர்! தப்பித் தவறிப் பலித்து வைக்கப் போகிறது!'' என்றார் பஞ்சுவய்யர்.


''அந்தப் பயம் நமக்கு வேண்டாம். அப்பாத்துரை சாஸ்திரிகள் வாக்குப் பலிக்கிறதாயிருந்தால் இந்த ஊர் இப்படியா இருக்கும்? 'தீர்க்க சுமங்கலீ பவ!' என்று இந்த மகான் எத்தனை பேருக்கு ஆசீர்வாதம் பண்ணியிருக்கிறார்! அவருடைய ஆசீர்வாதம் பெற்றவர்கள் எல்லாரும் சுமங்கலிகளாயிருக்கிறார்களா? இந்த ஊரில் மாஜி சுமங்கலிகள்தானே அதிகமாக இருக்கிறார்கள்!'' என்று சீமாச்சுவய்யர் சற்றுக் கிருதக்காகப் பேசினார்.

''இந்த வீண் வம்பு கிடக்கட்டும், சீமாச்சு! நான் உன்னிடம் ஒரு யோசனை கேட்பதற்காக வந்தேன்!'' என்றார் கிட்டாவய்யர்.

''முன்னமே சொல்லியிருக்கக் கூடாதோ? வா, உள்ளே போகலாம்'' என்று சீமாச்சு சொல்ல, இருவரும் உள்ளே கூடத்துக்குச் சென்றார்கள்.

பம்பாயிலிருந்தும் மதராஸிலிருந்தும் வந்திருந்த கடிதங்களைப் பற்றிக் கிட்டாவய்யர் விவரமாகச் சொல்லி, ''உன்னுடைய யோசனை என்ன?'' என்று கேட்டார்.

சீமாச்சுவய்யர் தம்முடைய அபிப்பிராயத்தைக் கூறினார். (தொடரும்)



CMTH-14-203 TAM


மூன்று மந்திரவாதிகள் 18
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ராமு
ஏழைத்தாயின் இதமான யோசனைப் படி பார்த்திபன் தன் பிரயாணத்தைத் தொடர்ந்தான்.
இந்தப் பொட்டல் வெளியில் தோன்றும் அந்தப் பசுமை சூழ்ந்த இடம் தான் அந்தப் பெண் குறிப் பிட்ட நந்தவனமாக இருக்க வேண்டும்.
அதோ புறாக்கள் வருகின்றன. இந்த வாவியை நோக்கித் தான் அவை வர வேண்டும். நான் எச்சரிக்கையாக இருக்கிறேன்.
மணிப்புறா மங்கையாக மாறுகிறதே, என்ன விந்தை? இதில் சிறிய புறா... அதோ அதாகத் தானிருக்க வேண்டும்.
குளித்து விட்டுச் சீக்கிரம் கிளம்ப வேணும். நீரில் விளையாடிக் கொண்டிருக்காதீர்கள்.
மணிப்புறாச் சகோதரிகளில் மூத்த இருவர் குளித்து உருமாறி உயரக் கிளம்பு கிறார்கள். கடைசிச் சகோதரி உருமாறும் தருவாயில் பார்த்திபன் அவள் இறகு அங்கியைப் பற்றிக் கொண்டு விடுகிறான்.
பெண்ணே, உன்னை நான் விடப் போவதில்லை.
ஐயா, என் சகோதரிகளுடன் நான் செல்ல வேண்டும். என்னை விடுங்கள், கெஞ்சிக் கேட்கிறேன்.
இளவரசே, நாங்கள் யார் தெரியுமா? நீங்கள் யாருக்கு அடிமையோ அந்தச் சசாங்கரின் பெண்கள் நாங்கள். என்னைப் போக விடாவிட்டால் உங்கள் உயிருக்கே ஆபத்து.
எனக்கு உதவுவதாக வாக்களித்தால் தான் உனக்கு விடுதலை அளிப்பேன்.


பெண்ணே! உயிர் ஆசையை நான் எப்போதோ மறந்து விட்டேன். அடிமையாக வாழுவதைவிடச் சுதந்திர மனிதனாக உயிர் விடுவதையே விரும்புகிறேன். நான் உன்னை விடப் போவதில்லை.
உங்கள் உறுதியைக் கண்டு வியப்படைந்தேன். இளவரசே! இதோ என் மோதிரம், முத்து மாலை, என் புற அங்கியில் ஓர் இறகு. இம்மூன்றையும் அளிக்கிறேன். இவை உங்களுக்கு உதவியாக இருக்கும்.
இவை எப்படி எனக்கு உதவி புரியும்? அதைச் சொல்ல வில்லையே பெண்ணே! அத்துடன் உன் பெயர்...?
என் பெயர் புவனா. ஆபத்துக் காலத்தில் இம்மூன்றில் ஒன்றை எடுத்து 'புவனா, புவனா! பறந்து வா என் உதவிக்கு' என்று மூன்று தடவை கூறினால் நான் அங்கு தோன்றுவேன். போதுமா?
புறாப் பெண் புவனா உருமாறிப் பறந்து போனாள்.
அதிசயமான பெண், அன்புள்ளங் கொண்டவள். அழகியும் கூட. ஆனால் அந்தக் கொடியவன் சசாங்கனின் மகளாக அல்லவா இருக்கிறாள்...ம்.
பார்த்திபன் துந்துபி நாட்டைத்தேடி நெடுந்தூரம் பிரயாணம் செய்தான். இடையில் எதிர்ப்பட்டதோர் ஆற்றைப் படகில் கடக்க முற்பட்ட போது...
படகு சுழலில் சிக்கியதைப் போலத் தடுமாறுகிறதே. என்ன ஆபத்தோ தெரிய வில்லையே.
ஐயோ! நீருள்ளிருந்து இதென்ன ராட்சசக் கை யொன்று படகைப் பற்றி உள்ளுக்கு இழுக்கிறதே...


மாயக்கரம் படகை உலுக்கி நீருக்குள் அழுத்தி மூழ்கடிக்கவே, அதிலிருந்த பார்த்திபன் நிலைதடுமாறி நீரினுள் தூக்கி எறியப் பட்டான்.
படகைக் கவிழ்த்த அந்த மாயக்கரம் நீரில் விழுந்த என்னைப் பற்றுமுன் நான் விரைவாக நீந்தித் தப்பிவிட வேண்டும்.
சசாங்கனால் அனுப்பப்பட்ட மாயக்கரத்துக்குரிய பயங்கர நீர் மனிதன் பார்த்திபனைத் தண்ணீருக்குள் இழுத்துக் கொண்டு எங்கோ போகிறான்.
ஆனால் பார்த்திபன் அந்த நீர் மனிதனோடு போராடி அவன் பிடியிலிருந்து விடுபட்டு நீர் மட்டத்துக்கு மேலே வருகிறான்.
அப்பாடா! அந்த அசுரப் பிடியிலிருந்து விடுபட்டு விட்டேன். அந்த நீர்ப் பிசாசு நீருக்குள்ளேயே இருக்குமா, கரை ஏறி இருக்குமா தெரியவில்லையே.
என்னைக் கொல்லவே சசாங்கன் இவனை அனுப்பி இருக்க வேண்டும். நல்ல வேளை தப்பி விட்டேன்.
அதோ தெரிகிறது ஏதோ ஒரு கட்டடம். ஒருவேளை அதுதான் துங்கபி நாட்டின் கோட்டையோ?

தொடரும்

இன்று—ராஜன் எடுத்த ரன்கள் 27. அடுத்து தங்கையுடன்
சைக்கிள் சவாரி. பின் முடித்தது வீட்டுப்பாடம்.
இனி—அடிக்கப்போவது மாங்காய்.



"என்ன இருந்தாலும் 'ஹார்லிக்ஸ்' தரும் முழுமையான ஊட்டச்சிறப்பே தனி"

என்கிறாள் ராஜனின் தாய்.

முழு ஆடைப்பால், செழுமையான கோதுமை இவை தரும் நிறைவான பயனும் புரதச்சத்தும் நிரம்பியது 'ஹார்லிக்ஸ்'.

அன்றாட உணவில் விட்டுப்போகும் ஊட்டக்குறையை 'ஹார்லிக்ஸ்' ஈடுசெய்து உடலுக்கு உறுதியும் அதிக சக்தியும் அளிக்கிறது.

80 ஆண்டுகளுக்கும் மேலாக டாக்டர்கள் சிபாரிசு செய்து வரும் 'ஹார்லிக்ஸ்' தாய்மார்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது.

'ஹார்லிக்ஸ்' அருந்துங்கள். தரமான சத்தும் அதிக சக்தியும் அளிப்பது அதுவே.



முழுமையான ஊட்டம்பெற—'ஹார்லிக்ஸ்'

'ஹார்லிக்ஸ்' பதிவு பெற்ற டிரேட் மார்க்.

HL. 2918A

யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்....தி பாம்பே மெயில் வில் பீ லீவிங் ஃப்ரம் பிளாட் ஃபாரம் நம்பர் ஸிக்ஸ் அட் நைன் ஃபார்ட்டி. — ஒலிபெருக்கி

அத்தியாயம் 26

சனிக்கிழமை.

இரவு ஒன்பது மணிக்கே மங்களாவும் ரேணுகாவும் ஆறும் பிளாட்பாரத்துக்கு வந்து விட்டார்கள். சனிக்கிழமை கல்கத்தாவுக்குப் போவதாக இருந்த ரேணுகா ஞாயிற்றுக் கிழமை இரவு போகத் தீர்மானித்தாள்.

பம்பாய் மெயில் ஒன்பது நாற்பதுக்குப் புறப்படுகிறது. இன்னும் நாற்பது நிமிடங்கள். அது நாற்பது கண் இமைக்கும் நேரங்களாக ஓடுவதாகத் தோன்றியது மங்களாவுக்கு. இந்த ஏழு நாட்களில் அவளுடைய வாழ்க்கையில் ஒரு சரித்திரமே அல்லவா நடந்து விட்டது! போன ஞாயிற்றுக் கிழமையிலிருந்து இந்தச் சனிக்கிழமை வரை நடந்ததெல்லாம் சொப்பனங்களாகத் தோன்றின. அவளுடைய வாழ்வில் கூடக் காதல் மலர்ந்திருக்கிறது. ஆனால் இந்த ரேணுகாவும் அந்த மணியும் இல்லாவிட்டால் அவள் இவ்வளவு சந்தோஷமாக இப்போது இந்த ஆறுவது பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருக்க முடியுமா?

''என்னடி, பரப்பிரும்மம் மாதிரி அசையாமல் நிக்கறே..?'' ரேணுகா சீண்டினாள்.



சென்ட்ரல்

''ஒன்றுமில்லே, ரேணு!''

''கவலைப்படாதே. இன்னும் ஒரு மாசத்திலே நீயும் இதே ரயிலில் ஏறப் போகிறாய்...''

''மாட்டேன்.''

''என்னடீ உளர்றே?''

''தாதர் எக்ஸ்பிரஸ் காலையிலே புறப்படுகிறது. டீஸல் என்ஜின்.... எடுத்த எடுப்பிலேயே வேகமாகப் போகும்... கரித் தூள் விழாது.... அதிலேதான்...''

''அதிலே, கூப்பே கம்பார்ட்மென்டில் போவியாக்கும்... உம்... போ...



பி.வி.ஆர்.

உனக்கென்ன... பாவம் அந்தக் கேதாரம்தான் மாட்டிக் கொள்கிறான்....''

திடீரென்று மங்களாவின் கண்ணிதழ்கள் கனத்தன.

''ரேணு!''

''என்னடீ...''

''எனக்கு என்ன சொல்றது, எப்படிச் சொல்றதுன்னே ஒண்ணும் புரியலையடீ.''

''எதைப் பத்தி?''

''நீ எனக்குச் செய்திருக்கிற உபகாரத்தைப் பத்தி!''

''எனக்கு வர்ற கோபத்தில் உன் கன்னத்தில் பளார்னு அறையணும் போல இருக்கு.''

''என் அப்பாவுக்குப் பத்தாயிரம் ரூபாய் கடன் கொடுக்கிற மாதிரிக் கொடுத்து, அவர்கிட்டேயிருந்து ப்ரோ நோட்டையும் எழுதி வாங்கி...''

''பேசாமல் இருடீ மங்களா!''

''அந்தப் புரோ நோட்டையும் கிழிச்சுப் போட்டாயே...''

''உஸ்...''

''நீ எனக்கு இவ்வளவு தூரம் செய்ய, நான் உனக்கு என்ன செய்து விட்டேன் ரேணு.''

''நீ என்னைவிடப் புத்திசாலியாக இல்லாமல் இருக்கிறாயே, அது போதாதா? மங்களா. இனிமேல் இந்தப் பணம், புரோ நோட், ஜம்புநாதனுக்கு என் பணத்தை உன் அப்பா கொடுத்துச் சரிக்கட்டினதை *யெல்லாம் இந்த க்ஷணத்திலே நீ மறக்கணும்... என்கிட்டே இருந்தது கொடுத்தேன்...அவ்வளவுதான்..''

''அதுக்கும் மனசு வரணும்.''

''உன் கேதாரத்தை எனக்கு என்னமோ பிடிக்கவில்லை!'' ரேணுகா பேச்சை மாற்றினாள்.

''அது என் அதிருஷ்டம்தான்.''

''என்னடி உளர்றே?''

''உனக்கும் பிடிச்சிருந்தால் என் கதி என்ன ஆகிறது...! கொஞ்சம் யோசித்துப் பார்... பணத்தை நீ வாரி வழங்கித் தியாகம் பண்ணி விடலாம். ஆனல் அவ்வளவு எளிசா காதலேத் தியாகம் பண்ணி விடுவாயா?''

''காதலா? கேதாரத்தையா? எந்த முட்டாளாவது கேதாரத்தின் மீது காதல் கொள்ளுவார்களா? உன்னைத் தவிர ..!''

''நீதாண்டி முட்டாள்.''

''எப்படிச் சொல்லறே?''

''நான் அவர் மீது காதல் கொண்டு விட்டேன்னு கணக்குப் போட்டியே!''

''புதன்கிழமையிலிருந்துதான் உன் முகத்தைப் பார்க்கிறேனே!''

''காதல் முகத்தை உனக்கு ரொம்ப அடையாளம் தெரியுமாக்கும்!'' மங்களா சிரித்தாள்

''சந்தேகமில்லாமல்..''

''நான் நாடகமாடினேண்டி, நாடகமாடினேன்.... எத்தனை நாட்கள்தான் என்கொயரி கௌண்டரில் உட்கார்ந்து வாய் கிழியச் சிரித்துப் பதில் சொல்லிக் கொண்டிருப்பது? பலான ரகங்களில் வருகிறார்கள். என்னென்னவோ சம்பந்தா சம்பந்தமில்லாமல் கேட்கிறார்கள்.... இன்னும் சிலர் என்னைப் பார்த்து இரண்டு வார்த்தை பேசுவதற்கென்றே வருகிறார்கள்....''

''ஆமாம்! நீ பெரிய ரம்பை... உன்னைப் பார்த்ததும் பேச ஓடி வருகிறார்கள்.... மங்களா, நீ என்னிக்குமே அழகு இல்லை.... ஏதோ கண்ணு கொஞ்சம் குறுகுறுப்பா இருக்கு. நிறமே இல்லை. உடம்பைப் பாந்தமா வைச்சுண்டிருக்கே. வீட்டிலே பழையசாதம் சாப்பிடுகிறயோ என்னவோ... உன்னை அழகின்னு எவனும் சொல்ல மாட்டான்...!''

''ரொம்ப நன்றி..... என்ன சொன்னேன்... ஆமாம், என்கொயரி வேலையும் அலுத்து விட்டது. வீடும் அலுத்து விட்டது. என் அப்பா ஜாதகம் பார்த்தால் ஏதாவது அப்பர் டிவிஷன் கிளார்க், ஸீனியர் ஸ்டெனோகிராபர்னு பார்ப்பார். அம்மா தன் அண்ணு பிள்ளையை நினைச்சு நினைச்சுப் புலம்புவாள். ரொம்பச் சாதாரணமாக இதுவரையில் நான் வாழ்ந்தாச்சு... இனி பெரிய அதிகாரி ஒருவருடன் வாழ்க்கையை நடத்தினல் தரித்திர வாழ்க்கை முடியும்னு திட்டம் போட்டுக் கொண்டிருந்தேன். என் அதிருஷ்டம் போன ஞாயிற்றுக்கிழமை நீ பம்பாய் மெயிலில் வரவில்லை. கேதாரத்தைச் சந்திக்கிற வாய்ப்புக் கிடைத்தது. அவரும் என்னைச் சுற்றிச் சுற்றி வருவதாகத் தோன்றியது. கொக்கியைப் போட்டேன். அவர் அதில் மாட்டிக் கொண்டார்!''

''ஓ, அப்படியா சங்கதி! மங்களா, உன் அப்பா மூலமா ஜம்புநாதன் கையிலிருக்கிற பத்தாயிரம் ரூபாய் செக், பம்பாய் செக்... ஒரு தந்தி அடித்தால் போதும், செக் சுவரிலே எறிஞ்ச பந்து மாதிரி திரும்பி வரும்... என்ன சொன்னுய் நீ? கொக்கி போட்டாயா... இரு இரு. இப்போ கேதாரமே வருவான், சொல்றேன்.''

''நீ அப்படி ஏதும் செய்ய மாட்டாய்னு எனக்குத் தெரியும்டீ, ரேணு.''

''அப்போ சொல்லு, இத்தனை நேரம் என்கிட்டே சொன்னதெல்லாம்...''

''டூப்தாண்டி!''

''அப்போ....''

''நீ...''

''நான்...''

''கேதாரத்தின் மேலே...''

''போடீ... பேசாமல் இரு... அதோ மணியும் எட்மண்டும் வருகிறார்கள்.''

* * *

ஒன்பதே கால்.

மணி அவர்களை நோக்கி வந்தான்.

''மிஸ் மங்களா! இந்த எட்மண்டுக்கு ஒரு ஸ்லீப்பர் பர்த் வாங்கிக் கொடுப்பதற்குள் என் தாவு தீர்ந்து விட்டது. எனக்கே இவ்வளவு சிரமம் இருந்ததுன்னு பொதுஜனங்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள்...?''

''என்ன செய்தாய்?''

''எமர்ஜன்ஸி கோட்டாவில் ஒரு வழியாய் வாங்கினேன்... இரு, இவனை ஏற்றிவிட்டு வந்து விடுகிறேன். எங்கே உங்கள் 'அவர்'?''

''இவளுடைய 'அவர்' இன்னும் வரவில்லை.... மிஸ்டர் மணி! நீங்கள் மிஸ்டர் எட்மண்டை ஏற்றிவிட்டு உடனே வாருங்கள். எனக்கு ஒன்று உங்களிடம் கேட்க வேண்டும்... ரொம்ப முக்கியம்'' என்றாள் ரேணுகா.

''ஓகே...''

மணி ஓடினன்.

''உண்மையிலேயே ரொம்பக் கெட்டிக்கார ஆசாமி!'' என்றாள் ரேணுகா.

''ஐயய்யோ...''

''என்னடீ மங்களா?''

''உன் முகம்... ஐயய்யே, நீ என் முகத்தைப் பார்த்து அடையாளம் கண்டு கொண்டாயே, அதே அடையாளம் இப்போ உன் முகத்திலே தெரியறதுடீ!''

''இன்னும் கொஞ்ச நாட்கள் மணியுடன் பழகினல் ஒருவேளை அந்த

சுயநலமற்ற சேவை

நிவாரண ஏற்பாடுகளை நிர்வகிப்பது, வியாபாரத்தை நிர்வகிப்பதைவிட அதிகப் பொறுப்பு வாய்ந்தது. இதற்குத் தேர்ச்சி மட்டுமின்றி, 'சுயநலமற்ற சேவை' என்னும் மனப்பான்மையினுல் உந்தப் பட்ட மக்களின் ஈடுபாடு மிக அவசியம். வெள்ளம், பஞ்சம் மற்றும் புயலினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேர்முகமான நிவாரணம் அளிப்பதற்காக முகாம்களிலிருந்து கொண்டு இன்முகத்துடன் செயல் பட வேண்டும்.

டாடா ஸ்டீலின் ஊழியர்களிடையே இத்தகைய சேவைக்கான தொண்டர்கள் பலர் உள்ளனர். கடந்த சில மாதங்களாக எங்கள் டாக்டர்கள், சமூகத் தொண்டர்கள் மற்றும் எஞ்ஜினீயர்கள் கொண்ட குழுவினர் பீகாரிலுள்ள கிஷன்கஞ்ஜ் என்னுமிடத்தில் முகாமிட்டுக்கொண்டு சுமார் 7000 பங்களா தேஷ் அகதிகளுக்கு வைத்திய சிகிச்சை, அதிகப்படியான போஷாக்கு, துணிகள் மற்றும் போர்வைகள் வழங்குதல், சுத்தமான குடிநீர் வசதி மற்றும் சுகாதார ஏற்பாடு இவைகளைச் செய்து வருகின்றனர்.

எங்கள் பலம் உறுதிமிக்க எஃகில் மட்டுமல்ல திறமை மிக்க ஊழியர்களிலும் உள்ளது



டாடா ஸ்டீல்

முகம் வரலாம்... ஆனால் இன்னிக்கு இல்லே'' என்றாள் ரேணுகா.

''மணி மாதிரி நல்லவர்களைப் பார்க்க முடியாதுடீ !''

''நல்லவர்கள் லட்சம் பேர்கள் இருக்கிறார்கள், மங்களா...! ஆனால் பிறர் மனசு அறிஞ்சு உபகாரம் செய்யறவர்களோ, துணிஞ்சு எதிலும் இறங்கி வெற்றி காண்பவர்களேயோ பார்ப்பது கஷ்டம். பாரேன், உன் மாமா பிள்ளையைத் தற்செயலாகப் பார்த்தான். அரக்கோணம் வரையில் அவனுடன் போய், அவன் பிராணனை எடுத்து, மறு நாள் அவனை உன் அம்மா முன்னாடி கொண்டு வந்து நிறுத்தினானே....இதுக்குத் தனிச் சாமர்த்தியம் வேணும்....''

''ரேணு....!''

''என்னடீ.....?''

''சொல்றேன்னு கோபிக்கக்காதே... கண்டிப்பா உன் முகம் சரியில்லே....''

'' அவன் எதிலே வேலையாக இருக்கிறான் ?''

'' தெரியாது.... ஏதோ டிராவல் ஏஜன்ஸியில் என்று நினைக்கிறேன்..... சரி, நீ மணித் தியானம் செய்ய ஆரம்பித்து விட்டாய்.... அதோ அவனே வருகிறான்..... நான் போகட்டுமா ?''

''போயேன், கேதாரம் வர்றதைப் பார்த்து விட்டாய். அதுதான், போகட்டுமான்னு கேட்கிறாய்!''

மணி வந்தான். அதே சமயத்தில் கேதாரமும் வந்தான்.

''மங்களா! நீ அவருடன் போ..... நான் ஐந்து நிமிஷத்தில் வருகிறேன் !'' என்ற ரேணுகா, ''மிஸ்டர் மணி !'' என்று அழைத்தாள்.

அவளுடைய தயக்கத்தை நொடியில் புரிந்துகொண்டான் மணி.

''யெஸ், மிஸ் ரேணுகா!''

''ரேணு என்றே அழைக்கலாம்.''

'' ஏதோ முக்கியமான விஷயம் சொல்லணும் என்றீர்களே!''

''இப்போ நீங்கள் வேலை பார்க்கிற இடத்தில் என்ன சம்பளம் கொடுக்கிறார்கள் ?''

மணிக்குத் தூக்கிவாரிப் போட்டது. விழித்தான்.

'' மன்னிக்கணும், இந்த மாதிரிக் கேள்வியைநான் கேட்டிருக்கக்கூடாது.''

''இல்லே... இல்லே.... எனக்குச் சம்பளம்னு எதுவும் கிடையாது....அப்பப்போ கிடைக்கிறதை வைச்சுண்டு காலம் தள்ளறேன்.... எனக்கு அப்பா, அம்மா, பெண்டாட்டி குழந்தை ஏதும் கிடையாது... அதனால் நானேயச் சாப்பாட்டைப் பற்றி இன்றைக்குக் கவலைப் படறதில்லே.... ஆமாம், இதைக் கேட்கத்தான் கூப்பிட்டீர்களா?''

''நீங்கள் மங்களாவிடம் பேசுவதைப் போல் என்னிடமும் ஏக வசனத்திலேயே பேசலாம்.....''

'' ரொம்ப நாட்களாக அவளைத் தெரியும்......'' மணி இழுத்தான். திடீரென்று ஒரு புது அநுபவம், இது வரை உணர்ந்தறியாத இன்ப அநுபவம் அவனுடைய தேகமெல்லாம் வியாபித்தது.

''தெரிந்து கொள்றதுக்கோ, புரிந்து கொள்றதுக்கோ ரொம்ப நாட்கள் பழக வேண்டும் என்றில்லே.... சில மணி நேரங்கள் போதும்.... அது சரி, நான் சொல்ல வந்தது.....''

''அதைச் சொல்லுங்கள்.''

'' பம்பாயில் புதுசா ஒரு யூனிட் தொடங்க விருக்கிறோம். அந்த யூனிட்டுக்கு நான்தான் சகலவற்றுக்கும் பொறுப்பு... அந்த யூனிட்டுக்கு ஒரு நல்ல, சுறுசுறுப்பு வாய்ந்த கெட்டிக்கார இளைஞன் தேவையாக இருக்கு..... மானேஜராக வேலே.....''

'' கொஞ்சம் டயம் கொடுங்கள். யோசித்து, இரண்டு மூன்று பெயர்களை விலாசத்துடன் தருகிறேன்.... நாளைக்குத் தந்தால் போதாது ?''

ரேணுகா சிரித்தாள்.

'' ஆயிரம் ரூபாய் சம்பளம், குடியிருக்க ஒரு ஃப்ளாட்.... ஆபீஸ் கார்.''

'' நாளைக்குச் சொல்றேன்.... ஜயராமன்னு ஒரு பயல் இருக்கான். எம்.காம். கெட்டிக்காரன்.....''

''பம்பாயிலே லட்சம் ஜயராமன்கள் இருக்கிறார்கள். உங்களால் வேலையை ஒப்புக்கொள்ள முடியுமா ?''

மணி அயர்ந்து போனான். அவனுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் வேலையா? மானேஜர் பதவியா? கார், ஃப்ளாட் வசதியா !

''மன்னிக்கணும், மிஸ் ரேணுகா இவ்வளவு பெரிய வேலையை ஏற்று, உங்களுக்குத் திருப்தியா உழைக்க எனக்கு அருகதையோ, சாமர்த்தியமோ போதாது. என்னை ரொம்ப உசத்தியா எடை போட்டு விட்டீர்கள்....''

'' நான் எடை போட்டால் அதில் தப்பே இருக்காது.... இது மாதிரி, நான் யாருக்குமே எங்கள் கம்பெனியில் வேலை தருவதாக வாக்குக் கொடுத்ததில்லே. இப்போ செய்கிறேன்என்றால்..''

'' நீங்கள் நினைக்கிற என் சாமர்த்தியம் மட்டும் காரணமாக இருக்க முடியும் என்று தோன்றவில்லே.... வேறு ஏதோ காரணமும் இருக்கிறது..அதை நீங்கள் சொல்லமாட்டீர்கள். மங்களாவிடம் நான் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறேன்.''

"நீங்கள் புரிந்து கொண்டுவிட்டீர்கள். இதை மறுத்துவிடாதீர்கள்!"

அவள் சொல்லி முடிக்கவும், முத்து வரவும் சரியாக இருந்தது.

"போகலாமா?" என்றாள் ரேணுகா.

"ஆகட்டும்" — மணி.

"நான் ஆபீசுக்கு ஒரு மாசம் நோட்டீஸ் கொடுத்தாச்சு" என்றான் முத்து.

"குமுதா என்னாச்சு....?" என்று கேட்டான் மணி நடந்து கொண்டே.

"நரசிம்மாச்சாரியை நினைச்சாத்தான் குலை நடுங்குகிறது....." என்றான் முத்து.

ரேணுகா சிரித்தாள். பிறகு, "மிஸ்டர் மணி!" என்று இழுத்தாள்.

"முதலில் 'மிஸ்டரை' 'கட்' பண்ணுங்கள்."

"கட் பண்ணுன்னு சொன்னாத்தான் 'கட்' பண்ண முடியும்."

"ஆகட்டும்...கட்...ப...ண்...ணு."

"மணி, நீங்களே இவன் விஷயத்தில் தலையிட்டு உதவி பண்ணுங்களேன்...."

"திங்கட்கிழமை வரேன், முத்து..."

முதல் வகுப்புப் பெட்டி அருகே சிறு கூட்டமே நின்று கொண்டிருந்தது. கணபதி, ஜம்புநாதன், மணி, முத்து, மங்களா, ரேணுகா, ஷங்கர், விசு, அனு, பாபு, கலியாணம், ரவி, கடைசியாக சுஜா எல்லோரும் குழுமியிருந்தார்கள். சீஃப் புக்கிங் கிளார்க் வைரக் கடுக்கன் ரங்காச்சாரி, முழுக்கை டெரிலின் ஷர்ட் பளபளக்க வந்தார். கணபதிக்கு வணக்கம் தெரிவித்தார்.

"குட் ஈவினிங் ஸார்!" என்றாள் மங்களா.

"அங்கே கவனி, மங்களா! என்னை இப்போது சட்டை செய்யாதே!" என்றார் வைரக் கடுக்கன்.

எல்லோரும் சிரித்தார்கள்.

"எட்மண்ட் ஏறிவிட்டானா?" என்று கேட்டான் கேதாரம்.

"ஓ!" என்றாள் மங்களா.

"உன்னைக் கேட்கவில்லை, மங்களா, என்னிடம்தான் கேட்டான் கேதாரம். இல்லையாடா? எட்மண்டை ஸ்லீப்பரில் ஏற்றிவிட்டேன்... தாதர் வந்ததும், நீபாட்டுக்கு, அதிகாரி ஜோரில் இறங்கிப் போயிடாதே.... அவனுக்கு பம்பாய் புதுசு.... நின்று காத்திருந்து அழைத்துக் கொண்டு போ... இப்போ உனக்குத் தலைகால் புரியாது..... ஏன் எனக்கே புரியலை...." என்றான் மணி.

"உனக்கு என்ன வந்து விட்டது..."

"என்னவெல்லாமோ....!" மணி ரேணுகாவின் பார்வையைத் தவிர்த்தான். அடுத்த கணம், "இருடா, அந்தக் கோதண்டராமன் போகிறான்..... அவனை இழுத்து வரேன்..." என்றான்.

"வேண்டாம்டா, மணி... அவன் எங்கே யாரைப் பார்க்கப் போகிறானோ....?" கணபதி தடுத்தார்.

கோதண்டராமன் ஒரு பெட்டியினுள் ஏறுவதைக் கவனித்தான் மணி.

"ஸார். அவனும் இந்த ரயிலில்தான் போகிறான்...... நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை 'ஆஃப்' போல இருக்கு..... குண்டக்கல்லுக்குப் போகிறான்!"

"பெண்டாட்டி ஞாபகம் வந்துவிட்டது" என்றார் கணபதி.

"கல்யாணம் ஆகிவிட்டால் வேறு யார் ஞாபகமும் வராதோ?" என்றான் மணி.

"உனக்கு அவசியம் தெரியணுமோ?" — ரங்காச்சாரி கேட்டார்.

"தெரிஞ்சுக்கணும் என்றாலும் உங்களிட்டேயிருந்து தெரிந்து கொள்ள முடியாது!" என்றாள் மங்களா.

"நான் சொல்றேண்டா, மணி!" என்றார் கணபதி.

"என்ன ஸார்?"

"நீ ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் பாரு..... அப்புறம் யார் ஞாபகம் வர்றதுன்னு தெரியும்."

"நீங்களே ஒரு பெண் பார்த்துக் கொடுங்கோ....."

"என் அப்பாவுக்கு அந்தச் சிரமம் கண்டிப்பாக இருக்கப் போவதில்லை!" என்ற மங்களா, "ரேணு, நீ என்னடீ சொல்லறே?" என்று இழுத்தாள்.

"கொஞ்சம் வாயை மூடிண்டு இரு" என்றாள் ரேணுகா.

முதல் மணி அடித்தது.

திடீரென்று எல்லோரும் திகைப்பில் மூழ்கும் வண்ணம் மேரி மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தாள்.

"அதோ மேரி." — மங்களா.

"பாவம்!" — கணபதி.

"நடையிலே என்ன நிதானம், பார்வையிலே என்ன அமைதி! ஒரு பெரிய துக்கச் சுமை அவளுடைய நெஞ்சிலே உறைஞ்சு கிடக்குன்னு யாராலாவது சொல்ல முடியுமா?" — மங்களா.

"சின்ன வயசிலே, முதிர்ந்த மனப் பக்குவம்!" என்ற ரங்காச்சாரி, "தன் துக்கத்தை, பிறர் முன்னிலையில் கொட்டி, அவர்களையும் துயரத்தில் ஆழ்த்தாமல் இருக்கிற பண்பு சாதாரணமா யாருக்கும் வராது மங்களா.... பிறத்தியாரிடம் துக்கத்தைச் சொல்லி இரக்கம் சம்பாதிக்கிறது தான் மனுஷ குணம்....."

"மன்னிக்கணும். நான் வரத் தாமதமாகி விட்டது!" என்று சொல்லி மங்களா அருகே நின்றாள் மேரி.

"எட்மண்டைப் பார்த்தாயா?" என்று மங்களா கேட்டாள்.


ASP/M/116

'' பார்த்தேன்.... இனிமேல் அவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியவள் நான் ஒருத்திதான்.... ஆனால் அதற்கும் இடமில்லாமல் நீ வைத்துவிட்டாய்! தாங்க்ஸ்....மங்களா! இனிமேல் அவன் பிழைத்துக் கொள்ளுவான்.''

''மேரி !''

''என்ன மிஸ்டர் மணி.''

''எலிஸா போய்விட்டாளா?''

இரண்டாவது மணி அடிக்க இரண்டு நிமிடங்கள் இருந்தன.

''யார் எலிஸா?'' என்று மேரி விழித்தாள்.

''எட்மண்டை வழி அனுப்ப வந்திருந்தாளே......''

'' நான் பார்க்கவில்லை. எலிஸா யாரினுகூடத் தெரியாது.''

'' பார்த்தால் தெரிந்து கொள்ளுவாய்.... நான்கைந்து மாதங்களில் இந்த எலிஸாவும் இந்த மெயிலில் போவாள்..... எட்மண்டை மறந்து அவளால் இருக்க முடியாது.''

மேரி சிரித்தாள். சலனமில்லாத மனத்திலிருந்து பளிச்சிடும் சிரிப்பு. '' முத்து கூடப் போகிறாராம்... எட்மண்ட் போகிறான். மங்களா போகப் போகிறாள்.... எல்லோருமே இந்த ரயிலில் போகிறார்கள். சென்ட்ரலில் நீயும் நானும்தான் இருக்கப் போகிறோம்....''

''ஸாரி, மேரி..... மிஸ்டர் மணியும் போய்விடப் போகிறார்.....''

மேரியிடம், ''நீயும் வந்துவிடலாம்!'' என்றாள் ரேணுகா.

''அப்புறம் நான் யாரை வைத்துக் கொண்டு இந்த சென்ட்ரலில் எஸ். எஸ். ஸாக இருப்பதாம்!... எல்லாரும் ஒரே நாளைக்குக் கிளம்புங்கள். ஸ்பெஷல் போகி 'அட்டாச்' பண்ணலாம்!'' என்றார் கணபதி.

இரண்டாவது மணி ஒலித்தது.

''மணி அடிச்சூட்டுதடா, கேதாரம்! ஜாக்கிரதையாகப் போ. கண்டபடி அலையாதே..... சனிக்கிழமை ஒரு கை எண்ணெயைத் தலையிலே வைச்சுக்கோ. நான் ஏதாவது தப்பா சொல்லியிருந்தால் மனசிலே வைச்சுக்காதே......!'' ஜம்புநாதன் கேதாரத்தின் அருகே வந்து கத்தினார்.

''டாடா !''

''டாடா.... டாடா.... டாடா....'' பல குரல்கள் ஒரே சமயத்தில் கத்தின. கைக் குட்டைகள் உயர எழுந்து ஆடின.

ரயில் நகர்ந்தது.

கேதாரம் வாயிற்படியில் நின்று புன்னகை புரிந்தான். மங்களாவைத் தேடினான். கடைசியில் அவள் கண்களைச் சந்தித்தபோது, அவனுடைய கண்களும் நீர் சுரப்பதை உணர்ந்தது. 'இன்னும் கொஞ்ச நாட்கள் தான் !' அவன் மனத்தினுள் முணுமுணுத்தான். அந்த முணுமுணுப்பு, இந்தக் கூட்டத்தில், அவனுடைய காதுக்கு மட்டும் கேட்கட்டும். கண்டிப்பாகக் கேட்கும்.

ரயில் வேகம் எடுத்தது. கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு மணி, ரயிலுடன் விரைவாகவே நடந்தான்.

''டேய், கேதாரம்.... நானும் மாட்டிக் கொண்டிருக்கிறேன் போலிருக்குடா.... ரேணுகா மானேஜர் வேலை கொடுக்கிறா.... இது எதுக்குடா ?''

''முட்டாள்! இதுகூடத் தெரியலையா? மடையா, பம்பாய் வந்து சேரு.''

இனிமேலும் ஓட முடியாது என்ற நிலை வந்ததும் மணி நின்றான். கூட்டம் கலைந்து கொண்டிருந்தது. வழி அனுப்ப வந்த எல்லோரும் திரும்பிக் கொண்டிருந்தார்கள். பழ வண்டிகள் திரும்பிக் கொண்டிருந்தன. போர்ட்டர்கள் அடுத்த பிளாட்பாரத்துக்கு விரையலானார்கள். ரயில்வே சிப்பந்திகள், ஒரு வண்டியை அனுப்பிவிட்டோம் என்ற திருப்தியில் திரும்பினார்கள்.

தூரத்தே கணபதி, ரங்காச்சாரி, மங்களா, முத்து, மேரி போய்க் கொண்டிருப்பது தெரிந்தது.

மணி நடந்தான்.

ரேணுகா மட்டும் தனியாக நின்று கொண்டிருந்தாள். அவள் கூட்டத்துடன் ஏன் போகவில்லை? ஏன் இன்னும் அங்கேயே நிற்கிறாள் ?

அவன் மடையன். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''ஹலோ ரேணு, ஏன் நின்றுவிட்டாய் ?''

''நிற்கவில்லையே? காத்துக் கொண்டிருக்கிறேன்......''

''போகலாமா!''

''ஓ, யெஸ்.....!''

'' நான் முடிவுசெய்துவிட்டேன்.''

ரேணுகாவின் நெஞ்சம் படபடத்தது.

''நான் பம்பாய் வரப்போகிறேன்..''

''ஓ, ரொம்ப நல்ல முடிவு. ஆரம்பமே நல்ல முடிவு....''

'' இந்த முடிவுக்கும் ஒரு நல்ல ஆரம்பம் இருக்கப் போகிறது! இல்லையா, ரேணு.''

'' அதற்காக நான் தெய்வத்தைப் பிரார்த்திக்கிறேன், மணி.''

''தனியாகப் பிரார்த்தனை செய்தால் போதாது, ரேணு.''

''இரண்டு பேருமாகப் பிரார்த்தனை செய்வோம்.......''

''ஆமாம்....இரண்டு பேருமாக..... இரண்டு பேருமாக.... இரண்டு பேருமாக......''

இரு உருவங்கள் ஓர் உயிராக நடந்தன.

முற்றும்


NEW! SUPER
Surf
ஒரே ஒரு சலவையில்
ஸூப்பர் ஸர்ஃப்,
வேறெந்த சலவைப்
பவுடரையும் விட
அதிக வெண்மை தருகிறது!
அமோகமான சலவைத் திறன் படைத்தது ஸூப்பர்
ஸர்ஃப். கணமறைவான அழுக்குகளையும் அகற்றிவிடும்.
காண்போர் பொறாமைப்படும் கற்பனை கடந்த
வெண்மை. கேட்பானேன், இந்தியாவின் தலைசிறந்த
ரகம்: ஸூப்பர் ஸர்ஃப்!
ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர்ஸர்ஃப்



மௌண்ட் ரோட்டில் உள்ள பிரபல துணிக்கடை ஒன்றில் அன்று தான் அசல் ஆள் உருவத்துக்கு நான்கு பொம்மைகளை நிறுத்தி பெனாரஸ், காஞ்சீபுரம், டெரீன், சின்னாளப்பட்டி புடவைகளைச் சுற்றி அலங்காரம் செய்து கண்ணாடி அடைப்புக்குள் விளம்பரம் செய்ய ஆரம்பித்திருந்தார்கள். பொம்மைகளை உருவாக்கிய கலைஞன் தன் கைத்திறமையைப் பூரணமாகக் காண்பித்திருந்தான். பம்பாய், தில்லி போன்ற நகரங்களில் அழகுப் போட்டிகளில் பங்கு கொள்ளும் நவீன நாகரிக அலட்சிய பாவ மங்கையரின் முகங்கள் போலல்லாது அசல் தமிழ் நாட்டுப்' பாணியில் நாணம் கலந்த புன்னகையையும் அடக்க பாவத்தையும் கலந்து அந்தப் பொம்மைகளின் முகங்களில் களையை ஏற்றியிருந்தான். 'நமக்குத் தெரிந்த நான்கு பெண்மணிகள் அந்தக் கடை முகப்பில் நின்று நம்மை வரவேற்பது போல்' பார்ப்பவர்களுக்கு ஒருவித பிரமையைத் தோற்றுவிக்கும் அழகும் அன்னி

ஒரே முகூர்த்தம்

கல்யாணக் கதைகள் – 3

யோன்யத் தன்மையும் அந்தப் பொம்மைகளின் கண் விழிகளில் கலந்திருந்தன.

அந்தப் பக்கம் இருந்த உடுப்பி ஹோட்டலுக்கு டிபன் சாப்பிட வந்த முரளீதரன் பார்வையில் அந்தப் பொம்மைகள் விழுந்தன. டிபன் சாப்பிடப் போக வேண்டியதை மறந்து ஐந்தாவது பொம்மையாக அவன் நின்று விட்டான். காஞ்சீபுரம் பட்டுப் புடவையைத் தன் மேல் தாங்கிக் கொண்டிருந்த அந்த இரண்டாவது பொம்மை தன் பக்கம் அவன் கவனத்தை மொத்தமாகக் கவர்ந்தது.

கோமதிஸ்வாமிநாதன்

கற்பனைகளில் மிதக்க உரிமை பெற்ற கட்டைப் பிரம்மச்சாரிதான் முரளீதரன். வசீகரமான தோற்றம். தேசிய மயமாக்கப் பட்ட பெரிய பாங்கி ஒன்றில் பொறுப்பான உத்தியோகம். கணிசமான சம்பளம். ஆனால் 'கல்யாணம்' என்ற பேச்சை எடுத்தவுடன் அவன் மனத்தில் அவனை அறியாமல் ஒரு பயம் ஏற்பட்டு விடும். ஏழெட்டுக் குழந்தைகளுடன் ஒண்டுக் குடித்தனத்தில் குழாய்ச் சண்டை போடும் ஒரு மனைவியின் கணவன்தான் அவன் மனத் திரையில் தோன்றுவானே தவிர, ஜோடியாகக் கைகோத்துக் கொண்டு நடைபாதையில் நடக்கும் இளம் தம்பதிகளின் நினைவு அவனுக்கு வரவே வராது. இந்த மாதிரி காரணமற்ற பயங்களினால் அவன் தன் கல்யாண நினைவை ஒதுக்கியே வைத்திருந்தான். இரண்டு வருடங்களாக இந்த விஷயத்தில் அவனைத் துளைத்துக் கொண்டிருந்த அவன் தகப்பனார் பரசுராமனும் இப்போது ஒதுங்கிவிட்டார். தஞ்சாவூர்ப் பக்கத்தில் சொந்த கிராமத்தில் அவர் ஒரு சுகவாசி.

துணிக் கடைப் பொம்மை முரளி மனத்தில் கிளர்ச்சியை உண்டாக்கியது. 'இப்படி

'சிம்பிள்' அழகாக ஒரு பெண் இருந்தால் எனக்குக்கூடக் கல்யாண ஆசை வந்துவிடும் போலிருக்கே' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு டிபன் சாப்பிடப் போனான். அன்று அவன் சாப்பிட்ட ஸ்வீட்டைவிட அந்தப் பொம்மையின் அழகு உருவம் வெகு ஸ்வீட்டாக இருந்ததுபோல் அவனுக்கு ஒரு கிளுகிளுப்பு.


வேலை முடிந்ததும் வீடு திரும்ப அவன் பிளாஸா தியேட்டர் வாசலுக்குத்தான் வர வேண்டும். கோடம்பாக்கத்தை அடுத்த மகாலிங்கபுரத்தில் அவனுக்கு ஜாகை. ஹோட்டல் வாழ்க்கை ஒத்துக் கொள்ளாது என்ற நிலையில் ஒன்றுவிட்ட சகோதரியின் குடும்பத்தோடு ஒன்றி விட்டிருந்தான்.



அன்று மாலை அவன் சாந்தி தியேட்டர் வாயிலிலுள்ள, மயிலாப்பூர் நோக்கிப் போகும் பஸ்கள் நிற்கும் ஸ்டாப்பைக் கடந்து அடுத்தாற்போல் உள்ள பிளாஸா தியேட்டர் வாசலுக்குப் போகும் நேரத்தில்தான் அந்த அற்புதம் நிகழ்ந்தது. மயிலாப்பூர் போவதற்காக நிற்கும் அந்த 'க்யூ' வரிசையில் சற்றுமுன் அவன் பார்த்த துணிக் கடைப் பொம்மை— அதிலும் காஞ்சிபுரம் புடவையைக் கட்டிக் கொண்டிருந்த பொம்மை — நின்று கொண்டிருந்தது. ''ஐயையோ! இது என்ன ஒற்றுமை! மாயமா? மந்திரமா? என்னை யாராவது மனோவசியப்படுத்தி வேடிக்கை பார்க்கிறார்களா?'' என்று திகைத்தாலும் நாகரிகக் குறைவாக நடையைத் தளர்த்திக் கொள்ளவில்லை. ஆனாலும், அந்தக் கணத்தில் அவன் கவனிக்க வேண்டியதைக் கவனித்து விட்டான். அந்த உயிர்ப் பொம்மையின் கழுத்தில் ஒரு சிறு தங்கச் சங்கிலி மாத்திரம்தான் இருந்தது. மஞ்சள் கயிறு இல்லை. கால் விரல்களையும் பார்த்துவிட்டான். மெட்டி இல்லை. கூட நின்று கொண்டிருந்த அம்மாள், ஆடம்பரம் இல்லாமல் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவளாகக் காணப்பட்டாள். முதலில் முயற்சி செய்து சில விவரங்களைச் சேகரித்துக் கொண்டால், பிறகு தன் தகப்பனாரின் ஆசையையும், தன் கல்யாணத்தின் மூலம் நிறைவேற்றி வைக்கலாம் என்ற முடிவுக்கு, அந்தக் க்யூ வரிசையின் முடிவுக்கு வருமுன்பே வந்துவிட்டான். மயிலாப்பூர் நோக்கிச் செல்லும் பஸ்ஸுக்கான ஜன வரிசையில் இடம் பிடித்துக் கொண்டான். இந்தப் புதுப் பிரயாணத்துக்குக் காரணமாக இருப்பவர்கள் எந்த இடத்தில் இறங்குவார்கள் என்று தெரியாதே ! ராயப்பேட்டையா ? லஸ்ஸா ?







"எங்கள் வீட்டு வேலைக்காரியின் வெள்ளி விழாக் கொண்டாடுறோம்."
"அவள் உங்கள் வீட்டில் 25 வருடங்களாக வேலை செய்கிறாளா?"
"இல்லை; 25 - வது வேலைக்காரி, இவள்!"

குளமா? இல்லை, மந்தைவெளியா? ஆகவே, எதற்கும் முன் ஏற்பாடாக மந்தைவெளிக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டான்.

பஸ்ஸும் வந்தது. முன்னால் நிற்பவர்கள் ஏறிய பஸ்ஸிலேயே அதிருஷ்டவசமாக இவனுக்கும் இடம் கிடைத்தது. அப்படிக் கிடைக்காமற் போனால் என்ன செய்வது என்று யோசிக்கவே அவன் பயப்பட்டுக் கொண்டிருந்தான்.

பஸ்ஸில் ஏறியாயிற்று. பஸ்ஸின் நடுவில் மாட்டிக் கொண்டான். தன் கனவுக் கன்னி எந்த ஸ்டாப்பில் இறங்குகிறான் என்று கவனித்துக் கொண்டிருக்க வேண்டுமே! கண்டக்டரோ நாகரிகக் குறைவாக, முன்னால் போகும்படி மொத்தமாகத் திட்டிக் கொண்டிருந்தான்.

ஆஸ்பத்திரி ஸ்டாப்பில் அவர்கள் இறங்கவில்லை. பொம்மையின் தலை தெரிந்தது. அடுத்தாற்போல் ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் ஸ்டாப். அவர்கள் இறங்க முயன்றது முரளிக்குத் தெரிந்தது. அவர்களைத் தொடர்ந்து முன் பக்கமாக இறங்கலாம் என்றால் அவன் பஸ் நடுவில் மாட்டிக் கொண்டிருந்தான். பின் பக்கம் வரலாம் என்றால் ஒரே பெண்கள் மயம். முன் பக்கம் முயற்சி செய்தான். அதற்குள் இறங்குமிடத்தில் ஒரு சிறு சலசலப்பு; வாய்ச் சண்டை! வேடிக்கை பார்த்தவர்கள் வழியை அடைத்துக் கொண்டார்கள். ஒரு தினுசாக முட்டி மோதிக் கொண்டு முரளி முன் பக்கமாக பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கியபோது அவன் கோட்டை விட்டிருந்தான். அவன் யாருக்காக அவ்வளவு தூரம் வந்தானோ, அவர்கள் மாயமாய் மறைந்து விட்டிருந்தார்கள்.

அந்த இடத்திலிருந்து இரண்டு மூன்று தெருக்கள் பிரிகின்றன. எதில் என்று போய்த் தேடுவது? அவர்கள் எந்த வீட்டில் வசிக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டு, அதைத் தன் சகோதரியின் கணவனிடம் சொல்லி மேலே விசாரிக்கச் சொல்ல வேண்டும் என்பது முரளியின் திட்டம்.

ஆனால் இப்போது எப்படிச் சகோதரியின் கணவனிடம் விஷயத்தைச் சொல்வது?

அதிகமாக யோசித்துக் கொண்டு மலைத்து நிற்காமல், எதிர்த்தாற்போலிருந்த தெருவுக்குள் புகுந்து நடந்தான். கடைசிவரையில் நடந்து திரும்பினான். வியர்த்தம். அவன் லட்சியக் கன்னி, எந்த வீட்டு வாசலிலும் ஜன்னலிலும் தென்படவில்லை.

மறு நாளிலிருந்து தினசரி மாலை வேளைகளில் ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் பஸ் ஸ்டாப் பகுதியில் ஒவ்வொரு தெருவாகக் கவனத்துடன் நடை பழக ஆரம்பித்தான். முரளி. முதல் ஆறு நாட்களில் எவ்வித பலனுமில்லை. ஏழாவது நாள் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

முரளியின் ஊர்க்காரரும் பரசுராமனின் ஆப்த நண்பருமாகிய அனந்தராமன் கண்களில் அகப்பட்டு விட்டான் முரளி.

"மாமா! நீங்க எங்கேயோ அடையாறு பக்கம் வீடு கட்டிக் கொண்டிருப்பதாக அப்பா சொன்னாரே" என்றான் முரளி.

"அதை வாடகைக்கு விட்டு விட்டேன். மூன்று வருஷமா இங்கேதான் இருக்கேன். நேற்றே நீ பஸ்ஸிலிருந்து இறங்கும்போது கவனித்தேன். ஆனாலும் எனக்குச் சந்தேகம். இன்றைக்கு ஊர்ஜிதமாயிற்று. ஏண்டா முரளி! இங்கே எங்கேடா தினமும் சுற்றிக் கொண்டிருக்கிறாய்? நீ எங்கேயோ மகாலிங்கபுரத்தில் இல்லையோ?" என்று கேட்டு வைத்தார் அனந்தராமன்.

ஒரு சிநேகிதனைத் தேடி வந்ததாக அனந்தராமனிடம் சமாளித்து விட்டுத் திரும்பினான். இன்னும் நான்கு நாட்கள் ராயப்பேட்டை யாத்திரையை மனத்தாங்கலுடன் நிறுத்தி வைக்கத் தீர்மானித்தான்.

ஆனால் அனந்தராமன் நான்கு மணி நேர காலம்கூடத் தன் எண்ணத்தை நிறைவேற்றுவதை ஒத்திப்போடவில்லை. அன்றிரவே பரசுராமனுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார். பையன் முரளி அசடு வழியத் தெருக்களைச் சுற்றுவதாகவும், தனக்குத் தெரிந்த இரண்டு மூன்று இடங்களில் நல்ல பெண்கள் இருப்பதாகவும், பரசுராமன் முரளிக்குத் தெரியாமல் அனந்தராமன் வீட்டுக்கு வந்து ஏதாவது ஓர் இடம் திருப்திகரமாக இருந்தால் நிச்சயம் செய்துவிடலாம் என்றும் அவசரமாகவே எழுதினார்.

கடிதம் கிடைத்த மறுநாளே பரசுராமன் அனந்தராமன் வீட்டுக்கு வந்துவிட்டார்! முரளிக்கு விஷயம் தெரியாது.

நான்கு நாட்கள் கழித்து ஒரு ஞாயிற்றுக்கிழமை. காலை சுமார் பத்து மணிக்குப் பரசுராமன் வெற்றிலை பெட்டியும் கையுமாக மகாலிங்கபுரத்துக்கு வந்தார். முரளி வீட்டில்தான் இருந்தான்.

"என்னப்பா! எப்ப வந்தீங்க! பெட்டி படுக்கையெல்லாம் எங்கே? இப்போது எது ரயில்?" என்று சரமாரியாகக் கேட்டான் முரளி.

"நான் மெட்ராஸ் வந்து நாலு நாளாச்சுடா!... டேய் முரளி! சாயங்காலம் உனக்கு ஒன்றும் எங்கேஜ்மெண்ட் இல்லையே! மூணு மணிக்கு மேலே என்கூட ஒரு இடத்துக்கு வர முடியுமாடா?" என்று சகஜமாகக் கேட்டார். பட்டிணத்துக்கு வந்தால் பரசுராமன் இசைத்





SALOFEN



கடலும் மலையும்

கடலும் மலையும் சந்தித்துக்கொண்டன.

கடல்: ஹூம். என்ன இருந்தாலும் உனக்குத்தான் நல்ல பெயர்!

மலை: ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

கடல்: 'மலை'போல் நம்புகிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால் 'கடல்'போல் நம்புகிறேன் என்று சொல்வதில்லையே!

மலை: அப்புறம்?

கடல்: 'ஹிமாலயன் டாஸ்க்' என்று சொல்கிறார்கள். ஆனால் 'பசிபிக் டாஸ்க்' என்று சொல்வதில்லையே! இத்தனைக்கும் உன்னைவிட நான் எந்த விதத்திலும் குறைந்தவனல்ல.

மலை (சிரித்து): ஏன் சொல்லட்டுமா? நீ எப்போதும் பேரிரைச்சல் போடுகிறாய். நான் அமைதியாக இருக்கிறேன்.

-விதுரன்

துறையில் உள்ள தன் நண்பர்களில் சிலரைப் பார்க்காமல் போக மாட்டார். அவர் ஓர் இசை ரசிகர்.

''ஓ எஸ்! போகலாமே'' என்றான் முரளி.

''உங்க அக்கா பார்வதிகிட்டேயும் சொல்லி விடு. அவளும் கூட வரவேண்டும்'' என்றார் பரசுராமன்.

இப்பொழுதுதான் முரளி திடுக்கிட்டான். ''பார்வதியா? நாம் எங்கே போகிறோம்?'' என்று துணிந்து கேட்டான்.

''உனக்குப் பெண் பார்க்க! அதாவது 'அபீஷியலா' பெண் பார்க்க. நான் 'அன் அபீஷியலா'கப் பார்த்துவிட்டேன். இப்போ எனக்குக் கவலையெல்லாம், அவள் உன்னைப் பார்த்துவிட்டுச் சம்மதம் என்று சொல்ல வேண்டுமே என்பதுதான்! சார்மிங் கேர்ல். கிராஜுவேட்....'' என்று சொல்லிக் கொண்டே போனார்.

''அப்பா!'' என்று குரலை உயர்த்தி, சீறி எழுந் தயாரானான் மகன்.

பரசுராமன் கையை அமர்த்தினார். ''இந்தாடா! ராயப்பேட்டைக்கு வந்து பெண்ணைப் பாரு! அப்புறம் எக்கேடு கெட்டுப் போ! நான் உன்னை வற்புறுத்த மாட்டேன்! அனந்தராமனுக்குத்தான் இந்த இடத்துச் சம்பந்தத்தை விட்டு விடக் கூடாது என்ற ஆசை. எல்லாப் பொருத்தங்களும் சரியாக அமைந்திருக்கின்றன. அவன் திருப்திக்காகவே மெட்ராசுக்கு வந்தேன்'' என்றார் பரசுராமன்.

'ராயப்பேட்டை' என்ற வார்த்தை ஏதோ மாயாஜால மந்திரமாக மாறி அவனை மௌனமாக்கி விட்டது. ஒருவேளை தான் தேடிக் கொண்டிருந்த பெண்ணாகவே இருக்கலாமே! ஆயிரத்தில் ஒரு சான்ஸ்தான்! ஒருவேளை வேறு இடமாக இருந்தால் வேண்டாம் என்று சொல்லி விட்டால் போச்சு!

அன்றைக்கு வெகு சிரத்தையாக டிரஸ் செய்து கொண்டான். பரசுராமனுக்கே ஆச்சர்யமாக இருக்கிறது.

பெண் பார்க்க அனந்தராமனின் வீட்டிலிருந்து நடையாகவே கிளம்பினார்கள். பக்கத்துத் தெருதான். முரளியின் மனம்தான் பக்பக்கென்று அடித்துக் கொண்டிருந்தது.

பலத்த உபசரிப்புடன் வரவேற்புக் கிடைத்தது. பெண் வீட்டார் வசதி உள்ளவர்கள் என்று வீட்டிலிருந்த சாமான்களே அறிவித்தன. பெண்ணின் தகப்பனார் ஒரு வழக்கறிஞர்; பிரபலமானவர்.

கல்யாணப் பெண் வரும் மேடை தயார். முன் திரை இன்னும் உயர்த்தப்படவில்லை. முரளி பொறுமையை இழந்து கொண்டிருந்தான். அன்று பஸ் ஸ்டாப்பில் கூட நின்ற அம்மாளாவது எங்காவது தென்படுவாளா என்று பார்வையை ஓட்டினான். ஊஹூம்! அந்த அம்மாளைக் காணவே காணோம்.

கடைசியில் கல்யாணப் பெண் உள்ளேயிருந்து வந்தாள்.

முரளி துணிவுடன், வெட்கப்படாமல் நிமிர்ந்து பார்த்தான்.

அந்தப் பெண் இல்லை!

இவள் வேறு பெண்! ஆனாலும் இவளும் அப்ஸரஸாக இருந்தாளே!

வந்து அமர்ந்தவள் வீணையை எடுத்து மீட்ட ஆரம்பித்தாள். என்ன ஆனந்தமயமான இசை வெள்ளம்!

முரளி ஒரு கணம்தான் யோசித்தான். 'கையில் இருக்கும் பறவை புதரிலிருக்கும் இரண்டு பறவைகளுக்குச் சமம்' என்ற ஆங்கிலச் சொற்றொடர் அவனுக்கு நினைவு வந்தது. சம்மதம் என்று சங்கேதமாகத் தகப்பனாருக்குத் தெரிவித்து விட்டான். 'நான் என்ன காதலா பண்ணினேன்' என்று தன்னைத் தானே சமாதானமும் செய்து கொண்டான்.


முரளியின் திருமணம் ஏற்பாடாகி யிருந்த கல்யாண மண்டபத்தில் ஒரே சமயத்தில் இரண்டு கல்யாணங்கள் நடத்த வசதி உண்டு. முரளியின் ஜானவாசம் முடிந்து இரவுச் சாப்பாட்டுக்கு முன்னும் மற்றொரு ஜானவாச ஊர்வலமும் அதே மண்டபத்தின் மற்றொரு பகுதியை நோக்கிச் சென்றது. இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் முரளி. அந்த ஊர்வலத்தில் அவன் அன்று ராயப்பேட்டையில் பஸ்ஸிலிருந்து இறங்கிய பெரிய அம்மாளையும் பார்த்தான். தான் இப்போது ஒரு மாப்பிள்ளை ஸ்தானத்தில் இருக்கிறோம் என்பதையும் மறந்து, கூடவே அந்தப் பொம்மை அழகியும் வருகிறாளா என்று பார்வையை ஓட்டினான்; இல்லை.

மறுநாள் அவளைப் பார்த்தான். சாதாரணமாக இல்லை. மணக் கோலத்தில்! அந்தப் பெண்ணுக்குத்தான் மறுபகுதி மண்டபத்தில் திருமணம்! கிருஹப் பிரவேசத்துக்காக அந்தத் தம்பதி கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

''எங்கள் இருவருக்கும் ஒரே முகூர்த்தத்தில் திருமணமா? இதுவும் விசித்திரம்தான்'' என்று நினைத்துக் கொண்டான் முரளி.

அந்தப் பெண் மேற்கு மாம்பலத்தில் இருப்பதாகவும் அன்று ராயப்பேட்டையில் உறவுக்காரர்களைப் பார்க்க வந்ததாகவும் பிறகு விசாரித்துத் தெரிந்து கொண்டான்.

(சம்பவங்கள் உண்மை; பெயர்கள் மட்டும் மாற்றப்பட்டுள்ளன.)


மகிழ்ச்சிதுள்ளும்
வளமான வாழ்வு
கிராமங்களிலே...
ராக்ஃபோர்ட் டால்மியா சிமெண்ட்
உறுதியான எதிர்காலத்திற்கு எழுப்பப்படும்
இன்றைய கட்டடம்.
டால்மியா சிமெண்ட் (பாரத்) லிட்.
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் தொழிற்சாலை
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
தலைமை அலுவலகம்: 4, சிந்தியா ஹவுஸ், புது டெல்லி 1.
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிட்.
டால்மியாபுரம், (தமிழ்நாடு).



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் எண்பத்தேழு

புலவரின் திகைப்பு

அருள்மொழிவர்மருக்குத் திருமுடி சூட்டு விழா நெருங்க நெருங்க, சோழ நாடு முழுவதும் ஒரே கோலாகலமாகி வந்தது. பொன்னியின் செல்வருக்குப் பொன்முடி சூடுவது குறித்து மக்களிடையில் மாறுபட்ட அபிப்பிராயமே காணப்படவில்லை. சோழ நாட்டு ஆண்கள், பெண்கள், வயோதிகர்கள், குழந்தைகள், நகர மாந்தர், கிராமவாசிகள், வர்த்தகர்கள், உழவர்கள் அனைவரும் ஒருமுகமாகப் பொன்னியின் செல்வருக்கு முடிசூட்டுவதைக் குதூகலமாக வரவேற்றார்கள். அவர் பிறந்த வேளையைப் பற்றியும், அவர் முகத்தின் களையைப் பற்றியும், அவருடைய இனிய குண நலங்களைப் பற்றியும், குடிமக்களிடம் அவர் கலந்து பழகும் அருமைப் பண்பைப் பற்றியும் அனைவரும் சொல்லிச் சொல்லி வியந்து மகிழ்ந்தார்கள்.

இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்கத் தசரதர் முடிவு செய்துவிட்டார் என்று அறிந்ததும் அயோத்தி மக்கள் எல்லாரும் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பதை இராம காதை நன்கு வர்ணிக்கிறது.

வயது முதிர்ந்த பெண்மணிகள் எல்லாரும் கோசலையைப் போல் ஆகிவிட்டார்களாம். தத்தம் புதல்வர்களுக்கே மகுடாபிஷேகம் ஆகப் போவதாக எண்ணி மகிழ்ந்தார்களாம். இளம் பெண்கள் எல்லாரும் சீதாதேவி அடைந்த ஆனந்தத்தைத் தாங்களும் அடைந்து, தத்தம் கணவன்மார்களுக்கே முடிசூட்டப் போவதாகக் கருதித் தங்களை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டார்களாம். அயோத்திமா நகரத்தில் வாழ்ந்த முதிய பிராயத்து ஆண்மக்கள் எல்லாரும் தசரதனைப் போல் ஆகிவிட்டார்களாம்.

மாதர்கள் வயதின்மிக் கார்
கோசலை மனத்தைஒத் தார்;
வேதியர் வசிட்டன்ஒத் தார்
வேறுள மகளிர்எல் லாம்
சீதையை ஒத்தார்; அன் னாள்
திருவினை ஒத்தாள்; அவ் ஊர்
சாதன மாந்தர்எல் லாம்
தயரதன் தன்னைஒத் தார்

என்று அயோத்தி மக்களின் மனநிலையைக் கம்ப நாடர் அற்புதமாகச் சித்திரித்திருக்கிறார்.

அவ்வாறு அயோத்தி மக்களின் உள்ளன்பையும் நன்மதிப்பையும் அடைவதற்கு இராமர் என்ன அருஞ்செயல் புரிந்திருந்தார்? அவருடைய கோதண்டத்தின் மகிமையெல்லாம் பிற்காலத்தில் அல்லவா வெளியாவதற்கு இருந்தது? இராவணன் முதலிய இராட்சதர்



கரனை வதம் செய்து மூன்று உலகங் களுக்கும் பயத்திலிருந்து விடுதலை அளித்த பெருமை பின்னால் அல்லவா அவரைச் சேர்வதாக இருந்தது? விசுவாமித்திர முனிவரோடு சென்று அவருடைய யாகத்தைப் பூர்த்தி செய்வித்துவிட்டு வந்தார் என்பது அயோத்தி மக்களுக்கு அவ்வளவாக இராமருடைய பெருமையை உயர்த் திக் காட்டியிராதல்லவா? ஏன்?



விசுவாமித்திரர் திரும்பி அயோத்திக்கு வந்து அதைச் சொல்லக்கூட இல்லையே?

இந்த உலகில் சிலர் செயற்கரிய வீரச் செயல்களும், பரோபகாரச் செயல்களும் புரிந்து மக்களின் உள்ளத்தைக் கவர்கிறார்கள். இன்னும் சிலர் இசை பாடியும், நடனம் ஆடியும், கவிதை புனைந்தும், சித்திர சிற்பக் கலைகளில் அற்புதங்களை அளித்தும் பிறருடைய போற்றுதலுக்கு உள்ளாகிறார்கள். வேறு சிலர் கருவிலேயே திருவுடையோராய், பிறக்கும்போதே சிறப்புடையோராய்ப் பிறந்து விடுகிறார்கள். குறிப்பிடக்கூடிய காரணம் எதுவும் இன்றிப் பார்ப்பவர்களுடைய உள்ளங்களை யெல்லாம் கவர்ந்து வசீகரிக்கக் கூடிய சக்தியை இயற்கை அன்னை அவர்களுக்கு அளித்து விடுகிறாள். ஆகா! இயற்கை அன்னை மிக்க பாரபட்சம் உடையவள் போலும்! ஆனாலும் நாம் என்ன கண்டோம்? இயற்கை அன்னை அத்தகைய வசீகர சக்தியை அவர்களுக்கு அளிக்கும்போது அதற்கு இணையாக வேறு என்ன பிரதிகூலமான அம்சங்களையும் அளித்திருக்கிறாளோ, நமக்கு என்ன தெரியும்?

அவ்வளவுதூரம் அயோத்திமாந்தரின் உள்ளன்பைக் கவர்ந்து அவர்களுடைய போற்றுதலுக்கு உரியவராயிருந்த இராமர், உலகில் சாதாரண மனிதர் யாரும் அடையாத துன்பங்களையெல்லாம் அடைய வேண்டியிருந்ததல்லவா? நாட்டைத் துறந்து, காட்டுக்குச் சென்று, காதல் மனைவியைப் பறிகொடுத்து, சொல்லுவதற்கு இயலாத மனவேதனைப்பட வேண்டி நேர்ந்ததல்லவா?

* * *

அருள்மொழி வர்மர் இயற்கை அன்னையின் பட்சபாதமான சலுகைக்குப் பாத்திரமானவர். அவருடைய தோற்றமே அவரைப் பார்த்தவர்கள் அனைவர் மனத்தையும் வசீகரித்தது. அவருடைய இனிய பேச்சும் பண்புகளும் அவருடன் பழக நேர்ந்தவர்கள் எல்லாருடைய அன்பையும் கவர்ந்தன. ஈழ நாட்டுப் போர்க்களத்துக்கு அவர் சென்றிருந்த போது அவ்வளவாக வீரதீரச் செயல்கள் புரிவதற்குச் சந்தர்ப்பங்கள் கிட்டவில்லை. ஆயினும் அவருடைய வீரப்பிரதாபங்களைப் பற்றிய கற்பனைச் செய்திகள் பல சோழநாடெங்கும் பரவி வந்தன. ஒருவரிடம் நாம் அன்பு கொண்டுவிட்டால், அவரைப் பற்றிய எவ்வளவு மிகைப்படுத்தப்பட்ட புகழுரைகளையும் எளிதில் நம்புவதற்கு ஆயத்தமாகி விடுகிறோம் அல்லவா?

சுந்தர சோழர் நோய்வாய்ப்பட்டு நடமாடவும் சக்தியில்லாமல் போன காலத்திலிருந்து, அரசுரிமை சம்பந்தமான குழப்பங்கள் சோழ நாட்டில் ஏற்படக்கூடுமோ என்று மக்கள் கவலைப்பட்டு வந்தார்கள். பழுவேட்டரையர், சம்புவரையர் முதலிய குறுநில மன்னர்களும், பெருந்தரத்து அதிகாரிகளும் சுந்தர சோழரின் புதல்வர்களுக்கு விரோதமாகக் கண்டராதித்தருடைய மகனுக்குப் பட்டம் கட்டச் சதி செய்கிறார்கள் என்னும் வதந்தியும் பரவியிருந்தது.

கண்டராதித்தருடைய குமாரன் மதுராந்தகனுக்கு விரோதமாகச் சொல்லக்கூடியது எதுவும் மக்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் மதுராந்தகன் மக்களிடையில் வந்து கலந்து பழகியதுமில்லை. தந்தையைப் போல் உலக வாழ்க்கையில் வெறுப்புற்றுச் சிவபக்தியில் ஆழ்ந்திருக்கிறான் என்பது மட்டும் தெரிந்திருந்தது. விஜயாலய சோழர் காலத்திலிருந்து சோழ ராஜ்யம் விரிந்து பரந்து வந்ததையும், வர்த்தகம் செழித்து மக்களின் வாழ்க்கை உயர்ந்து வந்ததையும், சோழ சைன்யங்கள் வெற்றி கொண்ட நாடுகளிலிருந்து பலவிதச் செல்வங்கள் சோழ நாட்டில் வந்து குவிந்து கொண்டிருந்ததையும் பார்த்துக் களித்துப் பெருமிதம் அடைந்திருந்த மக்கள், சோழப் பேரரசு மேலும் மேலும் பல்கிப் பரவித் தழைக்க வேண்டும் என்று விரும்பினார்கள். சிவபக்தியில் முழுக்க முழுக்க ஈடுபட்ட மதுராந்தகர் சிங்காதனம் ஏறினால், சோழ ராஜ்யத்தின் முன்னேற்றம் தொடர்ந்து நடைபெற முடியுமா என்று ஐயுற்றார்கள். அது மட்டுமின்றி, மதுராந்தகர் பட்டத்துக்கு வந்தால் சிற்றரசர்கள் வைத்ததே சட்டமாயிருக்கும் என்று மக்கள் அஞ்சினார்கள்.

ஆதித்த கரிகாலரைப் பற்றி வீராதி வீரர் என்ற பெருமதிப்பு மக்களுக்கு இருந்தாலும், அவர் சிங்காதனம் ஏறுவது பற்றியும் அவ்வளவாக உற்சாகம் கொள்ளஇடமில்லாமலிருந்தது. ஆதித்த கரிகாலரிடம் மக்களை வசீகரிக்கும் இனிய சுபாவம் இல்லை; எல்லாருடனும் அவர் சரளமாகக் கலந்து பழகுவதில்லை. இதையன்றி, கரிகாலரைப் பற்றி மர்மமான பல வதந்திகள் உலாவி வந்தன. அவர் ஏதோ பெரிய குற்றம் செய்துவிட்டார் என்றும், அவருடைய மனச்சாட்சியே அதற்காக அவரை வருத்திக் கொண்டிருக்கிறதென்றும், அதனாலே தந்தை சுந்தரசோழரின் அபிமானத்தை இழந்துவிட்டார் என்றும் வதந்திகள் பரவியிருந்தன. இன்னும் பலவிதமான

கற்பனைக் கதைகளும் கட்டிவிடப்பட்டிருந்தன. ஆகையால் அவர் அகால மரணமடைந்த போது ஒரு மகாவீரனுக்குரிய மரியாதையை மக்கள் செலுத்தினாலும் அதிகமாகத் துக்கப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. வால் நட்சத்திரத்தின் பேரில் பழியைப் போட்டுவிட்டு ஒருவாறு மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டார்கள்.

பெரிய பழுவேட்டரையரின் மரணமும், அது நேர்ந்த விதமும் மக்களுடைய உள்ளத்தில் அவர் பேரில் புதியதோர் அபிமானத்தையும் மரியாதையையும் உண்டாக்கி யிருந்தது. அந்த வீரக் கிழவர் முதுமைப் பிராயத்தில் மணந்து கொண்ட மாயமோகினி உண்மையில் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளைச் சேர்ந்தவள் என்றும், அவளுடைய தூண்டுதலினாலேதான் பெரிய பழுவேட்டரையரின் மனம் கெட்டுப் போயிருந்ததென்றும் ஆதித்த கரிகாலரின் அகால மரணத்துக்குப் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளே காரணம் என்றும், உண்மையை அறிந்து கொண்டதும் பெரிய பழுவேட்டரையர் செய்த குற்றத்துக்குப் பிராயச்சித்தமாகத் தம்மைத் தாமே மாய்த்துக் கொண்டார் என்றும் வதந்திகள் பரவிவிட்ட பிறகு, ஜனங்கள் பெரிய பழுவேட்டரையரைக் குறித்து, "ஐயோ! பாவம்!" என்று அநுதாபப்பட்டார்கள். அவர் இறப்பதற்கு முன்னால், "மதுராந்தகருக்குப் பட்டம் கட்டும் எண்ணத்தை விட்டு விடுங்கள். பொன்னியின் செல்வருக்கே முடிசூட்டுங்கள்!" என்று மற்ற குறுநில மன்னர்களுக்குக் கட்டளையிட்டுவிட்டுச் சென்றார் என்பதும் அவரிடம் மக்களின் மரியாதையை அதிகப்படுத்தியது. மக்களின் மனத்தில் உள்ள விருப்பம் நிறைவேறுவதற்கு ஒரு பெரிய தடங்கலை நிவர்த்தி செய்துவிட்டல்லவா அந்த மாபெரும் வீரக் கிழவர் உயிரை நீத்தார்? அவருடைய நினைவு வாழ்க! அவருடைய குலம் வாழ்க!—இவ்வாறு ஜனங்கள் நன்றி உணர்ச்சியுடன் அவரைப் பற்றிப் புகழ்ந்து பேசினார்கள்.

மதுராந்தகத்தேவர் விஷயத்தில் ஆள் மாறாட்டம் நடந்திருக்கிறது என்னும் விவரம் பொதுமக்களில் யாருக்குமே தெரிந்திருக்கவில்லை. அரச குடும்பத்தினரையும், அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களையும் தவிர வேறு யாருக்கும் அந்தச் செய்தி தெரியாது. பழைய மதுராந்தகர் பெரும்பாலும் அரண்மனைக்குள்ளேயே பொழுதைக் கழித்தார். மிக அபூர்வமாகவே வெளிப் புறப்பட்டார். அந்தச் சந்தர்ப்பங்களிலும் அவர் பொதுமக்களுடன் கலந்து பழகுவதில்லை. அவருக்கு முடிசூட்டும் பேச்சு நடந்து கொண்டிருந்தபோது மூடுபல்லக்கில் வைத்து அவரை அழைத்துக் கொண்டு போவது வழக்கமாயிருந்தது. அவருடைய அங்க அடையாளங்களைக் கூர்ந்து கவனிக்கப் பொதுஜனங்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஆகையால் பழைய மதுராந்தகர் போய்ப் புதிய மதுராந்தகர் வந்துள்ள விவரமே மிகப் பெரும்பாலான மக்களுக்குத் தெரியாமலிருந்தது.



"பாகிஸ்தானியர், போரை இஸ்ரேலியர் போல ஆரம்பித்து எகிப்தியரைப் போல முடித்தனர்."

'இல்லஸ்ட்ரேடட் வீக்லி'யில்
இந்தர் மல்ஹோத்ரா - பாலி

ஆதலின் திருவையாற்றில் நடந்த திருவாதிரைத் திருவிழாவில் புதிய மதுராந்தகரைப் பார்த்தவர்கள் எவரும் ஆள் வேற்றுமை எதுவும் இருப்பதாக அறியவில்லை. அவர் மனைவி பூங்குழலி மட்டும் சிலருடைய கவனத்தைக் கவர்ந்தாள். அந்தப் பெண் 'சின்னப் பழுவேட்டரையருடைய மகள்' என்று சிலர் கூறியதை மற்றும் சிலர் மறுத்துரைத்தார்கள். கடலில் படகு செலுத்தி வந்த ஓடக்காரப் பெண் இவள் என்றும், மதுராந்தகர் சமீபத்தில் இவளை மணந்து கொண்டார் என்றும் சொன்னார்கள்.

அரச குடும்பத்தினரும் குறுநில மன்னர்களும் பலதார மணம் செய்துகொள்வது அந்நாளில் சாதாரணமாக இருந்தபடியால் யாரும் அதைப் பற்றி வியப்பு அடையவில்லை. சிற்றரசர்கள் பலர் தூண்டியும் மதுராந்தகத் தேவர் தமக்குப் பட்டம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார் என்னும் வதந்தி மக்களுக்குப் பொதுவாகவே அவரிடம் மரியாதையை உண்டுபண்ணி யிருந்தது. சிவபக்தியில் திளைத்துப் பரவச நிலையை அடைந்திருந்த அவருடைய தோற்றமும் அந்த மரியாதையை வளர்த்தது. "ஓடக்காரப் பெண்ணாகிய பூங்குழலியை முன்னிட்டே மதுராந்தகர் சோழ சிங்காதனத்தை விரும்பவில்லை" என்ற பேச்சு இன்னும் பலருடைய அபிமானத்தை அவர் கவர்ந்து கொள்ளக் காரணமாயிருந்

தது. பொன்னியின் செல்வருக்குப் பட்டாபிஷேகம் நடந்ததும் மதுராந்தகத் தேவருக்கு ஏதேனும் பெரிய பதவி அளிப்பார் என்றும் பேசிக் கொண்டார்கள்.

முடிசூட்டு விழாவுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னிலிருந்து சோழ நாட்டின் நாலு திசைகளிலிருந்தும் ஜனங்கள் தஞ்சையை நோக்கி வரத் தொடங்கி விட்டார்கள். தஞ்சைக் கோட்டைக்கு வெளியே ஓரே ஜன சமுத்திரமாகக் காட்சி அளித்தது. கோட்டையின் வாசற் கதவுகள் திறந்து விடப்பட்டன. கோட்டைக்குள் போவதற்கும் வெளியே வருவதற்கும் முன்னம் இருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

முடிசூட்டு நாளைத் தள்ளி வைத்துக் கொண்டால் சமாளிக்க முடியாத கூட்டம் சேர்ந்துவிடும் என்றுதான் தை பிறந்தவுடனே நாள் குறிப்பிட்டிருந்தார்கள். இன்னும் ஜனங்களுடைய சௌகரியத்துக்காக வேறு பல ஏற்பாடுகளும் செய்திருந்தார்கள்.

கொடும்பாளூர் வேளார் தம்முடன் அழைத்துக் கொண்டு வந்திருந்த மாபெரும் தென்திசைப் படையில் மிகப் பெரிய பகுதியைப் பொன்னியின் செல்வர் கட்டளையின் பேரில் திருப்பி அனுப்பிவிட்டார். தம்முடன் ஆயிரம் வீரர்களை மட்டுமே வைத்துக் கொண்டிருந்தார். அவ்விதமே பழுவேட்டரையர் கட்சியைச் சேர்ந்த சிற்றரசர்கள் குடந்தைக்கு அருகில் கொண்டு வந்து நிறுத்தியிருந்த வீரர்களும் திருப்பி அவரவர்களுடைய இடத்துக்கு அனுப்பப்பட்டார்கள்.

சின்னப் பழுவேட்டரையர் கோட்டைப் பாதுகாப்புக்காக வழக்கமாக வைத்திருந்த வீரர்கள் மட்டுமே இப்பொழுது இருந்தார்கள்.

பழுவூர் வீரர்களும் கொடும்பாளூர் வீரர்களும் வேளக்காரப் படை வீரர்களும் தங்களுடைய பகை மாற்சரியங்களையெல்லாம் மறந்து ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொள்வதும் கேலி செய்வதும் கூத்தாடிக் குதூகலிப்பதுமாக இருந்தார்கள். முடிசூட்டு விழாவைப் பார்ப்பதற்குத் திரள் திரளாக வந்து குவிந்தவண்ணமிருந்த மக்களுக்கு அவர்கள் கூடிய வரையில் உதவியாக இருந்தார்கள். சில சமயம் வேடிக்கைக்காக வானர சேஷ்டைகளில் அவ்வீரர்கள் ஈடுபட்டபோதிலும் ஜனங்கள் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. தஞ்சைக் கோட்டைக்கு உட்புறமும் புறநகரமும் தேவேந்திரனின் அமராவதி நகரத்தைப் போல் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. நகரில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் வெளியூரிலிருந்து விருந்தாளிகள் வந்து குவிந்தவண்ணம் இருந்தார்கள்.

கடைசியாக, மகுடாபிஷேகத்துக்குக் குறிப்பிட்ட தினத்தன்று சூரியன் உதயமாயிற்று. உதிக்கும் போதே பனித் திரையைப் போக்கிக் கொண்டு பொற் கிரணங்களைப் பரப்பிக் கொண்டு தேஜோமயமாக உதித்த சூரியனைப் பார்த்த மாந்தர் அனைவரும், ''இன்றைக்குப் பொன்னியின் செல்வருக்கு மகுடாபிஷேகம் அல்லவா? ஆகையால் சூரியனும் பொன்னொளி வீசித் திகழ்கிறான்!'' என்று கூறி மகிழ்ந்தார்கள்.

மகுடாபிஷேகத்துக் குரிய வேளை வருவதற்கு வெகுநேரம் முன்னதாகவே, பட்டாபிஷேக மண்டபத்தின் வாசலில் ஜனத் திரள் சேர ஆரம்பித்து விட்டது. மண்டபத்துக்குள்ளே பொது மக்கள் அனைவரும் இடம் பெறுதல் இயலாத காரியம் அல்லவா? முடிசூட்டு வைபவம் நடந்த பிறகு, பொன்னியின் செல்வர் மண்டபத்திலிருந்து வெளியில் வந்து பட்டத்து யானை மீதேறி வீதி வலம் தொடங்கும் போதுதான் மக்கள் அனைவரும் அவரைக் கண்டு மகிழ முடியும். அதற்காக நேரங் கழித்து வர முடியுமா, என்ன? முன்னதாக வந்தால், பொன்னியின் செல்வர் பொன் மகுடம் சூடிக் கொண்டு வெளி வரும்போதே அவரைப் பார்க்கலாமே!

மகுடாபிஷேக மண்டபத்துக்குள் அரண்மனையைச் சேர்ந்தவர்கள் வருவதற்குத் தனியான பின்புறப் பாதை இருந்தது. அதன் வழியாகச் சுந்தர சோழரும் வானமாதேவியும் அவர்களைத் தொடர்ந்து செம்பியன் மாதேவி, மதுராந்தகர், பூங்குழலி, குந்தவைப் பிராட்டி, வானதி ஆகியவர்களும் வந்து சேர்ந்தார்கள். முதன் மந்திரி அநிருத்தர், சின்னப் பழுவேட்டரையர், சம்புவரையர், சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி, மலையமான் மிலாடுடையார், மற்றும் சிற்றரசர்கள், சாமந்தர்கள், வர்த்தக கணத் தலைவர்கள், கோட்டத் தலைவர்கள், பெருந்தர அதிகாரிகள், சிவாச்சாரியார்கள், விண்ணகர பட்டர்கள், தமிழ்ப் பெரும் புலவர்கள் ஆகியோர் வாசலில் கூடியிருந்த பெரும் ஜனக் கூட்டத்தில் புகுந்து முண்டியடித்துக் கொண்டு உள்ளே வந்து சேர்ந்தார்கள். கடைசியில், பொன்னியின் செல்வரும் வல்லவரையன் வந்தியத்


அடேயப்பா,
வளர்ச்சியின்
உச்ச நுனை!
பசியைப் பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும்
பாதி வேலையைத்தான் செய்யும்
இன்க்ரிமின் பெறுவீர்.. உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
சேருவீர் இன்க்ரிமின் இனத்தோடு...
வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வளமுடனே!
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரத சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.
Lederle
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
* அமெரிக்கன் ஸையானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.
Incremin
drops LYSINE-VITAMINS
10 ml
இன்க்ரிமின்* டானிக்
பெரிய குழந்தைகளுக்கு இரும்புச் சத்து அடங்கிய இன்க்ரிமின் ஸிரப் — 175 மிலி & 57 மிலி.
இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ்-10 மிலி
லின்டாஸ்-INC. 30.690 TM

தேவனும் தாமரை மலர் போல் அமைந்த திறந்த தங்க ரதத்தில் அமர்ந்து மகுடாபிஷேக மண்டபத்தின் வாசலை அடைந்தபோது, பூரண சந்திரனைக் கண்ட அலைகடலைப் போல் அந்த ஜன சமுத்திரம் கரகோஷம் முழக்கி ஆரவாரம் செய்தது.

* * *

மகுடாபிஷேகத்துக்குரிய வைதிகச் சடங்குகள் எல்லாம நடந்தேறின. சோழ குலத்து மன்னர்கள் வழி வழியாகப் பட்டாபிஷேக தினத்தன்று சிரஸில் சூட்டிக் கொள்ளும் மணிமகுடம், மார்பில் அணியும் நவரத்ன மாலை, இடையில் தரிக்கும் உடைவாள், கையில் ஏந்தும் செங்கோல் ஆகியவற்றை ஒரு பெரிய சித்திரத் தாம்பாளத்தில் வைத்துச் சபையில் பெரியவர்கள் முன்னுலெல்லாம் கொண்டு போனார்கள். அவர்கள் அத்தாம்பாளத்தைத் தொட்டு ஆசி கூறினார்கள். பின்னர், ஆஸ்தானப் புலவராகிய நல்லன் சாத்தனார் எழுந்து நின்றார். அவருக்குப் பின்னால் கையில் யாழ் பிடித்த மங்கை ஒருத்தி நின்று, யாழின் நரம்புகளை மீட்டி இனிய சுருதியை எழுப்பினாள்.

புலவர் நல்லன்சாத்தனார் சோழகுலத்தின் தொல்பெருமையையும், அக்குலத்தில் பரம்பரையாக வந்து புகழ் பெற்ற வீர மன்னர்களின் வரலாற்றையும் இசையுடன் கலந்த சந்தப் பாடலாகப் பாடலுற்றார். அந்தப் பாடல் மிக நீண்டதாகவும் இந்தக் காலத்தவர் எளிதில் அறிந்து கொள்ள முடியாத அரிய நடையிலும் அமைந்திருந்த படியால், அதன் சாராம்சத்தை மட்டும் சுருக்கமாக இங்கே குறிப்பிடுகிறோம் :

"சூரிய வம்சத்திலே தோன்றிய மனு மாந்தாதாவின் குலத்தில் சிபி என்னும் மன்னர் மன்னன் இருந்தான். அவன் ஒரு புறாவுக்குத் தான் அளித்த வாக்கை நிறைவேற்றி அதன் உயிரைக் காப்பதற்காகத் தன் உடலின் சதையை அறுத்துக் கொடுத்தான். அத்தகைய சிபியின் வம்சத்தில் அவனுக்குப் பின்தோன்றியவர்கள் 'செம்பியன்' என்று குலப் பெயர் சூட்டிக் கொண்டு பெருமை அடைந்தார்கள். செம்பியர் குலத்தில் இராஜ கேசரி என்று ஒரு பேரரசன் தோன்றினான். அவன் மகன் பரகேசரி என்று புகழ் பெற்றான். இவர்களுக்குப் பின் தோன்றிய மன்னர்கள் கோஇராஜ கேசரி என்றும், கோப் பரகேசரி என்றும் மாற்றி மாற்றிப் பட்டம் சூட்டிக் கொண்டு வந்தார்கள். பசுவுக்கு நீதி வழங்குவதற்குத் தன் அருமைப் புதல்வனைப் பலி கொடுத்த சோழ மன்னன் மனு நீதிச் சோழன் என்று பெயர் பெற்றான். இவனுக்குப் பிற்காலத்தில் பூம்புகார் நகரில் கரிகால் பெருவளத்தான் என்னும் மன்னன் மூவுலகங்களிலும் தன் புகழைப் பரப்பி விளங்கினான். அவன் சோழ நாட்டுப் பெரும் படையுடன் வடக்கே இமயமலை வரையில் படையெடுத்துச் சென்று, அம்மலையின் பனி மூடிய சிகரத்தில் சோழ குலத்துப் புலி இலச்சினையைப் பொறித்தான். இவன் வழியில் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருங்கிள்ளி, குராப்பள்ளி துஞ்சிய கிள்ளி வளவன், குலமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சிவபெருமானுடைய பரம பக்தனாகிய கோப்பெருஞ் சோழன் ஆகியவர்கள் இப்புராதன குலத்துக்குப் பெயரும் புகழும் அளித்துச் சிவபதம் அடைந்தார்கள்.

உலகத்துக்கெல்லாம் ஒளி அளிக்கும் சூரிய பகவானைக்கூட மாரிக் காலத்து மேகங்கள் மறைத்துவிடுவது போல், சூரியனுடைய பரம்பரையில் வந்த சோழர் குலத்தைச் சில காலம் பல்லவ—பாண்டியப் பகை மேகங்கள் மறைத்திருந்தன. அந்த மேகங்களைச் சிதற அடிக்கும் வஜ்ராயுதம் ஏந்திய தேவேந்திரனுக்கு இணையாக விஜயாலயச் சோழர் தோன்றினார். அந்தச் சோழர் குலப் புலியைக் கண்டதும் பெரும்பிடுகு முத்தரையன் என்னும் எலி பீதி கொண்டு மாண்டு மறைந்தது. பின்னர் அந்த மகாவீரர் தஞ்சை நகரைக் கைப்பற்றித் துர்க்கா பரமேசுவரிக்குக் கோயில் எடுப்பித்தார். பல்லவர்களும் பாண்டியர்களும் மற்றும் பல அரசர்களும் விஜயாலயச் சோழரின் நட்பைக் கோரி அனுப்பிய தூதுவர்கள் சதா காலமும் அந்த மன்னரின் அரண்மனை முற்றத்தில் காத்திருந்தார்கள். அவ்விதம் உதவி கோரி வந்த அரசர்களுக்கு அபயம் அளித்து உதவி செய்யும் பொருட்டு விஜயாலய சோழர் பற்பல போர்க்களங்களுக்குச் சென்று போர் புரிந்து தமது திருமேனியில் தொண்ணூற்றாறு விழுப் புண்களைப் பெற்றவரானார். விஜயாலய சோழரின் திருக்குமாரர் ஆதித்த சோழர் மாற்றார்களுடைய சேனை மேகங்களைச் சிதறி ஓடச் செய்யும் மற்றொரு கதிரவனாகவே விளங்கினார். திருப்புறம்பயம் போர்க்களத்தில் பல்லவன் அபராஜிதன் பாண்டியனால் முறியடிக்கப்படும் தறுவாயில் இருந்த போது, ஆதித்த சோழர் முயல் கூட்டத்தில் புலி புகுவதைப் போல் புகுந்து பாண்டிய சைன்யத்தைச் சின்னபின்னம் செய்தார். பின்னர், தாம் செய்த

உதவியை மதிக்காமல் சிநேகத் துரோகம் செய்த பல்லவனுக்குப் புத்தி புகட்டும் பொருட்டுத் தொண்டை நாட்டுக்குப் படையெடுத்துச் சென்று அபராஜிதனை அவன் இருந்த யானைமேல் பாய்ந்து வீர சொர்க்கத்துக்கு அனுப்பினார். தமது முன்னோனாகிய கோச் செங்கணானைப் பின்பற்றி, காவேரி நதி உற்பத்தியாகும் ஸைய பர்வதத்திலிருந்து பூம்புகார் நகரம் வரையில் எண்பத்திரண்டு சிவாலயங்களை எடுப்பித்தார். ஆதித்த சோழரின் புதல்வராகிய பராந்தக சோழர் பிறக்கும்போதே தம்முடைய இரு தோள்களிலும் வீர லக்ஷ்மியையும் விஜய லக்ஷ்மியையும் சுமந்து கொண்டு பிறந்தார். வெள்ளூரில் பாண்டியனைப் புறங்கண்ட அம்மன்னர், மதுரையும் ஈழமும் கொண்டதுடன், சேர நாட்டு வேழப்படைக்கு ஒரு சிங்கமாக விளங்கினார். வடக்கே துங்கபத்திரை நதிக்கு அப்பால் இருந்த சளுக்கர்களும் வேங்கி மண்டலத்தாரும் பராந்தக சோழருடைய பெயரைக் கேட்டுச் சிம்ம சொப்பனம் கண்டவர்கள் போல் நடு நடுங்கினார்கள். அவருடைய புகழைக் கேட்டுப் பொறுக்காமல் பொறாமை கொண்ட இரட்டை மண்டலத்துக் கன்னர தேவன் ஏழு சமுத்திரமும் சேர்ந்தது போன்ற மாபெரும் படையைத் திரட்டிக் கொண்டு பராந்தக சக்கரவர்த்தியைப் போரில் புறங்காண வந்தான். பராந்தகரின் மூத்த புதல்வராகிய இராஜாதித்த தேவர் குருக்ஷேத்திரத்தை யொத்திருந்த தக்கோலப் போர்க்களத்தில் கன்னர தேவனையும் அவனுடைய மாபெரும் கடல் போன்ற சேனையையும் முறியடித்துச் சின்னா பின்னம் செய்த பிறகு ஆனை மேல் துஞ்சி வீர சொர்க்கம் எய்தினார். பராந்தக சோழர் தில்லைச் சிதம்பரத்து நடராஜப் பெருமான் ஆலயத்தில் பொன் மண்டபம் கட்டிய பின்னர் அப்பெருமானுடைய இணையடிகளை அடைந்தார்! அவருடைய புதல்வர் சிவஞான கண்டராதித்த தேவர் சிவாலயப் பணிகள் செய்வதில் ஈடுபட்டிருந்து சிவபதத்தை அடைந்தார். அவருடைய காலத்தில் தொண்டை மண்டலத்தைப் பகைவர்களுடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்து சிட்புலி நாடு வரையில் புலிக்கொடியை நிலைநாட்டியவரான அரிஞ்சய தேவரும் தமது தமையனைப் பிரிந்து அதிக காலம் இருக்க மனமின்றி விண்ணுலகம் எய்தினார். அவருடைய திருப் புதல்வர் சுந்தர சோழ சக்கரவர்த்தி பின்னர் சோழ சிங்காதனம் ஏறினார். தான் ஒளிந்திருந்த பொந்திலிருந்து வெளியில் தலைகாட்டிய பாண்டிய நரியின் மீது பாய்ந்து அதை மீண்டும் பொந்துக்குள் ஒளிந்து கொள்ளும்படி செய்தார்! சுந்தர சோழ சக்கரவர்த்தியின் வெண்கொற்றக் குடை நிழலில் மூன்று உலகமும் சிறிதும் கவலையின்றி நிர்ப்பயமாக வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வீரப் புகழ் பெற்று விளங்கும் குலத்தில் வந்த பொன்னியின்செல்வரை எம்மொழிகளால் யாம் போற்ற முடியும்? அவருடைய புகழைச் சொல்வதற்குக் கலைமகளே பிறந்து வந்தால் ஒரு வேளை சாத்தியமாகக் கூடும். எம்மைப் போன்ற மிகச் சாதாரண புலவர்களால் இயம்பத் தரமன்று...."

இவ்விதம் நல்லன் சாத்தனார் சோழர் குலப் பெருமையைப் பாடி முடித்தார். அவருக்குப் பிறகு வடமொழிப் புலவர்களும் புத்தபிக்ஷுக்களும் சிவாச்சாரியர்களும் வைஷ்ணவ ஆச்சாரியார்களும் வாழ்த்துக் கூறுவதற்குக் காத்திருந்தார்கள். இவர்களை எப்படிச் சுருக்கமாக முடிக்கச் செய்வது என்பது பட்டாபிஷேக முகூர்த்தம் வைத்திருந்தவர்களுக்குப் பெருங் கவலையாகப் போய்விட்டது. அப்படிக் கவலைப்பட்டவர்களில் சின்னப் பழுவேட்டரையரும் ஒருவர். அவர் தமது கரத்தினால் சோழர் குலத்துப் புராதன கிரீடத்தை எடுத்துப் பொன்னியின்செல்வரின் சிரஸில் சூடுவதற்கு ஆயத்தமா யிருந்தார். புலவர்களையும் பண்டிதர்களையும் எப்படி விரைவில் பாடி முடிக்கச் செய்வது என்று எண்ணிச் சுற்றுமுற்றும் பார்த்த சின்னப் பழுவேட்டரையரின் சமீபத்தில் புதிய ஆள் ஒருவன் திடுதிப்பென்று வந்தான். தெரு வீதியில் மொய்த்து



இங்கும் தேவைதான் எச்சரிக்கை!

லண்டனிலிருந்து வெளியாகும் 'ஷி' (She) என்ற பத்திரிகையின் சமீபத்திய இதழ் ஒன்றின் அட்டையில் இம்மாதிரி வெளியிட்டிருந்தார்கள்: "எச்சரிக்கை! இந்த இதழின் நடுப் பக்கங்கள் குழந்தைகள் பார்க்க லாயக்கில்லாதவை. வீட்டில் இவ்விதழை வைப்பதற்குமுன் அந்தப் பக்கங்களைத் தயவுசெய்து தனியே எடுத்துப் பத்திரப்படுத்தி விடவும்." - கே. ஆர்.

நின்று கொண்டிருந்த அவ்வளவு ஜனக் கூட்டத்தையும் தாண்டி அவன் எப்படி ஆஸ்தான மண்டபத்துக்குள் வந்தான் என்பது பலருக்கும் வியப்பு அளித்தது. ஆனால் வந்தியத்தேவனுக்கு அது வியப்பு அளிக்கவில்லை. மாறு வேடம் பூண்டிருந்தவன் ஆழ்வார்க்கடியான் தான் என்பதை அறிந்திருந்த வந்தியத் தேவன் பொன்னியின் செல்வரை நோக்கினான். அவரும் அந்த சமிக்ஞையைத் தெரிந்து கொண்டவராகத் தோன்றினார்.

சின்னப் பழுவேட்டரையரின் காதில் ஆழ்வார்க்கடியான் என்ன இரகசியச் செய்தியைச் சொன்னானோ, தெரியாது. உடனே அவருடைய முகத்தில் பெருங் கவலையும் கலக்கமும் குடிகொண்டன. ஒரு கணம் தயங்கி நின்றுவிட்டு அவனை அழைத்துக் கொண்டு அச்சபா மண்டபத்தில் அதிகக் கூட்டமில்லாத ஒரு பக்கத்துக்குச் சென்றார்.

இதைக் கவனித்தார் பொன்னியின் செல்வர். நல்லன் சாத்தனார் சோழர் குலப் பெருமையைக் கூறி வந்த போதெல்லாம் கைகூப்பி நின்று வணக்கத்துடன் கேட்டுக் கொண்டு வந்தவர், இப்போது அந்தப் புலவரை நோக்கி, ''ஐயா! புலவரே! இத்தனை நேரமும் தாங்கள் கூறி வந்த புகழெல்லாம் என் முன்னோரைப் பற்றியவை அல்லவோ? இந்தப் புராதனப் பெருமை வாய்ந்த சிங்காதனத்தில் அமர்ந்து மணிமகுடம் சூட்டிக் கொள்வதற்குத் தகுதியுள்ளவனாக நான் என்ன காரியம் செய்திருக்கிறேன்? அதைப் பற்றிக் கூறுவதற்குக் கலைமகள் இங்கே இப்போது பிரசந்நமாவது சாத்தியமில்லையாதலால் தங்களால் இயன்ற வரையில் சற்று எடுத்து இயம்பலாமே?'' என்றார்.

புலவர் திகைத்து நின்றதைப் பார்த்த பொன்னியின் செல்வர், ''ஐயா! தாங்கள் திகைத்து நிற்பது இயல்பே. தங்கள் பேரில் குற்றமே இல்லை. அவ்வாறு என்னுடைய புகழைப் பாட்டில் அமைத்துப் பாடும்படியாக நான் இன்னமும் ஒரு காரியமும் செய்யவில்லை. இன்றுதான் தொடங்கப் போகிறேன்!'' என்றார். (தொடரும்)



துரித பட்டுவாடா

தேவகோட்டை நகரில் பட்டுவாடா செய்யப்பட வேண்டிய தபால்கள் காலை 8-15க்கு எக்ஸ்பிரஸ் ரயிலில் தேவகோட்டை ரோடு ரயில் நிலையத்துக்கு வந்து சேருகின்றன. இவை தேவகோட்டை தபால் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மத்தியானம் இரண்டு மணிக்கோ அதற்கு அப்புறமாகவோதான் வீடுகளில், பட்டுவாடா ஆகின்றன.

இந்த நகரில் பத்து பாங்குகளும் இதர முக்கிய அரசாங்க அலுவலகங்களும் உள்ளன. தபால் பட்டுவாடா தாமதமாவதால் உடனுக்குடன் கடிதங்களுக்குப் பதில் எழுதுவதோ டிராப்ட்களை பாங்கில் பணமாக மாற்றுவதோ சாத்தியமில்லாமல் போகிறது. இதனால் பல வியாபாரிகளும் அவசரத் தபால் எதிர்பார்ப்பவர்களும் காலையில் தாங்களே தபால் நிலையம் சென்றோ அல்லது ஆள் அனுப்பியோ தங்கள் தபால்களைப் பெற்று வந்தார்கள்.

ஆனால் அண்மையில் தேவகோட்டை போஸ்ட்மாஸ்டர் இவ்விதம் தபால்களைத் தரக் கூடாது என்றும் வீடுகளில் அல்லது நிறுவனங்களில் தபால்காரர் நேரில் போய்த் தான் பட்டுவாடா செய்யவேண்டும் என்றும் சொல்லி விட்டார். வேண்டுமானால் தபால் நிலையத்தில் தபால் பை வாடகைக்கு எடுத்துக் கொள்ளட்டும் என்கிறார். தபால் பை வைத்துக் கொள்ள எல்லோராலும் பணம் செலவு செய்யமுடியாது. அவசியமானால் அதிக ஆட்களை நியமித்து மக்களுக்குத் தபால்கள் துரிதமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

தேவகோட்டை,
4-1-72 எஸ். மீனாக்ஷிசுந்தரம்

முதல்வரின் பேச்சு

அண்மையில் தமிழக முதல்வர் தமிழரசுக் கழக வெள்ளி விழாவில் பேசும்போது, தமிழகத்தைக் கிழக்கு வங்காளமாகவும், தம்மை ஷேக் முஜிப் - உர் - ரஹ்மானாகவும் பாவித்து இரு பொருள்படப் பேசியுள்ளார். வங்க தேச பிதா கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும்போது, வங்காளி மொழிக்காக ஜின்னா அவர்களை எதிர்த்துப் பேசிச் சிறை சென்றதைத் தம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துடன் ஒப்பிட்டும், வங்க தேசம் சுயாட்சியில் ஆரம்பித்து, சுதந்திர வங்க தேசம் உருவானதைப் போல, தமிழக சுயாட்சி என்னும் பேரால் போராடித் 'தனித் தமிழ் நாடு' அடைய வேண்டும் என்னும் பொருள்படப் பேசியிருக்கிறார். இப்படிப் பேசுவது முறையாகுமா?

குளித்தலை,
7-1-72 டி. நடராசன்


ஓதிம விளக்கு
நாவல்
த.நா.குமாரஸ்வாமி

பல நூற்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ஒரு சோக நாடகம். மகத நாட்டை ஆண்டுவந்த ஆந்திர வம்சத்தைச் சேர்ந்த கடைசி மன்னன் புலோமாவி. இவனிடம் சேனைத் தலைவனாக இருந்த கடோத்கசகுப்தன் தக்க தருணம் பார்த்து அந்த இளம் மன்னனைக் கொலை செய்துவிட்டு வளமிக்க குஸுமபுரம் என்னும் பாடலிபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இவனுடைய மகன் சந்திரகுப்தனும் இந்தச் சதியில் கலந்தவன். லிச்சவி என்ற நேபாள மரபைச் சார்ந்த அழகி குமார தேவியை மணந்து, வலிமையுள்ள மைத்துனர்களின் உதவியால் மகத நாட்டை மேலும் வலுவாக்கினான். ஆனால் அவனுடைய பட்டமாதேவி, அந்த லிச்சவி குலத்துப் பெண் குமார தேவியே உண்மையாக நாட்டை ஆண்டவள். பல போர்களில் வீரச் செயல்கள் புரிந்த சந்திரகுப்தன் அவளுடைய தண்ணிழலில் சொர்க்க சுகத்தை நுகர்ந்து கொண்டிருந்தான். ராஜ முத்திரையிலும், நாணயத்திலும் தன் உருவத்துடன் பட்டமா தேவியின் உருவத்தையும் பொறித்திருந்தான். சிறிது சிறிதாக அரசனுக்குரிய உரிமைகளை அவளே ஏற்று நிர்வாகம் நடத்தி வந்தாள். சில சமயம் சந்திரகுப்தனின் ஆணையை மீறியும் அவள் உத்தரவுகள் போட்டு வந்தாள். சந்திரகுப்தன் விறல்மிகு வேந்தன். பட்டமா தேவியின் யதேச்சாதிகாரம் சில சமயம், அவனை உள்ளூறத் தாக்கி வந்தது. ஆனால் அவள் கிழித்த கோட்டை அவனால் மீறிச் செல்ல முடியவில்லை. அவளுடைய மைத்துனர்கள் பராக்கிரமசாலிகள்; குமாரதேவி ஒரு வார்த்தை சொன்னால் போதும், சந்திரகுப்தனைக்கூட அவர்களால் பெட்டிப் பாம்பாக்கிவிட முடியும். உள்ளுக்குள் கொதிப்புத்தான் சந்திரகுப்தனுக்கு. மகதத்தின்பால் அவனுக்கு வெறுப்பு மூண்டது. வாளேந்திப் போரிட்ட அவன் இப்போது கவறு ஆடுவதிலும், கடுமானை வேட்டையாடுவதிலும், காரிகையருடன் கலவி புரிவதிலும், தீஞ்சுவை நறவை மாந்துவதிலுமே முப்பொழுதும் மூழ்கியிருந்தான். விதி விவஸ்தை கெட்ட அவனுடைய நடத்தையைப் பற்றி மகத மக்கள் அக்கறை கொள்ளவில்லை. நாட்டை ஆள்பவர் அரசனாயிருந்தால் என்ன, அரசியாய் இருந்தால் என்ன? பசியோ பிணியோ போரின் அவலமோ இல்லாதபொழுது எதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்? காண்வ, ஆந்திர அரசர்கள் காலத்தில் பல சதிகள், வெஞ்சமர்கள், உள்நாட்டுக் கலகங்கள் மகதத்தைச் சூறையென ஆட்டி வைத்தன. இப்பொழுதோ ஒரு பெண்ணரசியின் கீழ் நாடு அமைதியுடன் திகழ்கிறது. பல சிறு நாடுகளாகச் சிதறிப் போயிருந்த மகதத்தைத் தன் புஜ பலத்தால் திரட்டி ஓர் அகண்ட ராஜ்யமாகச் சமைத்தவன் சந்திரகுப்தன். பிரஜைகள் அவனுடைய களியாட்டங்களில் தலையிடவில்லை. அதேபோல் பட்டமா தேவியும் அவனுக்கெனத் தனி அரண்மனையை ஒதுக்கிவிட்டு நல்லாட்சி நடத்தினாள்.

இப்பொழுது அவளுக்கு உயிரெல்லாம் தன் இளம் குழந்தை சமுத்திர குப்தனிடம் தான். ஒரு வீரனை மணந்து அவன் ஒரு மகனையும் பெற்றெடுத்து விட்டாள். சந்திரகுப்தன் அவளை மறந்தாலும் தன் மகனையே அரியணையில் ஏற்றி விசால மகதத்தில் கொற்றக் குடை நிழற்றவும் அவளால் ஆகும். கணவன் என்ற ஒரே மதிப்பினால் அவன் புரியும் கேளிக்கைகளைச் சகித்து வந்தாள்.

மழை நாள் கழிந்து முகிலின் கவடே இராத குளிர்காலம். சந்திரகுப்த மகாராஜா வேட்டைக்குப் புறப்படுவதை அறிவிக்கத் தூரியங்கள் முழங்கின. அரசன் பரிமீது அமர்ந்து தன் கேள்வருடன் காட்டகம் நோக்கிப் புறப்பட்டான்.

அவனுடன் சென்றவர்களுக்கோ கணக்கில்லை. விறலியர், பாணர், பொருநர், அடைப்பைக்காரர்கள், கனம தூக்குவோர், அடிசிற்காரர்கள், நாவிதர்கள், அடிமைகள். இவர்கள் எழுப்பும் கோலாகலமான துவனி உறங்கும் காட்டகத்தை எழுப்பியது.

காட்டின் ஓர் இருண்ட பகுதியில் ஆங்காங்கு அமைந்த செந்துகில் வேய்ந்த கூடாரங்கள். பெரிய கூடாரத்துள் சற்று நேரம் கவறு ஆட்டம் நடந்தது. நடுப்பகலில் செஞ்சூட்டிறைச்சியும் நறவும் உண்டு களித்த பின் சந்திரகுப்தன் தேர்ந்தெடுத்த தோழர் நால்வருடன் குதிரை மேல் ஏறிக் காட்டின் இருண்ட பாகத்தினுள் வேட்டையை நோக்கிச் சென்றான். முன்னால் வேடுவர்கள் தம் வேட்டை நாய்களுடன் வழி காட்டினர். மறைந்து திரியும் காட்டுப் பன்றி, மரை இவற்றைத் துரத்திக் கொன்ற களைப்பினால் அரசனும் அவனுடைய கேள்வரும் நீர்நசையைத் தணித்துக்கொள்ள ஒரு காட்டாற்றை நண்ணினர். நொய் மணல் படுகையில் பளிங்கின் நீர் சலசலவென ஓடிக் கொண்டிருந்தது. இவ்வோடையின் மறு கரையில் சற்று மேடான புல் பரவிய திடலில் அல்லி மலர் துவண்டு விழுந்து இருப்பது போல் ஒரு பெண்ணின் உடல் சாய்ந்து கிடப்பது தெரிந்தது. இந்தக் காட்சி அரசனின் கண்ணில்தான் முதலில் பட்டது. குதிரையை விட்டு இறங்கி ஓடை நீரைத் துழாவிக் கொண்டே மறுகரை அடைந்து அந்தப் பெண் கிடக்கும் இடத்தைக் குறுகினான். அவள் உடலில் ஆடை கலைந்து அலங்கோலமாக இருந்தது. கழுத்து, அரை, காது இங்கெல்லாம் குருதியின் கறை. ஆறலைக் கள்வர் யாரோதான் அவளை இவ்வாறு கொடுமைப்படுத்தி அவள் அணிகலங்களைப் பறித்துச் சென்றிருக்க வேண்டும்..... அவள் எந்த நாட்டவளோ, யார் மகளோ?

சந்திரகுப்தன் புல்மேல் கிடக்கும் மடந்தையின் பக்கலில் வந்து அவளுடைய ஒவ்வோர் உறுப்பையும் கூர்ந்து கவனித்தான். இளம் வயதினள். பதினேழு பதினெட்டு வயதுக்குள் இருக்கும். வனப்பும் செவ்வியும் நிரம்பிய வடிவத்தாள். சந்திரகுப்தனின் கண்கள் அவளை விட்டு அகலவே இல்லை. குனிந்து அவள் மார்பில் மெல்லக் கை வைத்தபோது, அது அடித்துக் கொண்டிருந்தது. அவனுக்கு இன்னும் உயிர் இருப்பதை உணர்ந்தான். அவனுடைய கேள்வர் நால்வரும் அவன் பின்னாலேயே நின்று தரையில் கிடக்கும் அம்மடவரலைக் கண்கள் விரிய நோக்கினர்.

''இவள் யார்?'' என்று கேட்டான் சந்திர குப்தன். வேட்டை மும்முரத்தால் சிவந்து விளங்கும் அவனுடைய முகத்தையும் கண்களையும் பார்த்து வேடிக்கையாகப் பேசும் அவனுடைய சகாக்கள்கூட மௌனமாக இருந்தனர்.

அவர்களுள் சற்றுத் துணிவுள்ளவன், ''ஏன், இவள் யாராயிருந்தால் என்ன? அரசருக்கு ஏற்றவளே!'' என்றான்.

மற்றொருவன் தன்னுள் கிளர்ந்தெழும் காமநசையை மறைக்க முடியாமல் மெல்லச் சிரித்து, ''வெளியூரிலிருந்து வந்திருப்பாள் பேதை, நம் நகரை நோக்கி. கள்வன் எவனாவது கெடுத்துவிட்டிருப்பான். இவள் மகாராஜாவுக்கு ஏற்ற சரக்கே அல்லள். என் போன்றவருக்கு இவளைத் தந்துவிடலாம்'' என்றான்.

சந்திரகுப்தனின் கண்கள் சட்டெனச் சிவந்தன. அது மது அருந்தியதனாலா அல்லது சினம் திரண்டதனாலா என்பது தெரியவில்லை. அவன் ''ஹோ'' என்று சிரித்து, ''விடனே, சொர்க்கத்தின் பாரிஜாத மலர் உனக்கு ஏற்றதன்று. உனக்கு உகந்தது ஊமத்தம்பூ... இவள் எனக்கே உரியவளடா'' என்றான் ஏளனமாக. அந்தத் துணிச்சல் மிக்கவன் இன்னும் தன் ஆசையை விடவில்லை. புல்மீது கிடக்கும் பெண் மேலேயே கண்ணாக அவன் ''மகாராஜா, இவள் உங்களுக்கு ஏற்றவள் அல்ல; பட்டமாதேவியின் காதுக்கு எட்டினால் —'' என்றான்.

மின் தீண்டியதுபோல் அரசன் திரும்பினான். கரகரத்த குரலில், ''பட்டமாதேவி! அடே, பதரே! பட்டமாதேவி என் யஜமானி அல்லடா; அவளுக்கு நான் யஜமானன். இந்த நாடு என்னுடையது; என் அதிகாரம் இன்னும் செல்லும். இந்த அப்ஸரி எனக்குத்தான். பட்டமாதேவிக்குத் தெரிந்தால் மட்டும் என் கழுத்தை வாங்கிவிடுவாளா?'' என்றான்.

இப்படித் தங்களுக்கெல்லாம் வளைந்து கொடுக்கும் அரசன் திடுமெனக் கடும் சினத்துடன் பேசுவதைக் கண்டு அவனுடைய தோழர்கள் வாயடைத்துப் போயினர். சந்திரகுப்தன் தன்னை ஒருவாறு அடக்கிக் கொண்டு, ''இந்தப் பெண் யாராக இருப்பினும் இவளை நான் மகிஷியாகக் கொள்ளப் போகிறேன். தோழர்களே, என்னுடைய இனியாளான இவளை விழுந்து வணங்குங்கள்'' என்றான்.

அந்நால்வரும் மண்ணில் விழுந்து அந்தப் பெண்ணுக்கு வணங்கினர். அவளை மெல்லத் தூக்கிய அரசன் மார்புடன் சேர்த்துத் தன் குதிரை மீது ஏற்றிக் கொண்டு கூடாரத்தை நோக்கி விரைந்தான். அவன் மடியில் துவண்ட மலராய்க் கிடக்கும் அவ்வழகியின் கருங்குழற் கற்றை அந்த விரைவில் பின்புறம் அலைந்துப் பறந்தது. கூடாரத்தை அடைந்ததும் சந்திரகுப்தனே சைத்தியோபசாரங்கள் செய்து நினைவு தப்பியிருக்கும் அப்பெண்மணியை விழிப்புறச் செய்தான். பைய அவளை அணைத்து அவள் வரலாற்றைக் குறித்து வினவினான்.

அவள் சொன்னது: வஸுமதி அவள் பெயர். சம்பா நகரைச் சேர்ந்த பிரபல வணிகனின் மகள். தந்தையுடன் பாடலியை நோக்கி வந்து கொண்டிருந்தாள். சோணை ஆற்றோரமாக வனாந்தரமான பகுதியில் வருகையில் ஆறலைக் கள்வர் தலைவன் அவள் அழகைக் கண்டு மோகித்து அவளை அடித்துச் செல்ல முயன்றான். அவனுடன் இருந்த மற்றக் கள்வர்களிடையே இவளைக் குறித்துச் சச்சரவு மூண்டது. ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளத் தலைப்பட்டனர். இவர்களில் கடைசியாகத் தங்கியவன் இவள் உடலிலிருந்து உயர்ந்த நகைகளைக் கவர்ந்து கொண்டு, இவளுடைய தந்தையைக் குத்திக் கொன்று போட்டுவிட்டு, இவளை நடுக்காட்டில் கிடத்திச் சென்றான். அவ்வளவுதான் இவளுக்குத் தெரியும்.

சந்திரகுப்தன் வஸுமதியை ஒரு சிவிகையில் ஏற்றிப் பாடலி மாநகரை நோக்கிச் சென்றான். அவன் வஸுமதியை எந்த மணமுறையால் தன் மனைவியாக்கிக் கொண்டான் என்பது தெரியாது. பைசாச முறையை விடக் காந்தருவ முறைப்படிதான் நடந்திருக்க வேண்டும். எதுவாக இருந்தால் என்ன? வஸுமதி அரச தேவியருள் ஒருத்தியாகிவிட்டாள்.

சந்திரகுப்தன் இவளுக்கென்று வெண்பளிங்கு அரமியத்தையே எழுப்பிவிட்டான். எந்நேரமும் யாழொலியும், விறலிகளின் சதங்கை நாதமுமே அங்கு நிரம்பியிருந்தன. இவளது பூவடிக் கீழ் அரசன் சொக்கிக் கிடந்தான். குமார தேவியின் செவிக்கும் எட்டியது, அரசனின் இந்த துஷ்யந்தப் படலம். ஆனால் இதை அவள் துளியேனும் பொருட்படுத்தவில்லை. அரசர்கள் இப்படிப் பல அரம்பையர் மீது மயலாகிக் கிடப்பது வியப்புக்குரிய விஷயமே அன்று. பட்டமாதேவியைத் தவிர இப்படிப் பல இற்பரத்தையர் அந்தப்புரங்களில் இடம் பெறுவதுண்டு. பட்டமாதேவியின் ஒரே குறிக்கோள், மகதத்தில் நல்லாட்சி நிலவ வேண்டும் என்பதே. அரசன் புது மகளிரிடம் வைத்துக் கொள்ளும் நட்பு, அது அரசியலுக்கோ, நாட்டின் பத்திரத்துக்கோ ஊறு விளைவிக்காமல் இருந்தால் போதும் என்று இருப்பவள். அவள் இது குறித்துத் தன் கணவனை எதுவுமே கேட்கவில்லை. வஸுமதியின் மயக்கிலும் முயக்கிலும் சந்திரகுப்தன் உலகையே மறந்துபோய் விட்டான்.


ஓராண்டு காலம் இவ்வாறு ஓடிவிட்டது. இளவேனில். புதுப் பூங்காவில் மகரவேல் கொடி மகிழ்களைக் காமனுக்கு நகர் எங்கும் உள்ளி விழாவில் கெழுமிய காதலொடு வழிபாடு ஆற்றினர். சுண்ணம் மேல் சொரிவார்; வண்ணப் பந்து எறிவார்; வளையொலிப்ப ஒச்சி அரக்குறு நறுநீர் செங்குளிகம் குங்கும ஊறலொடு அகத்து அடங்கிய எந்திர நாளிகையின் மூலம் கலவை நீர் தெளிப்பார் — இப்படித் தெருக்களில் மாந்தர் பங்குனி விழாவை மணி அரையில் கட்டி ஆர்த்து வரம்பு மீறிய களியாட்டத்தில் மிதந்தனர். திடுமென வெட்டுக்கிளியின் கூட்டமென ஒரு பெரும் படை பாடலியைச் சுற்றி வளைத்துக் கொண்டது. வரலாற்றில் இந்தப் படையெடுப்பைப் பற்றி இரண்டொரு குறிப்பே காணப்படுகிறது. மகதத்தின் மேற்றிசையில் மணல்

சூழ்ந்த பாழ் நிலம் பரவியிருந்தது. இந்தப் பாலைவனப் பிரதேசத்திடையே புஷ்கரணம் என்ற ஒரு தனி நகரம் இருந்தது. நீர் வளமும் நிலவளமும் குன்றிய இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் ஜீவியத்துக்காக அக்கம் பக்கத்து வளநாடுகளில் புகுந்து தனதானியங்களைக் கொள்ளை அடித்துச் சென்றுவிடுவார்கள். இவர்கள் ஈரமற்ற கொடிய நிசிசரர்கள். இக்கள்வர்களுக்குத் தலைவன் சந்திரவர்மன். செல்வம் கொழிக்கும் மகத நாட்டைச் சூறையாட இவன் நெடுநாட்களாகக் காத்திருந்தான். பாடலியில் நடக்கும் ஏழு நாள் உள்ளி விழாவின் போது இவன் இதைச் செய்ய இலக்கு வைத்திருந்தான். பாடலியை ஆள்பவள் ஒரு பெண்ணரசி, அதன் வேந்தன் ஓர் உதவாக்கரை; அதை எளிதில் கைப் பற்றிவிடலாம் என்று அவன் கணக்குப் போட்டான். ஆனால் அவன் நினைத்தபடி பாடலி நகர் திண்மையற்ற நகரமன்று. லிச்சவிப் பெண் அப்பூம்பதியைச் சுற்றிப் பல எயில்களை எழுப்பி அவற்றின் எல்லைக் கதவங்களில் 'இந்திர கீலகம்' என்ற தாழ்ப்பிட்டு அதைப் புகுதற்கரிய கல்லரணாகச் சமைத்து விட்டாள்.

மகதேசுவரனுக்கு எதைப் பற்றியும் கவலை இல்லை. தந்த மஞ்சத்தில் அன்னத்தூவியணையில் கண்ணயர்ந்து கிடந்தான். அவன் பக்கலில் சாமரை வீசும் பணிப்பெண் அவன் துயில் கலையும் பொழுது நாட்டை நோக்கி வரும் அந்தப் பேராபத்தைப் பற்றி முகத்தில் திகில் ஆடச் சொன்னாள். அரசனிடம் உறங்கியிருந்த அந்தப் பழைய தறுகண் ஆண்மை புடைத்தெழுந்தது. "எங்கே, என் வாள்? எங்கே, என் மெய்க்காப்புக் கவசம்?" என்று பிரகோஷம் செய்ததும், சட்டென்று அவனுக்குக் குமார தேவியின் ஞாபகம் வந்தது. கிளர்ந்தெழுந்த அந்த வீர உணர்ச்சி மழுங்கியது. பக்கத்தில் படுத்திருக்கும் வஸுமதியை அணைத்துக் கொண்டு ஏளனம் தொனிக்க அவன், "பகைவன் நகரை நோக்கி வந்தால் நான் என்ன செய்வது? பட்டமா தேவி இருக்கிறாள், ஊரைக் காக்க; அவளிடம் போய்ச் சொல். எனக்கு என் வஸுமதி யிருக்கிறாள்" என்றதும் மீண்டும் அமளியில் சாய்ந்தான். அவனுடைய அயர்வைப் போக்க ஒரு தாசி திராட்சை மதுவைப் பொற் கிண்ணத்தில் ஊற்றி வஸுமதியின் கையில் தந்தான். அவள் ஒரு புன்னகை பூத்து அரசன் உதட்டருகில் அதனை வைத்தாள். அவளைப் பார்த்துக் கொண்டே அரசனும் மெல்லக் குடித்தான். வஸுமதி அவனை நோக்கி, "நீங்கள் எழுந்திருக்க வேண்டாம். விஷயம் என்னவென்று நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று எழுந்தாள். அரசனுடைய கண்களைத் துயில் அழுத்திக் கொண்டது. அவள் முறுவலித்து. "வீரனே, நன்றாகத் தூங்கு.... தூங்கு....கவலைப்படாமல் தூங்கு" என்றதும் மெல்ல நகர்ந்தாள்.

இந்தப் பக்கம் கோட்டையின் புலிநக மதில்களின் காவலன் பட்டமா தேவியை அணுகி எதிர்நோக்கி வரும் இன்னலைப் பற்றி எச்சரிக்கை செய்தான்.

அச்சமயம் குமார தேவி தன் அருமை மைந்தன் சமுத்ர குப்தனிடம் கொஞ்சிக் கொண்டிருந்தாள். 'கண்ணு! நீ வீர லிச்சவிக் குலத்துப் பேரன். இதை நீ என்னும் மறக்காதேடா. இந்தப் பாடலி நகரம் உன் காலின் கீழ் கிடக்கும் பீடமடா. பரதனைப் போல், மௌரிய சந்திரகுப்தனைப் போல், தேவானாம்பிரிய பிரியதர்சியைப் போல் கடல் சூழ்ந்த இவ்வுலகை உன் செங்கோலின் கீழ் கொண்டு வர வேண்டுமடா. உனது தோள் வலியால், கூர்ஜர நாட்டிலிருந்து சமதடம் வரை. இமயம் முதல் பாண்டியர் ஆளும் கொற்கை வரைக்கும் மகுடம் தாங்கும் மன்னர்களை உன் கழலடி





யில் வந்து வணங்கும்படி செய்யடா. அசுவமேத வேள்வி செய்து அழியாப் புகழைச் சூரியசந்திரர் ஒளிரும் நாள் வரை நிலைக்கச் செய்யடா' என்று அவனை அணைத்து முத்தமிட்டாள். குழந்தை சமுத்ர குப்தன் வயிரம் பதித்த பந்தினைக் கையில் வைத்துக் கொண்டு அன்னை சொல்வதைச் செப்புவாய் விரியக் கேட்டுக் கொண்டிருந்தான்.

இதற்குள் மெய்க்காப்பாளன் வாயிலாகப் பகைவர் முன்னேறும் செய்தி கேட்டுக் குமார தேவியின் முகம் வெளுத்து விட்டது. திகைத்து நின்றாள். அரசர் எங்கே என்று கேட்க அவள் நா எழுந்தது. சட்டென்று இந்த என்

ணத்தை விட்டொழித்து. ''மகா அமாத்தியரை உடனே இங்கு வரச்சொல்லு.... கோட்டை வாயில்களைப் பத்திரப்படுத்துங்கள். மடிய வேண்டுமானால் போரிட்டே மடிவோம்'' என்றாள் லிச்சவியருக்குள்ள மனத் திட்பத்துடன்.

அரசி கட்டளையிடுவதற்கு முன்பே மகா ஸசிவனும், மற்ற சேனாநாயகர்களும் கோட்டையின் திண்ணிய கதவங்களை மூடிக் கடும் காவல் புரியத் தொடங்கினர். மதில்கள் மீது எய்ப்புழைகளில் பெரிய அண்டாக்களில் எண்ணெய் கொதித்துக் கொண்டிருந்தது. எங்கு வலைக் கவசம் அணிந்து எந்திர வில்லாளிகள் எதிரிகளைச் சுட்டு வீழ்த்த ஆயத்தமாக நின்றனர். மதிலுக்கு மேல் உயரத்து அறையில் துளைவாய் வழியாக வெளியே பகைவரின் நடமாட்டத்தைக் கண்காணித்துக் கொண்டிருந்தனர், கோட்டைக் காவலர். சந்திரவர்மனின் தூசுப் படை சிறிது சிறிதாக முன்னேறிக் கொண்டிருந்தது. அகழிகளில் நூற்றுக்கணக்கான முதலைகள் பாசிக்குள் பதுங்கியிருந்தன. எதிரிகளில் சாகசமிக்கவர் சிலர் பெரிய ஏணிகளை மதின் மீது சாய்த்து ஏறத் தொடங்கினர். ஆனால் சற்று உயரம் ஏறும்போதே மகர வாய்கள் வழியாகக் கொப்புளித்து வரும் கொதி எண்ணெய் அவர்கள் மீது விழவே துடிதுடித்து அகழுள் விழுந்து முதலைகளுக்கு இரையாயினர். சந்திரவர்மனின் போர்க் களிறுகள் திண்ணிய உலக்கைகளைத் தம் துதிக்கைகளில் பற்றி மதின் கதவுகளைத் தாக்கின. ஆனால் நச்சு தோய்ந்த கணைகள் அவற்றின் மத்தகங்களைப் பிளக்கவே அவை பிளிறிப் பின்னடைந்து தம் வீரர்களையே கீழே தள்ளித் துவைத்து இரிந்தன.

போராடிக் கோட்டையைக் கைப்பற்றுவது எளிதன்று எனச் சந்திரவர்மன் தெரிந்துகொண்டான். பகைவர் அடுத்த தந்திரத்தைக் கையாண்டனர். நகரை நாற்புறமும் வளைத்து முற்றுகையிட்டனர். பாடலிக்கு வெளியே முக்கியமான சாலைகளைப் பிடித்துக் கொண்டு காளான் பூப்பது போல் பகைவர் தம் கூடாரங்களை அமைத்துக் கொண்டனர். அவர்களை மீறி அப்பூம்பதிக்குள் ஓர் ஈயோ, எறும்போகூட நுழைய முடியாது.

* *

அரண்மனையின் மந்திராலோசனை அறையில் படைத்தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் நகரப் பிரமுகர்கள் ஒன்றுகூடி நாட்டை எதிர்நோக்கி வரும் ஆபத்தை விலக்குவதற்கான வழிகளை ஆராய்ந்தனர். 'இப்பொழுதுக்குக் கவலை இல்லை. ஆனால் இந்தச் சந்திரவர்மன் நகரை முற்றுகையிட்டு உணவுப் பொருள்கள் வராமல் தடுத்து நம்மைப் பட்டினி போட்டுச் சாக அடிக்கப் பார்க்கிறான். இன்னும் ஒரு மாதம் ஓட்டலாம். அதற்குள் ஏதாவது வழி ஏற்படும்' என்ற ஒரு முடிவுக்கு வந்தனர்.

போர்த் திறம் வாய்ந்த புஷ்கரணத்தின் தலைவன் செய்துள்ள சூழ்ச்சி இருமுகமானது. பலவீனமுற்றிருக்கும் பாடலிநகரை உடனேயே கைப்பற்ற அவன் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. அப்படிச் செய்வதினாலும் அவன் அதிக லாபம் அடைந்துவிடப் போவதில்லை. நகரின் சுற்றுப்புறங்களைத் தன் வசத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்பதே அவன் எண்ணம். அவனுடைய படை தொலைவிலிருந்து வந்திருப்பதால் சில நாட்களாவது அதற்கு ஓய்வு தேவைப்பட்டது. மேலும் பாடலியை நோக்கி வரும் உணவுப் பண்டங்களைக் கவர வெளியில் இருப்பதே அனுகூலம். அருகில் ஓடும் கங்கை நதியிலும் அவன் தன் போர்ப் படகுகளை நிற்க வைத்திருந்தான். இப்படி எந்த வழியிலும் குப்தர்களுக்கு வெளி உதவி வராதபடி தடுத்துவிட்டான். ஒரு மாத காலம் இவ்வாறு சென்றது. கோட்டைக்குள் இருந்த தானியக் களஞ்சியங்கள் சுருங்கத் தலைப்பட்டன.

முதலமைச்சருடன் குமாரதேவி, ''இதற்கு ஒரு பரிகாரம் இல்லையா? ரகசியமாக உணவுப் பண்டங்களைக் கொண்டு வருவதற்கு வழி ஏதுமில்லையா?'' என்று பிரச்னையை எழுப்பினாள்.

''அதுதான் மகாராணி, எங்களுக்கும் தெரியவில்லை.... விழிக்கின்றோம். அந்தக் கொள்ளைக்காரர்கள் எல்லா வழிகளையும் அடைத்து விட்டார்களே....'' என்றான் அமைச்சன்.

''பின் என்னதான் வழி ?''

'' ஒரே வழிதான் இருக்கிறது.''

ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்ட பட்டமாதேவி கோட்டையின் உச்சி மாடத்தின் திறந்த பகுதிக்கு வந்து தன்னுடைய தலைப்பில் மறைத்திருந்த செங்கண் புகைவண்ண தூதுப் புறாவை வெளியே ஆகாயத்தில் பறக்கவிட்டாள். இருமுறை புறா கொத்தளத்தை வலம் வந்ததும் வடக்கு நோக்கித் தாவியது. அது சென்ற திசையே குமாரதேவி கண்ணைச் செலுத்தினாள். மேகத்திடையே கரும் புள்ளி போல் தோன்றிய அப்புறா மறைந்துவிட்டது. தேவியார் நெடுமூச்செறிந்து மெல்ல இறங்கி வந்தாள். ஒரு வாரமும் கடந்தது. சந்திரவர்மன் யுத்தத்தைத் தொடங்கவும் இல்லை. அந்த இடத்தைவிட்டு நகருவதாயும் இல்லை. நகரில் உணவுப் பண்டங்களின் தட்டுப்பாடு. வணிகரெல்லாம் கடைகளை மூடிவிட்டனர். விலைவாசியும் ஏறத் தொடங்கியது. இதனால் மக்களிடையே பெரிய கலக்கம் மூண்டது. நிர்வாகத்தைக் குறைகூறத் தொடங்கினர்.

அன்று சந்திரகுப்தனுடன் வேட்டைமேல் சென்ற கேள்வருள் வச்சிரசேனன் ஒருவன். இவன் ஒரு குறுநில மன்னனின் மகன். தன்னுடைய சிறிய ராஜ்யத்தைக்கூடக் கவனியாமல் மகத ராஜதானியான பாடலியில் அரசனுடன் கேளிக்கைகளில் துணை நின்றான். காட்டில் அந்த அழகியைப் பார்த்த பிறகு அவள் மீது மயலாகிவிட்டான். கடிவாளம் அறுந்த குதிரையைப் போல் இவனுடைய மனம் அவளைக் கொள்ளவே அலைபாய்ந்தது. இவன் துணிந்து தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய மொய்ம்புடையவன். ஆனால் சந்திரகுப்தனுக்கு அஞ்சி இவன் பின்வாங்கினான்.

சந்திரகுப்தனும் கிடைத்தற்கரிய அப்பெண்ணைப் பருந்தென இவன் கண் முன்பே கொத்திச் சென்றான். இது இவன் உள்ளத்

ஹென்னால்

மீண்டும் கிடைக்கிறது

வெகுகாலமாகவே அமோகமாக விற்பனையாகி வரும் கேசத்தை கருமையாக்கும் சாதனம். உங்கள் கேசத்தை இயற்கையான மற்றும் நிரந்தரமான கருமையுடனும் பளபளப்பாகவும் இருக்கச் செய்கிறது.

உடல்நலக் குறைவினால் ஏற்படும் இளமை நரையைப்பற்றியோ, அல்லது வயோதிகத்தில் ஏற்படும் நரையைப்பற்றியோ கவலையடைய வேண்டாம். **ஹென்னால்** தற்போது உங்களுக்கு மீண்டும் கிடைக்கிறது. அது உங்களது கேசத்துக்கு இயற்கையான கருமை நிறத்தை அளிப்பதுடன், பூரண ஆரோக்கியத்துடன் இளமையான தோற்றத்தை அளிக்கிறது.

கேசத்தின் அடி வேர்களுக்கு போஷாக்கு அளித்து, செழிப்பாக வளரவும், காலக்கிரமத்தில் கேசம் இயற்கையான கருமையுடன் கூடியதாக இருக்க உதவுமாறும், அனேக பொருட்கள் சேர்ந்து தயாரிக்கப்படுவது **ஹென்னால்.**

சாதாரணமாக கடைகளில் கிடைக்கும், கேசத்தை கருமையாக்கும் இதர சரக்குகளை போல அல்ல, **ஹென்னால்.** இது தனித்தன்மை வாய்ந்தது.

1. நிரந்தரமாக நரையை தடுப்பதுடன், உங்களைப் பல வருடங்கள் இளமையான தோற்றத்துடன் விளங்கச் செய்கிறது.

2. இயற்கையான கருமையுடன் செழிப்பாக புது கேசம் வளர உதவுவதோடு, அதை வலுவடையவும் செய்கிறது.

ஹென்னால் உபயோகிக்கும் முறை :

ஹென்னாலில் உள்ள, கேசத்துக்கு போஷாக்கு அளிக்கும் சத்துக்கள் கேசத்தின் வேர்க்கால்களில் நன்கு ஊறி, கேசத்துக்கு இயற்கையான கருமை நிறத்தை அளிக்க வேண்டி, போதிய கால அவகாசம் அளிக்க வேண்டும். மூன்று மாத காலம் போதுமானது. இந்தக் கால கெடுவில் கேசம் இயற்கையான கருமை நிறத்தை அடைகிறது. **ஹென்னால்,** கேசத்தை கருமையடையச் செய்வது மட்டுமல்ல, அது கேசத்திற்கு போஷாக்கும் அளிக்கிறது; கேசத்தை அழகுறச் செய்ய மிகவும் முக்கியமான சாதனம்.

ஹென்னாலை உபயோகிக்க ஆரம்பித்த ஒரு சில வாரங்களிலே ஒரு புதிய மாறுதலைக் காண்பீர்கள். இதற்கு முன்பு காணப்படாத ஒரு பளபளப்புடன் உங்களது கேசம் பிரகாசிக்கும். உங்களது நண்பர்கள் உங்களைக் கண்டு பிரமித்துப் போவார்கள். உங்கள் தன்னம்பிக்கையின் சக்தி வளர்ந்து பல மனிதர்களையும், விஷயங்களையும் நிர்வகிக்கும் திறமையைப் பெறுவீர்கள். எவ்வளவு வயது அடைந்தவராக இருப்பினும், **ஹென்னால்** கைவசமிருந்தால் கவலை வேண்டாம். உங்களது தொழிலில் மற்றும் சமூகத்தில் வெற்றி வாய்ப்பு நிச்சயம்.

உங்களது கேசம் தொடர்ந்து கருமையாக இருக்க **ஹென்னாலை** வழக்கமாக உபயோகியுங்கள். நீங்கள் தேர்ந்து எடுக்க மூன்று ரக **ஹென்னால்** உள்ளன. **ஹென்னால்** (எண்ணெய்) **ஹென்னால்** (பசையற்றது) **ஹென்னால் பொமேட்** இந்த மூன்று ரகங்களும், யாவருக்கும் ஏற்றவாறு, வாசனை சேர்க்கப்பட்டுள்ளது. **ஹென்னால்** (எண்ணெய்) வறட்சியான, மற்றும் குத்திட்ட கேசத்திற்கு விசேஷமாக ஏற்றது. நீண்டகால நரைக்கு நல்ல பலனளிக்கக் கூடியது **ஹென்னால் பொமேட்.**

நல்ல பயனை அடைய தலையை சுத்தமாகக் கழுவ வேண்டும். வாரம் இருமுறை பியர்லென் பாரிஸின் விசேஷ தயாரிப்பான **சில்கோ ஹேர் ஷாம்பு** போட்டுத் தலையை சுத்தம் செய்யுங்கள்.

இன்றே **ஹென்னால்** வாங்குங்கள். வருங்காலத்தில் இளமையுடன் விளங்குவீர்கள்.

ஹென்னால் தயாரித்து வெளியிடுபவர்கள் :

பியர்லென் - பாரிஸ் பிரைவேட் லிமிடெட், தபால் பெட்டி எண் 493, பம்பாய்-1



பம்பாய், பெர ஆப் இந்தியா லிமிடெட்டைச் சார்ந்த ஸ்ரீ ஜி. எஸ். சேஷாத்ரி அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி **லக்ஷ்மி**க்கும், மெஸர்ஸ் காப்ரிகான்ஸ் (இந்தியா) லிமிடெட்டைச் சார்ந்த சிரஞ்சீவி **ஆர். சீனிவாசன்** அவர்களுக்கும் திருமணம் பம்பாயில் வெகு சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

தில் பெரும் பகையை மூட்டி விட்டது. தனக்குள் பொருமி இவன் சொல்லிக் கொண்டான் — "இந்தப் பயல் ஆந்திரர்களுக்குக் குற்றேவல் புரிந்து வந்த கடோத்கசனின் மகன். உயர் குலத்து லிச்சவி அழகியை மணந்து கொண்டதனால் அல்லவோ இன்று மகுடம் தாங்குகிறான்? அவனைவிட நான் எந்த வழியில், குலப் பெருமையிலோ தாளாண்மையிலோ குறைந்தவன்? ஆ.... நான் கண் வைத்த பொருளை இந்தக் காமப் பித்தன் கவர்ந்து சென்றானே. நண்பன் என்றுகூட அவன் என்னை எண்ணிப் பார்க்கவில்லையே. இருக்கட்டும்... எனக்கும் காலம் வரும்."


சந்திரகுப்தனுக்கு இச்சகம் பாடும் மற்ற விடர்கள் இவனைப் பார்க்கும்பொழுதெல்லாம் ஏதாவது ஏளனமாகவே பேசுவார்கள் — "வச்சிரசேனா, இதோ, ரத்தினத்தைப் பார்த்தாயா? அரசர் உன்னிடம் காட்டச் சொன்னார். ரத்தினப் பரீட்சையில் நீ கெட்டிக்காரனாயிற்றே. இந்த வயிர மணியைப் போழ்ந்து பார். இது துளைப்பட்டால் நீ வைத்துக் கொள்ளலாம். இன்றேல் அரசனுக்குச் சொந்தமாகும்" என்று இவனிடம் ஒரு சாதாரண படிகத்தைக் காட்டுவார்கள். அப்போது அவர்கள் கைதட்டிச் சிரிப்பது இவன் இதயத்தை ஆயிரம் ஈட்டிகளால் குத்துவது போலவே இருக்கும்.

போர் நெருக்கடி வந்துவிடவே வச்சிரசேனனுக்கு மதில் உறுப்புக்களை இரவு நேரங்களில் காவல் புரியும் முக்கிய பொறுப்பு இடப்பட்டது. அவன் இரவுக் காவல் படைக்குத் தலைவன்.

நிலவு இராத இருட் பக்கத்துக் கங்குல். வச்சிர சேனன் மதில் மேல் உள்ள குறுகிய நடைபாதையில் ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்கு நடந்தவாறு எதிரே இருக்கும் பகைவர்களின் போக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆங்காங்கு ஒன்னலரின் பாசறைகளில் விளக்கொளிகள் சிமிட்டின. மதின் விளிம்பிலிருந்து எட்டிப் பார்த்தால் கீழே இருண்டு தென்படும் முதலைகள் மலிந்த அகழி. நள்ளிரவு நெருங்கிக் கொண்டிருந்தது. நகரத்துத் தெருக்களில் நாய்கள் இரண்டொன்று அழும் அரவத்தைத் தவிர வேறு ஒலி எதுவுமே இல்லை. பாடலியை ஒரு பேயிருள் தன் கருஞ் சிறகுள் அடக்கிக் கொண்டிருந்தது. பாடலியும் துயின்றது; எதிரே பரந்தவெளியில் பகைவரும் துயின்றனர். கோட்டை வாயில்களில் மட்டும் அஞ்சாக் கண்ணராய்க் காவலர்கள் அவ்வப்பொழுது காலை உதைத்து வேலினைத் தரையில் குத்தும் ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. இரவுப் புட்கள் சில விகாரக் கூச்சலுடன் வானத்தில் இடம் பெயர்ந்து சென்றன.

அரச மாளிகையின் உப்பரிகையிலிருந்து நடு யாமத்தை அறிவிக்கும் மணியொலியும் ஒலித்து அடங்கிவிட்டது. நடு நடுவே எண் திசையிலும் மதில்களில் வைக்கப்பட்ட போர் முரசங்கள் சத்துருக்களைப் பார்த்து, 'ஜாக்கிரதை! விழித்திருக்கிறோம்' என்று அறைவது போல் இமிழ்ந்தன.

பல்வேறு சிந்தனைகள் அலைக்க வச்சிர சேனன் கண்களை அழுத்தும் தூக்கத்தை



"என்ன ஆச்சரியம்! மணியார்டர் வந்திருக்கே! எங்கேயிருந்து வந்தது?"

"இன்னிசை என்ற பத்திரிகையில் 'மணியார்டர்' என்ற என் கதையைப் பிரசுரத்துக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்களாம். அதற்காக..."

"அடுத்தது 'செக்' என்று கதை எழுதி அனுப்புங்கோன்னா!"

உடலை முரி உதறிவிட்டுக் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தான். 'இந்தப் பொன் மலி பாடலியைக் காத்துத்தான் என்ன பயன்? இதற்குரியவன் இப்பொழுது பஞ்சணையில் தன் காமக் கிழத்தியுடன் புரண்டு கொண்டிருப்பான்; மதுவைக் குடித்து விட்டுச் சுகநித்திரை செய்து கொண்டிருப்பான். நகர் எங்கிலும் உணவுப் பஞ்சம்; மக்கள் மாண்கின்றனர். வெளியிலிருந்து உதவி வருவதற்கு ஒரு வழியும் இல்லை. இப்படி எத்தனை நாட்கள் செல்லும்? என்றாவது ஒருநாள் இந்தச் சந்திரவர்மனுக்கு அடிபணிந்துதான் போக வேண்டும். இந்த அரசியும் செருக்கு மிகுந்தவள். இவளும் நல்ல பாடம் கற்கப் போகிறாள். சந்திரவர்மனிடம் அடைக்கலம் புகுந்தால் இந்த அழகிய நகரும் அதன் மக்களும் பிழைத்துப் போவார்கள். ஆனால் அது நடக்குமா? இந்த உதவாக்கரை சந்திரகுப்தனுக்கு நான் எதற்காக உதவி புரிய வேண்டும்? என் கைக்கு எட்டியதை வாய்க்கு எட்டாமல் தட்டிப் பறித்துவிட்டானே. பிறர் கேலிக்கூத்துக்கு என்னை ஆளாக்கி வேடிக்கையும் பார்க்கிறான். வளர்மதி! தேவர்கள் அநுபவிப்பதற்கென்றே கடவுள் உன்னை ஆரணங்காகப் படைத்திருக்கிறான். உன்னை நான் அடைந்தே தீருவேன். பெண்களின் மனம் ஒரே ஆடவனிடம் நிலைத்து நிற்காது. உன்னை நான் அவனிடமிருந்து கவர்ந்தே தீருவேன். அடே, சந்திரகுப்தா! அவன் என் கையில் சிக்கியதும் உன்னை ஊர் சிரிக்கச் செய்கிறேனா, இல்லையா பார். என் முழு ஆத்திரத்தையும் தீர்த்துக் கொள்வேன்.' இப்படி ஒரு பயங்கர மனநிலையில் தன்னையும் அறியாமல் கொத்தளத்தின் கோடிப் பகுதிக்கு வந்துவிட்டான். செங்குத்தான மதில் பகுதியாக இருந்ததால் அங்கே ஆள் நடமாட்டமே இல்லை. அந்தப் பக்கம் பகைவர் எவராலும் ஏறி வரவும் முடியாது. அந்தரத்துத் தாரா கணங்கள் கிழி அவிழ்ந்து கொட்டும் பொற்காசுகள் என மேலே வானை நோக்கிச் சரிந்தன. அதேசமயம் அந்த மதிலின் எய்ப்

புழைப் பக்கமாக இரும்பு முள்வேலி அடைத்த பகுதியில் விளக்கொளி ஒன்று தெரிந்தது. அதைக் கூர்ந்து நோக்கினான் வச்சிரசேனன். ஒரு நிழலுருவம் அந்த விளக்கைத் தூக்கியும் ஆட்டியும் குறி செய்வது தெரிந்தது. தன் காலணிகளைக் கழற்றி ஒருபுறமாகத் தள்ளி விட்டுப் பஞ்சடி வைத்துக் கையில் உடை வாளை ஏந்தியபடி விளக்குத் தெரியும் திசையை நோக்கி மெல்ல நகர்ந்தான். இப்பொழுது நன்றாகத் தெரிகிறது அவ்வுருவம். கையில் விளக்குடன் இருப்பது ஒரு பெண். அவள் மறுபடியும் விளக்கைத் தூக்குகிறாள்; அதை ஊசலாட்டுகிறாள். வச்சிரசேனன் பின்னும் நெருங்கினான். விளக்கொளியில் அவள் முகம் ஓரளவே புலப்பட்டது. மல்லிகையின் மணம் மெல்ல வந்தது: அவள் தலையில் சூடிக்கொண்டிருக்கும் மலர்க் கண்ணிதான். இப்பொழுது அவள் முகம் நன்றாகத் தெரிகிறது. பதுமராக மணி போல் அவளுடைய கண்கள் ஜொலிக்கின்றன. சந்தேகமே இல்லை; அவள் ஒரு வேவுகாரி. வெளியே இருக்கும் சந்திரவர்மனின் ஆட்களுக்குக் கோட்டை நுட்பங்களைப் பற்றித் தீபத்தின் வாயிலாகச் சங்கேதம் செய்கிறாள். எப்படி இத்தனை காவல்களை மீறி அவள் இங்கு வந்தாள்? தன் மூச்சு அவள் பின்புறம் படும் அளவுக்கு வந்துவிட்டான் வச்சிரசேனன். அவள் மின்வேகத்துடன் திரும்பினாள். அவளுடைய கையில் இருந்தது ஓர் **ஓதிம விளக்கு**. அதன் ஒளியில் அவள் யார் என்பது தெரிந்தது ; 'ஆ....வஸுமதி! சரியாக மாட்டிக் கொண்டாய்!' மெல்லிய காற்றில் அவ்வோதிம விளக்கினுள் சுடர் நாக்கு அலைந்தது. அவளை ஏற இறங்கப் பார்த்தான். கருவண்டு போன்ற அவளுடைய கண்கள் மேலும் விரிவடைந்தன. அவள் வஸுமதிதானா? அல்லது வேறு எந்த மாயாரூபமா? என்றெல்லாம் வச்சிரசேனனைத் திகைப்புறச் செய்தது அவள் எழிலார் மேனி. இல்லை, வஸுமதியேதான்! விளக்கேந்திய அவளுடைய கரங்கள் நடுக்குற்றன. தன் உடை வாளை அவள் மோவாய் அருகே நீட்டி வச்சிரசேனன் விளக்கை அவளிடமிருந்து பற்றிக் கொண்டான். உல்லாசச் சிரிப்புடன், "இதென்ன, இந்த அர்த்தராத்திரியில், மாதேவியார் இந்த இடத்தில்?" என்றான்.

அச்சத்தைக் காட்டும் ஒரு மெல்லிய ஒலி அவள் வாயிலிருந்து எழுந்ததே தவிர அது அடங்கிவிட்டது. அவளது ஆடை மறைவிலிருந்து கரிகையொன்று வச்சிரசேனன் மார்புக்கு நேராகச் சரேலெனப் பளபளத்தது. எஃகுக் கவசம் பூண்டிருந்ததால் அவன் உயிர் தப்பினான். அடுத்த கணமே அவளை இறுகப் பிடித்துத் தன் இரும்புக் கைகளால் வளைத்துக்கொண்டான். "வஸுமதி! என்ன காரியம் செய்யப் பார்த்தாய்? என்ன இருந்தாலும் நீ பெண். என்னுடைய பிடியிலிருந்து இனிமேல் நீ தப்பவே முடியாது" என்றான் மூச்சுத் திணற.

அவள் கையிலிருந்த அந்த ஓதிம விளக்கு தட்டுடன் கீழே விழுந்து அணைந்தது. அந்த மையிருளில் இரு உருவங்கள் கொத்தளத்தின் அந்த மூலைப் பகுதியில் ஒருவரை யொருவர் நோக்கியபடி நிற்பது எவர் கண்ணிலும் படவில்லை. பகைவரின் பாசறையிலிருந்து இரண்டொரு தரம் விசித்திரமான விளக்குச் சமிக்ஞைகள் தோன்றி மறைந்தன.

இந்தப் பக்கம் வச்சிரசேனனின் கடுமையான கைவலைக்குள் சிக்கிய அந்தப் பெண் புலி அவன் முகத்தைப் பிராண்டினாள். "உன்னால் ஆனதை யெல்லாம் செய். நீ என் முகத்திலும் தோளிலும் பதித்த நகக் குறிகளை உன் காதலனிடம் காட்டப் போகிறேன்" என்று வச்சிரசேனன் சொன்ன பொழுது வஸுமதியின் உடல் அவன் பிடியில் துவளத் தொடங்கியது. அவள் மூர்ச்சித்து விட்டாளா என்பது அப்பேயிருளில் தெரியவில்லை. ஆனால் அவள் மூர்ச்சை போடவில்லை. சில கணத்துக்கெல்லாம் அவள் தேம்பி அழுவது தெரிந்தது.

"அழ வேண்டியதுதானே? பெண்களுக்கு இதைத் தவிர வேறு என்ன தெரியும்? இதற்கெல்லாம் இளகிப் போய்விட மாட்டேன். வஸுமதி, நீ அழுவதிலும் ஓர் அழகு இருக்கிறது" என்று கூறி வச்சிரசேனன் மேலும் தன் கைக்குள் அவளை நெருக்கினான்.

அழுகை ஓய்ந்ததும் வஸுமதி நிமிர்ந்து நின்று, "நீ யார், என்னை எதற்காக இப்படி அலைக்கழிக்கிறாய்? என்னை விடு.... விடு" என்று திமிறிக் கொள்ளப் பார்த்தாள். அவளுடைய ஒல்கிய உடலை மலைப் பாம்பு போன்ற வச்சிரசேனனின் கைகள் பின்னும் பிணைத்துக் கொண்டன.

"பெண்ணே! நான் யாரா? உன் காதலனின் தோழன். இந்தக் கோட்டையின் காவலன். ஓடையருகில் அன்று படுத்திருந்து பாசாங்கு செய்தாயே, ஏ மாயக்காரி! அன்றே உன் காமர் வனப்பு என்னை ஆட்கொண்டு விட்டது. இன்று என்னுடைய மனோரதம் நிறைவேறப் போகிறது.... நீ எனக்கே உரியவள்" என்றான்.

"அடப் பாவி! என்னை விட்டு விடு... இன்றேல் அவரிடம் சொல்லி உன்னை என்ன செய்கிறேன், பார்...பாவி என்னை விடு...ஐயோ!" என்று கூவிப் பிய்த்துக் கொண்டு வரத் தவித்தாள். வச்சிரசேனன் அவளுடைய வாயைத் தன் உள்ளங் கையால் பொத்திவிட்டான்.

வச்சிரசேனன் ஏளன நகைப்புடன், "நான் பாவி என்றால் நீ என்னவாம்? இந்த இருட்டில் அரண்மனைக்கு வெளியே எதற்காக வந்தாய்? சந்திரகுப்தனின் ஆசைக் கிளியே! உன் கையில் இந்த ஓதிம விளக்கு எதற்கு?" என்றான்.

மருண்டுபோய் வஸுமதி, "எங்கே வேண்டுமானாலும் வெளியே செல்ல எனக்கு அவர் உத்தரவு தந்திருக்கிறார்..." என்றாள்.

"ஓகோ, சந்திரகுப்த மகாராஜா உன்னை இங்கே அனுப்பிப் பகைவருக்குச் சங்கேதம் காட்டச் சொன்னாராக்கும்?"

அப்போது வஸுமதியின் உடல் எதனாலோ சிலிர்த்திட்டது. "அதமனே! என்னை நகைக்காதே. நான் பௌத்த ஆதுலசாலையில் நோயுற்றுக் கிடப்பவர்களுக்குச் சேவை புரிய அன்றாடம் அரசர் அனுமதியின்பேரில் வருகிறேன். அதே போல் இன்றும் வந்தேன்."

"நல்ல பெண்... உயர்ந்த பண்பு; அருமைத் தொண்டு நீ செய்வது. ஆனால் இந்தக் கொத்தளத்தின் பக்கம் நீ வருவானேன்? இங்கேயா இருக்கிறது அந்த ஆதுலசாலை?"

வஸுமதி பேசவே யில்லை.



"என்னம்மே! இப்படி நடுத் தெருவிலே...?"
"வேறு என்ன செய்வது? பிளாட்பாரத்திலே கடைவைக்கக் கூடாது என்று நீ தா னே சொன்னே?"

"சரி, இந்த மாய்மாலம் எதற்கு? இன்று இரவு என்னிடம் சிறைப்பட்டிருக்க வேண்டியதுதான். நாளைக்கு உன் காதலன் செய்வதைச் செய்யட்டும். இப்பொழுது காவலனிடம் உன்னை ஒப்படைக்கப் போகிறேன்.... என்ன சொல்கிறாய்?" என்றான் வச்சிரன்.

தொண்டையடைக்க அவள், "நீ எதைக் கேட்டாலும் நான் கொடுக்கிறேன். என்னை விட்டுவிடு" என்று கெஞ்சினாள்.

"எனக்கு வேண்டியதை நான் வலுக்கட்டாயமாகப் பெற முடியும்" என்றான் வச்சிரன் எக்களிப்புடன்.

உடல் நடுக்குற அப்பேதை, "உனக்கு என்னதான் வேண்டும், சொல்லேன்?" என்றாள்.

ஏளனச் சிரிப்புடன், "நீதான் எனக்குத் தேவை" என்றான் வச்சிரன்.

வஸுமதி அவனது அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அரும்பாடு பட்டாள். அவனுடைய அகலமான மார்பை அறைந்து, "என்னை விடடா... விடு... நான் கோப் பெண்டு. என்னிடம் நீ ஏதாவது தவறாக நடந்து கொண்டால் உன்னைச் சூலத்தில் ஏற்ற வழி செய்வேன்" என்றாள். அப்போது புலிக்குரிய வெஞ்சினத்துடன் மார்பு விம்ம அவனைச் சுடுவது போல் பார்த்தாள். அந்த இருட்டிலும் அவளுடைய கண்கள் பளபளத்தன.

"துள்ளாதே இளமானே! உன் உருவழகால் அரசரை மயக்கி நீ உள்ளே புகுந்துவிட்டாய்" என்ற வச்சிரசேனன் ஏளனச் சிரிப்புடன், "நீ செய்த இந்தத் துரோகச் செயலைப் பட்டமாதேவியிடம் எட்டவிட்டால் எனக்கு வெகுமானமே தருவார். உன் பின்னால் திரியும் அந்தக் கசடனுக்கு இந்த நாட்டில் செல்வாக்கில்லை என்பதை அப்போதுதான் உணர்வாய். ஞாபகம் இருக்கட்டும். நீ மாதேவியின் பரம விரோதி" என்றான்.

வஸுமதி அதிர்ந்திட்டு, அழுகை வெடித்து வர "கருணை காட்டு... நான் அரசரின் இனியாள்.... என்னை ஒன்றும் செய்யாதே" என்றாள்.

கடுங்குரலில் வச்சிரசேனன், "நீ சந்திரவர்மன் ஏவிய வேவுகாரி. இந்தப் பூம்பாடலியைப் பாழாக்க வந்த பேய்" என்றான். அம்மெல்லியலாளின் அழுகை சிறிதேனும் அந்த வன்னெஞ்சனை இளக்கவே யில்லை.

"என்னை ஏன் இப்படி வதைக்கிறாய்?" என்று அவள் கண்ணீர் பெருகக் கேட்கையில் வச்சிரசேனன், "நான் விரும்புவது உன்னையே. நீ உள்ளுற எனக்கு இணங்க வேண்டும். நீ உயர்வாக மதிக்கும் அந்த மதுப் பித்தன் உன் கணவன். இப்பொழுது வேறொரு பரத்தையுடன் இன்பம் அனுபவித்துக்கொண்டிருப்பான். நீ அவன் காமத் தீக்கு இரையாகும் விட்டில்களில் ஒன்றாவாய். உன்மீது உளமாரக் காதல் கொண்டுள்ளேன்...எனக்கு நீதான் வேண்டும்" என்றான்.

வஸுமதி இதைச் செவியுற்றதும் விலவிலத்துப் போய் விட்டாள். "ஐயோ! நீ நினைப்பது போல் நான் மானங்கெட்டவளன்று. அரசரிடம் உண்மை அன்பு வைத்திருக்கும் கற்புடையவள். சந்திரவர்மன் ஏவிய வேவுக்காரியே நான். இதற்காகவே நான் மகதத்துக்கு வந்தேன். வழியில் இடப்பதுபோல் பாசாங்கு செய்தேன். ஆனால் சந்திரகுப்தனைப் பார்த்ததும் உண்மையில் காதல் சுவையை முதன் முதலாகப் பெற்றேன். அவரையே என் தெய்வமாகப் பாவிக்கிறேன். என் பெண்மைக்கு ஊறு செய்யாமல் என்னை விட்டுவிடு.... சந்திரவர்மன் பாடலியைக் கைப்பற்றுவது என்னவோ உண்மை. நீ இந்த நாட்டின் எந்தப் பகுதியைக் கேட்டாலும் நான் அதைப் பெறுவதற்கான வழி செய்வேன். என்னை இப்பொழுது விட்டுவிடு!" என்றாள்.

"அப்படிச் சந்திரவர்மன் பாடலியைப் பிடிக்கத் தவறினாலோ?"

"அது நடக்கவே நடக்காது."

வச்சிரசேனன் சிரித்து, "ஓ, அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாயா? சந்திரகுப்தன் மீது உனக்குக் கொள்ளை அன்பானால் அவனுடைய நாட்டுக்குக் குழி பறிப்பாயா இப்படி?" என்றான்.

அவள் சிலகணம் வாளாவிருந்ததும் மீண்டும் பேசினாள். "சந்திரவர்மர்! எனக்கு அன்னியரல்ல. அவரிடம் நான் பெறும் ஊதியத்துக்காக வேலை செய்யவில்லை. அவர் என் தந்தை."

திடுக்குற்ற வச்சிரசேனன், "சந்திரவர்மரின் பெண்ணா நீ?" என்றான்.

"ஆம்." மேலும் அவள் தொடர்ந்தாள். "நான் சிறு வயது முதற்கொண்டே பல கலைகளைக் கற்றவள்."

"புரிகிறது. இந்த வேவுக் கலையையும் உன் தந்தையிடமே கற்றிருப்பாய்! அவரைக்கேட்டு நீ எனக்கு எதையும் வாங்கிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் உன் உள்ளம், உடல் இவையே. நீ இதற்கு இணங்காது போனால் எல்லாம் விபரீதமாக முடியும். இங்கு நீ இரவில் மறைந்து வருவது உன் கணவனுக்கு எட்டிவிடும். அவனுடைய கொடூர குணம் பின்னர்தான் உனக்குப் புரியும்" என்றான் வச்சிரசேனன்.

வஸுமதி குரல் தழுதழுக்க, "என்னை இப்படித் துன்புறுத்துவதைவிட என் மென்னியை

அழுத்திக் கொன்று இவ்வகழில் தள்ளி விடு. ஆனால் மகாராஜாவுக்கு மட்டும் இது தெரியக் கூடாது. அவர் என்மேல் அவநம்பிக்கை கொண்டால் அப்புறம் நான் இருந்தால்தான் என்ன? இறந்தால்தான் என்ன? என்னைக் காட்டிக் கொடுத்து விடுவாயா?'' என்றான்.

பெண்கள் இரு மனம் படைத்தவர்கள். அவர்களுடைய போக்கை யாரால்தான் புரிந்து கொள்ள முடியும்? வஸுமதி வழிக்கு வருவதுபோல் தோன்றவே, வச்சிரசேனன், ''நான் அவனிடம் சொல்ல மாட்டேன். அவ்வளவு மதியீனி அன்று. நீ எனக்குத் தரும் பரிசுதான் என்ன?'' என்று கேட்டான்.

வஸுமதி பேசவே இல்லை.

மீண்டும் கேட்டான் வச்சிரன். — ''நீ தரும் பரிசென்ன?''

அப்பொழுதும் அவள் வாய் திறக்கவில்லை.

பொங்கி எழுந்த காம வேட்கையை அடக்க முடியாமல், வச்சிரசேனன், அவளுக்கு ஒரு முத்தம் ஈந்தான். ''வஸுமதி! இன்றே உன் அழகின் ஜ்வாலையில் என்னை ஆஹுதி செய்து கொள்கிறேன்'' என்று கூறி அவளைப் புல்லத் துடித்தான்.

எங்கிருந்தோ அசுர பலம் அவளுக்கு வந்தது. அவனது மலைப் பாம்பு அணைப்பிலிருந்து, தன்னை விடுவித்துக்கொண்டு மூச்சுத் திணற, கூந்தல் அவிழ்ந்து புரள விழிகள் விரிந்து நீர் பெருக்க, ''நீ மட்டுமல்ல, நானும் சந்திரகுப்தனும் இந்த மகதமும் பெருந் தீயில் எரிந்து சாம்பராக வேண்டும்'' என்று கூறினாள். துள்ளி ஒருபுறமாய் ஒதுங்கிப் படிகள் வழியாய்த் தன் இடத்தை நோக்கி ஓடினாள்.

* * *

பாடலி நகரத்தின் நடுநாயகமான பகுதியில் உயர்ந்து பரந்த மேட்டின் மேல் பழைய அரண்மனை இருந்தது. அது மௌரிய காலத்திலேயே பிரியதர்சி அசோகனால் நிருமாணிக்கப்பட்டது. அதைச் சுற்றிலும் கல் அரண்கள். கிழக்கே செல்லும் அரசர் மருங்கில் அபூர்வ சிற்ப வேலை வாய்ந்த நெடுந்தோரண வாயில். அதைக் கடந்து உட்புறம் சென்றால் நூற்றுக் கால் மண்டபத்தின் மேல் தளத்தில் மந்திராலோசனைக் கூடம். அதன் பின்னால் படிப் படியாக உயரும் அரச நிர்வாகப் பகுதிகள், கருவூல அறை, அலங்கார அறை, தெய்வ வழிபாடு அறை, சித்திரசாலை இப்படிப் பலப் பல. இதன் உட்புறம் ஓர் அழகிய பூங்கா. அதன் நடுவில் தாமரைப் பூத்தடாகம். அதில் இணைபிரியாத அன்றில்களும் அன்னப் பறவைகளும் பல நிற மீனினங்களும் உலவி வந்தன. ஒரு பக்கம் பச்சிலைச் செடிகள் அடர்ந்த செய்குன்றுகள்.

இதையெல்லாம் தாண்டினால் ஆழமான ஒரு சிறு அகழ். அதற்கு அப்பால் மகேசுவரனின் அந்தப்புரம். தூக்கும் பாலம் ஒன்று அதைப் புறப் பகுதியுடன் இணைத்தது. அதன் ஆசார வாசலில் பெண் கஞ்சுகிகள் (மெய்க் காப்பாளர்) எல்லியும் பகலும் காத்து வந்தனர். அவர்களை மீறி எவராவது சென்றால் தலை வெட்டுண்டு உருளும். வெண் சுதை மாடம் இந்திரன் உலகோ என்று மருளும்படி ஓங்கி நின்றது. மூன்றடுக்கு மாளிகை அது. கீழ்ப் பகுதி பனிவெண் பளிங்கினால் ஆனது. இரண்டாவது மூன்றாவது மாடங்கள் சந்தன மரத்தால் உயர்ந்த வேலைப்பாடுடன் அமைந்தவை. இதனுள் எங்கோ ஓரிடத்தில் ரகசிய அறை இருக்கிறதாம். அதன் வழியாக ஒரு சுரங்கப்பாதை வெளியிடத்துக்குச் செல்கிறதாம். விபத்துக் காலங்களில் அரச குடும்பத்தினர் பொக்கிஷம், மற்ற அரிய பொருள்களை வெளியேற்றுவதற்கு இந்த மறைவு மிகவும் பயன்பட்டதாம். இவ்வறை இருக்குமிடம் பட்டமாதேவிக்குக் கூடத் தெரியாது. இதன் ரகசியத்தைத் தனக்குப் பின் ஆட்சிக்கு வருபவனிடம் அரசன் இறக்கும் தறுவாயில்தான் தெரிவிப்பானாம். குப்தர்கள் வசத்துக்கு இந்த மாளிகை வந்திருப்பினும் அவர்களுக்கு இதன் மர்மம் எதுவுமே தெரியாது. மந்திராலோசனை அவையில் அன்று ஒரே கூட்டம். அமைச்சர் அவையோர், சேனநாயகர்கள், நகரச் சிரேஷ்டிகள், ஸாந்தி விக்ரஹர்கள் போன்று பலர் இருந்தனர். எவர் முகத்திலும் ஈயாடவில்லை. மகத நாட்டைக் கவர்ந்து வரும் ஓர் இருளின் நிழல் எவர் முகத்திலும் தென்பட்டது. வச்சிரசேனன் அந்த இடத்தில் இருந்தான். நாளோலக்கத்தில் ரத்தின சிங்காதனத்தில் பட்டமாதேவியுடன் வீற்றிருக்கும் சந்திரகுப்தன் வச்சிரனைப் பார்த்ததும் திருமுக மண்டலத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டான். இதை யறிந்த வச்சிரசேனன் மறுபுறம் நகர்ந்து போய் அங்கே நிற்கும் ஒரு ஸசிவனை (செயலாளன்) மெல்ல நெருங்கி விசாரித்தான் — 'தனஞ்சயா, எதற்காக இந்தக் கூட்டம்?''

''புது விஷயம் ஒன்றுமில்லை. மகாராஜா நேற்று ஓர் உத்தரவு விடுத்தார். அந்தச் சுரங்க அறையை யாராவது கண்டுபிடித்தால் இந்தப் பாழும் ராஜ்யத்தை விட்டு ஓடலாமென்று இருக்கிறார்'' என்றான்.

''அவருக்குத் திடுமென்று ஏன் இந்த வெறுப்பு வந்து விட்டது இதற்குள்?'' என்றான் வச்சிரசேனன், ஏளனம் தொனிக்க.

''இந்த மகதம் அந்தக் கொள்ளைக்காரச் சந்திரவர்மனிடம் சிக்கிச் சூறை போவதற்கு முன் தன் இனியாளுடன் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு விட்டடிக்கப் பார்க்கிறான். அவன் இப்போது அந்த வீர சந்திரகுப்தனன்று. பல் விழுந்து போன சிங்கம்.''

வச்சிர சேனன் அப்பொழுது, ''நேற்று மாலை நான் சண்டபாலனின் சுராபானக் கடைக்குச் சென்றிருந்தேன். எல்லோரும் பேசிக் கொள்கிறார்களே, இன்னும் ஒரு மாதத்துக்கு மேல் பாடலி நகரம் தாக்குப் பிடிக்காதென்று. கூலவாணிகர்கள் எல்லாம் கடைகளை மூடிவிட்டார்களாமே! பண்டங்களின் விலை மடமடவென்று ஏறிவிட்டதே... மக்கள் புரட்சி செய்யும் நிலைக்கு வந்துவிடுவார்களா?'' என்று கேட்டான்.

அப்போது அங்கு வந்த ஸாந்தி விக்ரஹன் திவாகர வர்மன் குறுக்கிட்டு, ''இதெல்லாம் வீண் கலவரம். யாரோ அனுவசியமான பீதியைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். பாடலி நகரம் அப்படிச் சட்டென விழுந்துவிடாது. சந்திரவர்மனாலும் இதைக் கைப்பற்ற முடி

யாது. இன்னும் பத்தே நாட்களில் இந்தக் கொள்ளைக்காரர்கள் வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிடுகிறார்களா இல்லையா பார். இந்த உணவுப் பற்றாக்குறை இன்னும் இரு தினங்களில் தீர்ந்துவிடும். அப்புறம் வாங்குவதற்கு ஆட்களே இருக்க மாட்டார்கள்'' என்றான்.

''அவ்வளவு எளிதாக இது முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. மக்களின் போக்கைப் பார்த்தால் அவர்கள் கட்டாயம் 'மாத்ஸ்ய நியாயத்தில்' (புரட்சியில்) இறங்கிவிடுவார்கள்.''

''என்ன வச்சிரசேனா, நீயும் இப்படிப் பேசுகிறாயே? நமக்குச் சீக்கிரத்திலேயே உதவி வரப் போகிறது. ஆகாய வழியாகச் செய்தி வந்துவிட்டது'' என்றான் திவாகர வர்மன்.

''ஆகாய வழியாகச் செய்தியா?'' என்ற வச்சிர சேனன், ''என்னவோ பார்க்கலாம்'' என்று அவ்விடத்தை விட்டு அகன்றான்.

* * *

இரவு வேளை. நடு நிசி. மதிலின் கோடிப் பகுதியில் மீண்டும் தோன்றினாள் வஸுமதி. முன்னெச்சரிக்கையாகவே வச்சிரசேனன் அந்தக் குறியிடத்தில் நின்று கொண்டிருந்தான். எழிலோவியமென அந்த மோகினி ஓதிம விளக்குடன் எதிர்ப்பட்டாள். வச்சிரசேனன் கைகளை அகற்றி அவளை நோக்கி நகர்ந்தான். அவள் அவனுடைய அணைப்பில் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டாள்.


ஒரே இரவில் ஒரு பெண் மனம் எவ்வாறு மாறிவிட்டது! முன்னால்தான் அவள் பெண்மைக்குரிய பண்புகளைப் பற்றி, கற்பைப் பற்றி, கணவன் மீது காதலைப் பற்றிப் பேசினாள். இன்றோ வேறொருவனிடம் தானே வலிய வந்து விழுகிறாள். இதைப் போல் பல அனுபவங்களைப் பார்த்தவன் வச்சிரசேனன். அவன் சிறிதும் வியப்புற்றதாகத் தெரியவில்லை. நாரியர் எப்போதும் ஒரு கிளை பலவீனமாகி விட்டால் மற்றொரு உறுதியான கிளையைப் பற்றுவார்கள். மலையிலிருந்து விழும் அருவி எத்திசை செல்லும் என்று யாருக்குத் தெரியும்? வஸுமதியின் மோவாயைத் தொட்டு, அவள் மதிவதனத்தை நிமிர்த்தி, ''இப்போது உன் சந்திரகுப்தன் என்னவானான்?'' என்று அவள் கன்னத்தில் மெல்லச் சிட்டிகை போட்டான். அல்லித் தண்டென அவளுடைய கைகள் அவனுடைய கழுத்தில் மாலையாக விளங்க, சற்று வெட்கி மிழற்றினாள் — ''முன்பே இதை நான் அறியாமல் போய்விட்டேன். உன்னைவிட எனக்கு இனியவன் வேறு யாருமில்லை'' என்று தன் முகத்தை அவன் மார்பிடைப் புதைத்தாள்.

அந்த இன்பத் தீண்டல், அவளுடைய வனப்பார் அங்கங்கள் அவன் மீது இழைவது களிப்பின் அமுதூறலை வச்சிரசேனனின் உடலிலும், உள்ளத்திலும் பொழிந்தன. அந்த மயக்கில் அவன் உலகையே மறந்துபோனான். படைப்பின் தொடக்கத்தில் மனிதன் இவ்வாறு மடவரலுக்கு மசிந்த கதை புதியதன்றே! ''வஸு, அன்பே! நான் இப்படி உன்னைக் கள்ளத்தனமாக இருளில் சந்தித்து இன்பம் பெற விரும்பவில்லை. யாவரும் அறிய உன்னை என் இதய அரசியாக ஏற்றால்தான் நான் பூரணமான திருப்தி அடைவேன்'' என்றான்.

''அப்படி அடைவதற்கு என்ன வழி? நானோ அரசனை வந்தடைந்தவள். அவன் இன்பத்துக்குப் பாத்திரமான மெய்யாட்டி'' என்றாள் வஸுமதி.

வச்சிரசேனனுக்கு அந்தக் காதற் களிப்பில் என்ன செய்வதென்றே புரியவில்லை. தன் லட்சியத்துக்கு ஏற்ப வஸுமதியுடன் எப்படி வாழ்வது என்ற வழியே அவனுக்குத் தெரியவில்லை. அவனோ குமார தேவியின் ஏவலை நடத்தும் வெறும் சேனா நாயகன். விழித்தான். உடனேயே அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது. வஸுமதியின் கூந்தலை நீவித் தந்து, ''நேற்று நீ பகைவருக்கு என்னவோ சங்கேதம் செய்தாயே, அது என்ன?'' என்று வினவினான்.

அவள் அவனுடைய திண்ணிய தோள்மீது தன் கொழுவிய கன்னம் அழுந்த மென் முறுவலுடன், ''இந்தக் கோட்டையைப் பற்றிய ரகசியங்களைத்தான் இந்த விளக்கின் மூலம் தெரியப்படுத்தினேன்'' என்றாள்.



''சிக்கனமாக வாழ்வது எப்படி என்பதைப் பற்றிச் சங்கத்தில் பேசினேன், அவர்கள் போட்ட மாலைதான் இது.''

''இது போன்ற விளக்குச் சமிக்ஞைகளை எப்படிக் கற்றுக்கொண்டாய்?''

''என் தந்தைக்கும் யவனர்களுக்கும் தொடர்புண்டு. அவர்கள் தம் மரக்கலங்களில் இந்த ஓதிம விளக்குகளை ஏற்றிச் சங்கேதம் செய்வார்கள். இந்தக் குறியீடுகளை அவரே எனக்குக் கற்றுத் தந்தார். நகரத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது; மக்கள் புரட்சி செய்யலாம் என்பதைத்தான் அறிவித்தேன்.''

''வஸு! நீ கொடுத்த செய்தி தவறு. நாளைக்கே பாடலிநகர் தானியக் களஞ்சியமாகிவிடும். மக்கள் எழுச்சி இருக்காது.''

இதைக் கேட்டதும் அவள் அதிர்ந்து, ''என்ன? எங்கிருந்து வந்துவிடும்?'' என்றாள்.

''அது எனக்குத் தெரியாது. எங்கோ சுரங்க வழியாக நமக்குத் தேவையான பண்டங்கள் வரவிருக்கின்றன.''

''சுரங்க வழியா? எங்கே இருக்கிறது?''

''எனக்குத் தெரியாது. உன் தந்தையும் கூடாரத்தைக் கிளப்ப வேண்டியதுதான். வைசாலியிலிருந்து பெரும் படை புறண்டு வருகிறதாம், குப்தர்களுக்கு உதவியாக.''

''நிச்சயமாகவா? என்னை ஏமாற்றுகிறாய்!''

புதிய 12 லிட்டர்



நீங்கள் எதிர்பார்த்திருந்த பிரஷர் குக்கர்

இடவசதி மிகவுள்ள 'பிரஸ்டிஜ்' எலிகென்ட் பிரஷர் குக்கர் பெரிய குடும்பங்களுக்கு அல்லது காண்டீன்களுக்கு மிகவும் உகந்தது. 'பிரஸ்டிஜ்' எலிகென்ட் பிரஷர் குக்கர் 5 தனி அடுக்குகள் உள்ளது — ஆகவே நீங்கள் 5 வித பதார்த்தங்களை ஒரே நேரத்தில் சமைக்கலாம்.

'பிரஸ்டிஜ்' எலிகென்ட் பிரஷர் குக்கரை ஆஸ்பத்திரிகள், மருத்துவ விடுதிகள், ஆய்வுக் கூடங்களில் கருவிகளை சுத்தப்படுத்தும் பாத்திரமாக பயன்படுத்தலாம். அதன் கனமான வால்வு 15 பவுண்டு P.S.I. விகிதத்தில் தானாகவே இயங்குகிறது. ஸ்பிரிங்குகள், மறைகள் உள்ள சிக்கலான பாத்திரம் போலின்றி இது திறக்கவும் மூடவும் எளிதானது.


இதுவே பிரஸ்டிஜ் வகைகளில் மிகப் பெரியது. இந்த பிரஸ்டிஜ் குக்கருக்குள்ள தனிச் சிறப்புகள் — உறுதியானது; நீண்ட நேரம் உணவு சூடாக இருப்பதற்கேற்ற லேசான அலுமினிய உடற்பகுதி, கச்சிதமான அமைப்பு, பாதுகாப்புள்ள மூளக், சூட்டுக்கு ஈடு கொடுக்கும் கைப்பிடி அத்தனையும் பெற்றுள்ளது. ஈாடெங்கும் ஸ்பேர் உறுப்புகளும், பராமரிப்பு வசதிகளும் கிடைக்கின்றன. பிரஸ்டிஜ் மட்டுமே ஒவ்வொரு குடும்பத்திற்கும் தகுந்த அளவில் கிடைக்கிறது.

புதிய ப்ரீத் ஹோட்டலியர் ஸ்டீம்-இட்

உங்கள் 'பிரஸ்டிஜ்' எலிகென்ட் பிரஷர் குக்கரில் 'ப்ரீத்' ஸ்டீம்-இட் மூலம் 7 நிமிடங்களில் நீங்கள் இனி 32 இட்லிகள் தயாரிக்கலாம்.

Prestige

பிரஸ்டிஜ் எலிகென்ட்






இலவசம்!

அறிமுகச் சலுகை

'பிரஸ்டிஜ்' எலிகென்ட் உள்ளே ரூ. 16 பெறுமானமுள்ள ஒரு இலவச ப்ரீத் ஸ்டீம்-இட் (சிரியது) உள்ளது.

முந்துங்கள்

முதல் விற்பனையில் மட்டுமே இச்சலுகை



பிரஸ்டிஜ்-ப்ரீத் மட்டுமே வசதியான வாழ்விற்கு ஏற்றவை

டிடி. (பிரைவேட்) லிமிடெட்
பெங்களூர்-16

TTP-6656

''நான் ஏன் பொய் சொல்லுவேன்? அதுவும் எனக்கு இன்பம் ஊட்டும் உன்னிடம்? அரசியின் அந்தரங்க ஸேவகன் தனஞ்சயனே என்னிடம் கூறினான்.''

வஸுமதி கலங்கி விட்டாள். தன் நெற்றியில் அறைந்து கொண்டாள். ''ஐயோ, நேற்றே இது எனக்குத் தெரிந்திருக்கக் கூடாதா?''

அவளுடைய மலரினும் மெல்லிய கன்னத்தை வருடிய வச்சிரன், ''அன்பே, வஸு! வீணாகச் சலனப்படுகிறாய். நீ என் உள்ளத்தைக் கவர்ந்தவள். இந்த வச்சிரசேனன் உன்பொருட்டு நெருப்பிலும் குதிக்கச் சித்தமாக இருக்கிறான். நீரிலும் மூழ்கத் துணிந்தவன். உனக்காக எதையும், எந்த அழிவு வேலையையும் செய்ய முற்படுவேன்'' என்றான்.

''நீ சந்திரகுப்தனை அழித்துவிடுவாயா?''

''முடியும். நீயே செய்யும்போது என்னால் மட்டும் ஆகாதா? சந்திரகுப்தன் எனக்கு யார் ?''

''கேள்வன்.''

''கேள்வன்! நான் அவனுக்குப் பின்னால் திரியும் விடன். அவன் விருப்பத்துக்குக் காத்திருக்கும் வீணன். நான் உன்னைக் கேட்டபொழுது அவன் தனக்கென உன்னைக் கவர்ந்து சென்றது கேண்மையா? நமக்கு இப்பொழுது தக்க தருணம் வாய்த்திருக்கிறது. இருவருமாகச் சேர்ந்து அவனை ஒழித்துக் கட்டுவோம். அவனுடைய தலைநகரை உன் தந்தைக்குக் காட்டிக் கொடுத்து விடுவோம்.''

''இது துரோகச் செயலன்றோ?''

''ஆமாம். அவன் மட்டும் எனக்குத் துரோகம் செய்யவில்லையா? நானும் செய்தே தீருவேன். அதற்கு வெகுமதியாக உன் தந்தை எனக்கு என்ன தருவார்?''

''ஏன், நான் இருக்கிறேனே. நீ திருப்தியடையவில்லையா?''

''இல்லை, வஸு! நேற்றுச் சொன்னேன், அரசோ, அரசுரிமையோ எதுவும் வேண்டாமென. ஆனால் உன்னைப் போன்ற நிதியை அடைந்த பிறகு அரச போகமின்றி எப்படி உன்னுடன் வாழ்வது? அதற்கு எனக்கு ஒரு நாடு அவசியமல்லவா? உனக்குத்தான் திருப்தி ஏற்படுமா?''

''இந்தத் துரோகச் செயலுக்கு நீ விரும்பும் பரிசென்ன?''

''இந்த முடிவுக்கு நான் வந்துவிட்டேன். விளக்கைக் கொண்டு உன் தந்தைக்குக் குறிசெய்துவிடு. துரோக வழியின்றிக் கோட்டையைப் பிடிக்க முடியாது; கோட்டைக் காவலன் ஒருவன் அதன் மேற்கு வாசலைத் திறந்துவிடச் சித்தமாய் இருக்கிறான்; அந்தச் செயலுக்கு அவன் விரும்பும் பரிசு இந்த மகதத்தின் அரியணை என்று தெரிவித்துவிடு.''

வஸுமதி சிலையென அசைவற்று நின்றாள். உடனே சிரித்தாள். காற்றால் நுடங்கும் அந்த ஒதிம விளக்கொளியில் அவளுடைய அந்தச் சிரிப்பு ஏரார்ந்து விளங்கியது. ''நல்ல யோசனை. எனக்கும் இப்படித்தான் பட்டது. தந்தையின் மனத்தைக் குளிர்வித்து இந்த குசுத சிங்காதனத்தை நான் கேட்டு வாங்கி விடுவேன். அந்தக் குமார தேவியின் கர்வத்தையும் குலைத்து விடுவேன். நம் இருவரது மகிழ்ச்சியால் தந்தை இந்நகரைக் கைப்பற்றுவார். அப்புறம்... நீங்கள் என்னுடன்...'' என்று வஸுமதி குதூகலமாகச் சிரித்தாள்.

''சந்திரகுப்தனையும் கொன்றுவிட வேண்டும்....அவன் மகனையும்தான். அவர்களை உயிரோடு விட்டால் பின்னர் நமக்கே தலைவலி. அவன் தலைமறைவாகப் போய் வீரம் கிளர்ந்தெழ வருவான்... நம்மிருவரையும் தொலைக்க வழி தேடுவான். உன் தந்தையின் வசம் இந்தக் கோட்டை வந்துவிட்டால் அப்புறம் அவனோ, அவனைச் சேர்ந்தவர்களோ ஓடி ஒளிய முடியாது. சுரங்கப் பாதையுள்ள அந்த ரகசிய அறை எவருக்குமே தெரியாது'' என்றான் வச்சிரன்.

கீழ்வானில் வைகறையின் செம்மை படர்ந்தது. குளிர்ந்த காற்று இவர்கள் உச்சிமீது அலைப்பிச் சென்றது. வானில் பிறைமதி இன்னும் மழுங்கவில்லை.

வச்சிரசேனன், ''அன்பே! தாமதம் எதற்கு? இருள் விலகும் நேரமாகிறது. விரைவாக உன் சங்கேதத்தை அனுப்பு'' என்றான்.

வஸுமதி ஒதிம விளக்குடன் மதில் ஓரமாக நின்றாள். அவள் அதை இரண்டு மூன்று தடவை ஊசலாட்டி இரவுப் புள்ளைப் போல் ஊளையிட்டாள். இதற்கு மறுமொழியாகப் பகைவர் பாசறையிலிருந்து அதே போல் ஓர் ஊளையொலி வந்தது.

பல பின்னலாக விளக்கை அசைத்துக் கொண்டே இருந்தாள் அவள். தவமகளைப் போல் அவள் நோக்கு ஒன்றையே குறித்து நின்றது. அடிக்கடி எதிர்ப்புறத்திலிருந்தும் பல சமிக்ஞை ஒலிகள் வந்தன. இதற்குள் பொழுதும் கரகரவென்று விடிந்தது. வானம்பாடியின் குரலலைகள் படிப்படியாக உயர்ந்து வரவே அந்தக் குறியொலிகள் மழுங்கிப் போயின.

வஸுமதி விளக்கை அணைத்து விட்டு, ''நாளைக்கு இதன் விளைவு தெரியும்'' என்றாள்.

* * *

பொழுது புலர்ந்ததோ இல்லையோ நகரத்து அங்காடிகளில் ஒரே இரைச்சல். முன்னாள் பெருக்கிவிட்டு வெற்றெனக் கிடந்த மேடைகளில் செஞ்சாலி, கோதுமை, துவரை, உளுந்து, காய்கனிகள் யாவும் மலையெனக் குவிந்து கிடந்தன. நெய்யும் எண்ணெயும் குடம் குடமாக இருந்தன. உணவுப் பொருள்கள் வந்துவிட்டதால் மக்களின் எதிர்ப்பு உணர்ச்சிகள் அவிந்தே போயின.. இத்தனை பொருள்கள் திடுமென எப்படி வந்தன என்பது பெரும் புதிராகவே இருந்தது. நகரத்தில் உள்ள எச்சமயத்தினரும் உரத்த குரலில் புத்த பகவானின் கருணையைப் புகழ்ந்து போற்றினர். அவருடைய சங்கத்தினரான கோதிகரே இந்தப் பொறுப்பை நிறைவேற்றியவர்.

சந்திரகுப்த மகாராஜா மல்லர் அரங்கில் மழுமழுப்பான தண்ணிய மணற் பரப்பிய தரையில் பாயல் இருந்தார். பணியாட்கள் இருவர் நறுமணத் தைலங்களை அவர் திருமேனியில் தடவிப் பிடித்து விட்டுக் கொண்டிருந்தனர். சற்று முன்தான் அவர்

உடற்பயிற்சி செய்து விட்டுக் களைப்பாறச் சாய்ந்தார்.

வெளியே வரும் மக்களின் கலியரவம் அவர் செவியில் விழுந்தது. இன்னும் அவருக்கு இரவில் அருந்திய மதுவின் மயக்கம் தெளிய வில்லை. கண்ணிமைகள் சற்றே பிரிய, ''என்ன கூச்சலங்கே? சந்திரவர்மன் உள்ளே வந்துவிட்டானா?'' என்று கூறி சற்றும் அக் கறை கொள்ளாமல் பக்கத்திலிருந்த மகர யாழில் விரல்களை ஓட்டினான். இளமை ததும்பும் ஒரு விறலி பழச்சாறு உள்ள கிண் ணத்தை ஏந்திக் கொண்டு நின்றாள்.

தண்ணிய நீரில் வெகு நேரம் துளாவி விட்டு, உடல் அயர்ச்சி நீங்கியதும், உள்ளங் குளிரக் கனி ரசத்தைப் பருகினான். நகரெங் கும் மக்களுக்குத் தட்டுப்படாமல் உணவுப் பொருள் வந்துவிட்ட செய்தியை அவனுக்கு ஸேவகன் வந்து அறிவித்தான்.

'' ஓகோ, என்னுடைய பாலன்னமும் பழச் சாறும் எனக்கு என்றும் இருக்கும். அந்தச் செய்தியை அரசியாரிடம் போய்ச் சொல்லு. மக்கள் நலனில் ஊக்கம் கொண்ட வள் அவள்தானே!'' — அரசனின் மொழியில் ஒரு குத்தல் இராது போகவில்லை. தான் கடைசியில் ஒரு பிச்சுவி மடந்தையின் விரலாட்டத்துக்கு வணங்கிப் போவதைக் குறித்து அவனுக்குக் குமாரதேவி மீது வெறுப்பே.

இந்தப் பக்கம் வஸுமதி தன்னுடைய அறையில் கன்னத்தில் கையூன்றிச் சிந்தனை யில் ஆழ்ந்திருந்தாள். சட்டென ஏதோ தோன்றி, அவள் தன் தோழிப் பெண்ணை தமயந்தியை விளித்தாள். கூந்தல் அவிழ்ந்து புரள அந்தத் தோழி, ''என்ன அம்மா ?'' என்று வந்தாள். கண்கள் தரையையே நோக்கச் சில கணம் இருந்ததும் வஸுமதி, 'தமயந்தி, நேராகக் கந்தகுடி விஹாரத்துக் குச் சென்று, நான் பார்க்க விரும்புவதாகத் தேரர் சோதிகரை உடனேயே அழைத்துவா.

அவர் கேட்டால், உபாசிகை தீபா அவரை வணங்க விரும்புகிறாள் என்று சொல். உள்ளே வரும்பொழுது கஞ்சுகி தடுத்தால் இந்த நாம மோதிரத்தைக் காட்டு' என்று சொல்லித் தன் விரலிலிருந்து அதனைக் கழற்றித் தந்தாள்.

தமயந்தியின் முகம் சட்டென வெளுத்து விட்டது. அச்சம் நிரம்பிய குரலில் அவள், ''அம்மா, குமாரதேவிக்கு இது தெரிந்தால்... அவள் சாக்கிய பிக்ஷுக்களை வெறுப்பவளா யிற்றே'' என்று தயங்கினாள். ''பேசாதே, நான் சொன்னபடி செய்....'' என்று வஸுமதி உறுத்திச் சொன்னாள்.

தமயந்தி சென்றதுமே வஸுமதி, ''நான் அந்த பிக்ஷுவை அழைத்தால் பட்டமாதேவி என் கழுத்தை வாங்கிவிடுவாளா என்ன ?'' என்று எண்ணினாள்.

முதிய பிக்ஷு சோதிகருடன் தமயந்தி திரும்பினாள். அதற்குள் வஸுமதியும் நீராடி விட்டுத் தூவெண்மடி அணிந்திருந்தாள். அவள் நெற்றியில் சிவந்த திலகப் பொட்டு ஒளிர்ந்தது. உடலில் ஆடையை இழுத்துப் போர்த்துத் தன் வனப்பை மறைத்துக் கொண்டாள். எண்பது வயதாகியும், பல நோன்புகளால் மேனி உலர்ந்து சங்க வண்ணப் பொலிவுடன் சோதிகர் நிமிர்ந்த நடையுடன் மெல்ல அவள் முன் வந்து நின்றார். பிரும்மசரியத்தின் தேசு அவ ருடைய கண்களில்.

அவரைக் கண்டவுடன் பக்தியுடன் எழுந்து நின்றாள் உபாசிகை தீபா — அதா வது வஸுமதி. தோழிப் பெண்ணை அனுப்பி விட்டு அவள் பெரியவரின் பாதங்களில் வணங்கிக் கைகூப்பி, ''பதந்தரே, என்னைப் பற்றிய விஷயத்தை மறைத்துவிட்டு நான் தங்கள் சங்காராமத்தில் சிராவிகாவாகத் தொண்டாற்ற வந்தேன். அதற்காக என்னைப் பொறுத்தருளவும்'' என்று பணிவுடன் கூறினாள்.

இரு ருசிகரக் கேள்விகள் !

☐ ''அமெரிக்கர்கள் உயரமானவர்கள் - ஜப்பானியர்கள் குள்ளமானவர்கள். பாஸ்கெட்பால் ஆட்டத்துக்கு உயரப் பிரச்னை அவர்களுக்கு இடைஞ்சலா யுள்ளதல்லவா? உயரத் துக்கேற்ப இந்த விளையாட்டுப் போட்டிகளை வகுத்தால் என்ன?

☐ கிரிக்கெட்டில் எல். பி. டபிள்யூ ரூல் ஒன்றே திரட லானது. ஆனால் மற்றவை சிக்கலானவையல்ல. பாஸ்கெட் பால் ஆட்டத்தில் பல சிக்கலான சட்டங்கள் இருப்பதால் ரஸிகர்கள் ஆட்டத்தை ரஸிப்பதற்குக் கஷ்டமா யிருக்கிறதே. பாஸ்கெட்பாலில் உள்ள 258 சட்டங்களைக் கவனித்து அமுல் படுத்துவது சிரமமல்லவா?

[அமெரிக்காவிலுள்ள ஸ்பிரிங்ஃபீல்ட் கல்லூரியில் பாஸ்கெட்பால் ஆட்டம் போதிக்கும் டாக்டர் எட்வர்டு ஸ்டைய்ட்ஸ். சென்னை வந் திருந்தபோது அவரிடம் கேட்கப்பட்ட இரு ருசிகரமான கேள்விகள்]





அப்போது அந்தத் தேரர் (ஸ்தவிரர்) ''அம்மா, உயர்வான தொண்டுக்குக் குலம், கோத்திரம் தேவையில்லை. சித்தார்த்த ருடைய தர்மம் எவருடைய கைங்கரியத்தை யும் ஏற்றுக்கொள்ளக் கூடியது. புத்த சங்கத் துக்கு மனத் தூய்மையும், மனிதத் தன்மை யும்தான் முக்கியம்'' என்றார்.

''இன்று இரவு சங்காராமத்துக்கு என்னால் வர ஒழியாது. பட்டமாதேவி பௌத்தர்களை வெறுப்பவள் என்பது தெரிந்தும் பேதை நான் தங்களை இங்கே வரவழைத்தேன்.... ஒன்று கேட்க விரும்புகின்றேன்.''

'' என்ன தாயே, சொல்லு ?''

''நகரெங்கும் உணவும், வேண்டிய பொருள்களும் தங்கள் விஹாரத்திலிருந்து வருகின்றனவாமே ?''

சோதிகர் நிதானித்து, ''எல்லாம் அந்த புத்த பகவானின் கருணையால்தான் அம்மா'' என்றார்.

வஸுமதி தன் ஆவலை அடக்கிக்கொண்டே, ''தெரியும்..... பல்வஜ்ரா, ஆனால் எங் கிருந்து இத்தனையும் வருகின்றன? விஹாரத் தின் பண்டாரத்திலேயே இவை இருந் தனவா?'' என்றாள்.

''அம்மா, இது ஒரு கூடமான விஷயம். நீ இவ்வளவு நுணுகி இதை ஆராயக் கூடாது; நான் சொல்லவும் மாட்டேன்.''

'' என் துடுக்குத்தனத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும், பதந்தா. எனக்கு என் னவோ இத்தனை பொருள்களும் ஒரு சுரங்க வழியாக வருகின்றன என்ற அனுமானம்.... இல்லையா ?''

ஸ்தவிரர் அமைதியாகவே, '' உன் ஊகம் உண்மைதான். நீ இவ்வளவு அக்கறைப்படுவ தால் உன் ஆவலைத் தணிக்க இது பற்றிக் கூறு கிறேன். விஹாரத்தின் உட்புறம் ஓர் ஒடுக்கம் இருக்கிறது. அதனுள் புத்த பாத பீடிகை ஒன்று நெடுநாளாகக் காணப்படுகிறது. ஒரு சமயம், அந்த அறையில் புதுச் சுண்ணம் பூசுவ தற்குத் திறந்தோம். பீடிகையின் சுவர்ப்புற மாக எங்கும் குளவிகள் கூண்டுகள் கட்டி யிருந்தன. இவற்றைப் பெயர்க்கும் பொழுது அவை கூட்டமாய்க் கிளம்பின. தீவர்த்தி களைக் கொண்டு அவற்றை அப்புறப்படுத்தி னேம். சுவரை நன்றாகத் தேய்த்துத் துடைத்த போது அறவாழியின் (தர்ம சக்கரம்) கல் உருவம் ஒன்று தென்பட்டது. அதன் மையத் தில் ஒரு சிறு துளை. அதில் மண் அடைத்துக் கொண்டிருந்தது. அதைச் சுரண்டி எடுக்க, கூர் உளியை நுழைத்த போது அந்த அறவாழி இரண்டாகப் பிரிந்தது. அதனுள் கீழே இறங் கும் படிகள் தென்பட்டன. அது ஒரு சுரங்கப் பாதை என்று தெரிந்தது. யாருமிராத சமயம் பார்த்து ஒரு நாள் இதனுள் தீவட்டி யுடன் நான் இறங்கினேன். குனிந்து செல்ல வேண்டியிருந்தது; அவ்வளவு குறுகலான பாதை. சிறிது தொலைவுதான் போக முடிந் தது. மூச்சுத் திணறியது எனக்கு. பல்லியும், பாச்சையும் என் மேல் அடிக்கடி விழுந்தன. நல்ல காற்று இல்லாததனால் தீவட்டியும் அணைந்துவிட்டது. திரும்பி விட்டேன். மறு நாள், நான் மீண்டும் அதனுள் இறங்கி மேலே செல்லத் துணிந்தேன்'' என்று கூறும் போது, தீபா அவரையே வியப்புடன் நோக்கி,

''காற்றே புகாத இடத்தில், எப்படித் தங்களால் போக முடிந்தது ?'' என்று வினவினாள்.

'' அம்மா, என் போன்றவர்கள் மூச்சை அடக்கும் 'இத்தி'யை அறிந்தவர்கள். எனக் குக் களைப்பே தெரியவில்லை. நடுநடுவே இந்தச் சுரங்கப் பாதைக்கு மேல் நல்ல காற்று உள்ளே புக ரந்திரங்கள் இருந்தன. ஓர் இரவெல்லாம் நடந்து நான் கடையில் அதன் மறு முனையை அடைந்தேன்.''

தீபா தன் மூச்சை அழுத்தி, ''அப்புறம்?'' என்றாள்.

முதிய பிக்ஷு தொடர்ந்தார் — ''அந்தச் சுரங்கம் முடிந்த இடம் தூயபாத விஹாரம். ஒரு காலத்தில் இங்கு பல பிக்ஷுக்களும், பிக்ஷுணிகளும் ததாகதரின் தர்மத்தைப் பின் பற்றி யொழுகினர். அது இப்போது இடிந்து, பாழாகிக் கிடக்கிறது. காடு முளைத்து, கொடிய ஜந்துக்கள் ஒதுங்குமிடமாகிவிட் டது. ஆனால் அங்குள்ள கேணி இன்றும் வற்றாத ஊற்றுப் பெருக்குடன் விளங்கு கிறது. புத்த பகவான் இங்கு ஒரு சமயம் தங்கியிருந்தபோது இதை அகழச் சொன்னா ராம். அம்மா! இந்தச் சுரங்க வழியாகத் தான் இப்போது நம் நகருக்கு உணவுப் பொருள்கள் வருகின்றன. பகவனின் கருணை யால் மக்கள் துன்பம் நீங்கி வாழட்டும் !''

தீபா வெகுநேரம் தேக பிறங்கும் சோதிகரின் முகத்தையே நோக்கித் தன்னுள் நினைத்துக் கொண்டாள் — ''அரசர்களாலும் செயற்கரிய ஒரு புண்ணியத் தொண்டினை இவ்வறவாழி அந்தணர் செய்துவிட்டாரே; என்னே அவர் மகிமை !''

அவள் எழுந்து மீண்டும் அவர் அடி வணங்கி, 'புத்தம் சரணம் கச்சாமி' என்ற மும்மணியை உச்சரித்தாள்.

அவரும் எழுந்து, ' ஏ கமங்கலே, உன் எண்ணம் நிறைவேறட்டும். ததாகதர் அருள் புரிவார்' என்று ஆசி கூறி தம் விஹா ரத்தை நோக்கி மெல்ல நடந்தார்.

* * *

பகைவர் பாசறையிலிருந்து வரும் வங்கி யத்தின் ஒலி காற்றுவாக்கில் கேட்டது. வஸுமதி அதே கொத்தளத்தின் அருகில் வச்சிரசேனனுடன் நின்று கொண்டிருந் தாள். மையிருள் எங்கும். களைப்பால் அவள் சற்றுப் படுத்தாள். வச்சிரசேனன் அவள் பக்கலில் அமர்ந்தான். பகைவரின் வங்கியம் இப்போது வேறு சுருதியில் விம்மியது. வஸுமதி சட்டென எழுந்தாள். பெருமூச் செறிந்து, '' என்னுடைய சமிக்ஞைக்கு மறு மொழி வந்துவிட்டது. நீ விரும்பியது கிடைக் கும். என் தந்தை உன்னை மகதத்தின் க்ஷத்ரபஜக நியமிப்பார். அமாவாசையன்று, இரண்டாவது யாமத்தின் மணியோசை முழங்கி நின்றதும் இந்த அரச மாளிகைக்கு நான் தீ வைக்கப் போகிறேன். வானத்தைத் தடவி எரிக் கொழுந்து எழும்போது, நீ எஃகு வாயிலைத் திறந்துவிட வேண்டும். இந்தத் தீயே என் தந்தைக்குக் கோட்டையுள் நுழைவதற்குக் குறிப்பாக அமையும். நெருப் புக்குப் பயந்து நகர மக்கள் தத்தம் உடைமைகளைக் காத்துக் கொள்ள

ஓடுவார்கள். அந்தக் குழப்பத்தில் என் தந்தை எதிர்ப்பின்றி இப்பூம்பதியைக் கைப் பற்றுவார்'' என்றான்.

'' உனக்கு இவ்வளவு சமாசாரம் எப்படித் தெரியும் வஸுமதி?''

'' இதென்ன அதிசயம்? வங்கியத்தில் பலவிதமான ஒலிகளை எழுப்பி, குறி செய்ய முடியும். இது யவனர்கள் என் தந்தைக்குக் கற்றுக் கொடுத்த வித்தை. எனக்கும் இதில் நல்ல பயிற்சியுண்டு. பார்த்தாயா, என்னுடைய வேலையை! இது வெறும் வெண்கல விளக்குதான்; கீழே விழுந்தால் விரிந்து போகும் ஒரு பயனற்ற பொருள். ஆனால், இதன் ஒளியால் எத்தனை காரியங்களைச் சாதிக்கலாம்? இதை நான் வீசியெறிந்து விடுகிறேன்'' என்று அவள் அந்த ஒதிம விளக்கை எறிய முற்படும்போது வச்சிர சேனன் அவளைத் தடுத்து. ''இது உனக்கு வெண்கல விளக்காக இருக்கலாம்; ஆனால் நீயோ என்னுடைய மணிவிளக்கு. உன் ஒளியால் அல்லவோ இந்த மகத நாடு எனக்குக் கிடைக்கப் போகிறது!'' என்றான்.

வஸுமதி திடுமென உதடுகள் துடித்து, அழுகை வெடித்து வர, ''நான் மணிவிளக்கல்ல; மயானத்தின் சிதை விளக்கு'' என்றதும், கண்களைத் துடைத்துக் கொண்டு, ''அரசர் போதை தெளிந்து பஞ்சணையில் என்னைத் தேடுவார். நான் வரட்டுமா? அமாவாசை ஞாபகம் இருக்கட்டும். நம்முடைய எண்ணம் நிறைவேறும்'' என்றதும், அவனுடைய அணைப்பிலிருந்து விலகிச் சிவ்வென மறைந்தாள்.

இருண்ட உருவமொன்று அரண்மனையை நோக்கி விரைவாகச் செல்வதை அவனுடைய கண்கள் அந்த உயரமான இடத்திலிருந்து நோக்கின.

அமாவாசைக் கருக்கல். சந்திரகுப்தன் தன் பள்ளியறையில் அமளி மீது ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தான். மூச்சை அடைக்கும் புகையின் நெடியினால் அவனுடைய துயில் கலைந்தது. கண்களைத் திறக்காமலேயே, ''வஸுமதி'' என்று கைகளை நீட்டித் துழாவினான். அவளுடைய குரல் வரவில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்து பார்த்தான். அவளைக் காணவில்லை. வெளியே சுற்றுக்கட்டு எங்கும் தேடினான்; அங்குமில்லை அவள்.

வெளியே நகரில் மக்களின் பெருத்த ஆரவாரம் கேட்டது.

'' ஐயோ, தீ.... தீ.... பற்றியெரிகிறது! அணையுங்கள்.... தண்ணீர்.... தண்ணீர்..... காற்று பலமாக வீசுகிறதே.... அதோ.... அரசரின் மாளிகை பற்றிக் கொண்டுவிட்டது!..... ஓடுங்கள்.... ஓடுங்கள்....ஐயோ, என் குழந்தை.......''

— என்றெல்லாம் நாலாதிசையும் மக்களின் ஓலம் எழுந்தது.

தீ பரவிக் கொண்டே வந்தது. அரச மாளிகையின் அழகிய மாடங்களில் நெருப்புச் சுடர்கள் பற்றிக் கொண்டன. காற்றும் அதற்குத் துணையாகக் கடுமையாகவே வீசியது. கட்டடங்கள் எரிந்து, கருகிச் சரிந்து விழுந்தன. ரத்தச் சிவப்பாகக் கனலின் பல நாக்குகள் ஆகாயத்தில் எழும்பி விளையாடின. இருண்ட அகழி நீரும், அந்தச் சுழல் ஒளி பட்டு எரிவது போன்ற மருளை எழுப்பியது.

வஸுமதி எங்கே போனாள்? அவள் தலைவிரிகோலமாக முன்றானை தரையில் புரள, பட்டமாதேவியின் அந்தப்புரத்தினுள் நுழைந்து கொண்டிருந்தாள். அந்தப் பகுதியில் இன்னும் தீப் பிடிக்கவில்லை. அதைக் காக்கும் கிங்கரர்கள் எவருமே இல்லை; ஓடிவிட்டனர். குமாரதேவியின் சயன அறையில் நுழைந்தபோது அவள் தன் மகன் ஸமுத்ரகுப்தனை அணைத்துக் கொண்டு அயர்ந்து நித்திரை செய்வது தெரிந்தது. அவளை உலுக்கி வஸுமதி, ''மகாராணி, எழுந்திருங்கள். எழுந்திருங்கள்.... அரண்மனை தீப்பற்றி எரிகிறது!'' என்றாள்.

அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தாள் குமாரதேவி. ''நீ யார்?''

''நான்தான்... வஸுமதி... சட்டென எழுந்து வாங்கள்! அதோ, நெருப்புச் சுவாலை நம் பக்கம் திரும்புகிறது!'' என்று அவள், கண் வளரும் இளம் ஸமுத்ரகுப்தனைத் தோளில் எடுத்துப் போட்டுக் கொண்டாள்.

'' என் மகனைத் தொடாதே.....எங்கே ஒழிந்தார்கள், கஞ்சுகிகள்?''

''எவருமே இல்லை இங்கே தேவி!''

''எப்படி நெருப்புப் பற்றிக் கொண்டது?''

வஸுமதி எதற்கும் துணிந்து விட்டவளானதால் விஷயத்தை ஒளிக்கவில்லை. குமாரதேவியையே சுடுவது போல் பார்த்து, '' கொள்ளி வைத்தவள் நான்தான்!'' என்றாள்.

'' சண்டாளி.... எனக்குத் தெரியும்.... அந்த புத்தபிக்ஷு உன் மாளிகைக்கு வரும்போதே நான் கண்டு கொண்டேன். இருவரும் சேர்ந்தே இந்தச் சதியை நடத்தியிருக்கிறீர்கள்'' என்று கூவினாள்.

வஸுமதி நிலை கலங்கவில்லை. '' தேவி, கோபம் தலைக்கேறிக் குற்றமற்ற புத்தபிக்ஷு மீது ஏன் பழி சுமத்துகிறீர்? அவர்தான் நம்முடைய பாடலியைப் பஞ்சத்திலிருந்து காத்த பெருமான். இன்றேல் இந்த நகரம் என்றோ பேயுலவும் இடமாகிவிட்டிருக்கும். நான், உங்களையும், உங்கள் மகனையும் காக்கவே இங்கு வந்தேன்'' என்றாள்.

''நீ வந்து என்னைக் காக்க வேண்டுமா?''

''என்னைத் தவிர வேறு எவராலும் உங்களைக் காக்க முடியாது.''

''அதென்ன கூச்சல் கேட்கிறதே?''

''சந்திரவர்மன் கோட்டை வாயிலைத் தகர்த்துக் கொண்டு, நகருள் புகுந்துவிட்டான். பகைவரின் வீர கர்ஜனைதான் அது.''

குமார தேவியின் கண்களிலிருந்து அனற்பொறி வீசியது. ''பேயே, இது உன் காரியமடி..... மகத நாட்டை மண்ணாக்கிவிட்டாயே...... !''

வஸுமதி கலங்காமல், ''ஒப்புக் கொள்கிறேன்.... சற்றுத் தாமதமானால் உங்கள் மகனைக் காப்பாற்ற முடியாமல் போய்விடும். பாருங்கள், அதோ, உங்கள் மாளிகையைப் புகை சூழ்ந்து கொண்டுவிட்டது!'' என்றாள்.

கன்னறை வழியாக நெருப்பின் கரங்கள் வெளியே வந்தன. அத்துடன் கருநிறப் புகைச் சுருளும் சுருண்டு எழுந்தது.

''என் கணவரின் ஒரே குலக் கொழுந்தைக் காக்கவே நான் ஓடி வந்தேன். நீங்கள் எக்கேடு கெட்டால்தான் எனக்கென்ன ?...' நான் போகிறேன்'' என்று கூறி இரண்டெட்டாக அரண்மனை வெளி முற்றத்துக்கு ஓடி வந்து விட்டாள் வஸுமதி.

அவள் பின்னாலேயே குமாரதேவி அலங்கோலமாக விரைந்து, ''அரக்கி, என் மகனை விடடி '' என்று அவள் கையைப் பிடிக்கப் போனாள். கனலும் விழியால் பட்டமாதேவியை நோக்கி வஸுமதி, ''மமதை பிடித்தவளே, உன் கணவனின் மகன் என் மகனும்தானே. இந்த ராஜ்யத்துக்கு எரி மூட்டியவள் நானன்று ; உன் அகம்பாவம் ; உன் குருட்டுப் புத்தி. இவையே அதைப் பாழாக்கி விட்டன, லிச்சவி மகளே! நீயும் இந்த நெருப்பில் பொசுங்கிச் சா !'' என்றதும், அரசியின் கையை உதறித் தள்ளிவிட்டு ஸமுத்ரகுப்தனை மார்போடு அணைத்துக் கொண்டு வஸுமதி, தூமம் சூழ்ந்த அங்கணங்களைத் தாண்டி ஓடினாள். அழுது கொண்டே வெறி பிடித்தவள் போல் பட்டமகிஷியும் அவள் பின்னாலேயே சென்றாள்.

வஸுமதி நேரே தன் மாளிகையில் நுழைந்தாள். அதுவே அரண்மனையின் பழைய பகுதி. இன்னும் தீ அங்கு பரவவில்லை. பள்ளியறையில் சந்திரகுப்தன் தந்த அமளியில் ஒருபுறமாக அமர்ந்து, காதைக் கூர்மையாக வைத்து என்ன நடக்கிறதென்பதைக் கவனித்துக் கொண்டிருந்தான். தீயின் வெம்மையும், புகையின் கமறலும் மெல்ல மெல்ல அவன் பக்கம் வரத் தொடங்கின. இரைக்க இரைக்க ஓடி வந்த வஸுமதி, கணவன் மடியில் குழந்தையைப் போட்டுவிட்டுப் பின்புறமுள்ள அறைக்குத் துரிதமாகச் சென்றாள். அழுகை ஒருபுறம் வெடித்து வந்தது அவளுக்கு — 'இவர்களை எப்படிக் காப்பாற்றுவது ?' முன்னாள்தான் அவ்வறையில் அவள் அறவாழியின் சிற்பம் ஒன்று சுவரில் இருப்பதைத் தற்செயலாகக் கண்டாள். இதுபோன்ற சிற்பங்களின் பின்னால் சுரங்க வாயில் இருக்கும் என்று அந்த புத்தபிக்ஷு சொல்லியிருந்தார். ஆனால், இந்தச் சுவரில் உள்ள சுரங்க வழியை எப்படிக் கண்டுபிடிப்பது? அவளுக்குப் புரியவில்லை. அக்னிப் பிழம்பு அவ்விடத்தைப் பற்றுவதற்கு அடையாளமாகப் பொறிகள் பறந்தன. வஸுமதி இப்படியும் அப்படியும் ஓடி, சுவரில் உள்ள அவ்வறவாழிச் சிற்பத்தின் முன்னால் நின்றாள்.

இதையெல்லாம் குமாரதேவி கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். இவர்கள் இருந்த பகுதியிலும் 'குபு குபு' வெனக் கரும் புகைப் படலம் நுழைந்துவிட்டது. குமாரதேவி கையைப் பிசைந்துகொண்டாள். எதையும் தெளிவாகப் பார்க்க முடியாமல் வஸுமதியின் கண்களை நீர் வந்து மறைத்தது. சட்டென அவளுக்கு ஞாபகம் வந்தது. துடித்தெழுந்து, புகைசூழ்ந்த இடைவழியைக் கடந்து, தன் சயன அறையினுள் வைத்திருந்த சட்டியை எடுத்துக் கொண்டு மீண்டும் அந்த அறவாழி முன் நின்றாள். அரசனும் கால்கள் தடுமாற அவள் பின்னாலேயே வந்தான். அந்தத் தர்ம சக்கரத்தின் நடுவில் தென்படும் துளையுள் சட்டியைப் பாய்ச்சி வஸுமதி நெக்கினாள். அந்தச் சிற்பம் இரண்டாக விரிந்து சுரங்க வழி புலப்பட்டது. அரசனையும், குமாரதேவியையும் குழந்தையுடன் அச்சுரங்கப் பாதை வழியே தப்பி ஓடிவிடும்படி கேட்டுக் கொண்டாள்.

துப்பறியும் சாம்பு

''தேவன்'' அவர்களின் 'துப்பறியும் சாம்பு' வெற்றிபெற்ற தொடர்கதையாக மட்டுமல்ல, ஒரு வெற்றிபெற்ற நாடகமாகவும் பல நாடக அரங்குகளில் பீடு நடை போட்டு வந்திருக்கிறது. சாம்புவின் ஒவ்வோர் அசட்டுக் காரியமும் 'ஹிட்'டாகி அவனைத் துப்பறியும் நிபுணனாக்கிவிட்ட தொடர் நிகழ்ச்சிகள் மிகவும் பிரசித்திபெற்றவை; சுவையானவையும்கூட.

திருவல்லிக்கேணி, யைன் ஆர்ட்ஸ் கிளப் குழுவினர் இந்த நாடகத்தைப் பல முறை நடத்தி ரஸிகப் பெருமக்களின் பாராட்டைப் பெற்றிருக்கின்றனர். குழுவின் தலைவரான திரு. என். எஸ். நடராஜன் அவர்கள்தான் சாம்புவாகத் தோன்றுவார். அதன் காரணமாக ரஸிகப் பெருமக்களிடையே ''சாம்பு நடராஜன்'' என்றே அழைக்கப்படும் பேறு பெற்றவர்.

அவர் இப்பொழுது ''துப்பறியும் சாம்பு''வைப் புதிய நடிக, நடிகைகளைக் கொண்டு மீண்டும் அரங்கேற்றி யிருக்கிறார். அந்த அரங்கேற்றம், திருவல்லிக்கேணி யைன் ஆர்ட்ஸ் கிளப் குழுவின் வெள்ளிவிழாக் கொண்டாடும் சந்தர்ப்பத்தில் நடந்திருப்பது ரொம்பப் பொருத்தம்.


ஒவ்வொரு காட்சியிலும் ரஸிகப் பெருமக்களின் கைவொலியைப் பெற்றுவிட்டார், சாம்புவாக நடித்த ராமமூர்த்தி. அடேயப்பா ! அவரால் எப்படி இவ்வளவு அசடாகத் தத்ரூபமாக நடிக்க முடிந்தது !

வேம்புவாக வந்த நடிகை ஸ்ரீ லலிதாவின் நடிப்பும், நொடிப்பும், அசட்டுக் கணவனிடம் காட்டிய கர்சனமும் அப்பப்பா ! பிரமாதம்.

இன்ஸ்பெக்டர் கோபாலன் பாத்திரத்தை ஏற்ற எஸ். ஆர். கிருஷ்ணசுவாமி உயரத்தில் மாத்திரம் அல்ல, எல்லா அம்சங்களிலும் இன்ஸ்பெக்டராக நடிக்க ஏற்றவர் ! டைரக்ஷன் செய்யும் பொறுப்பையும் வகித்துத் திறமையாகச் செய்திருக்கிறார்.

வி. வசந்தாவுக்கு லக்ஷ்மி மாமி வேஷம் மிகவும் பொருத்தமா யிருந்தது.

வெங்கிட்டுவாக நடித்தவர் பெயரும் வெங்கிட்டு தான் ! சாம்பு, வேம்பு இருவருக்கும் ஈடு கொடுத்து அசடு வழிந்து அதிஅற்புதமாக நடித்தார்! அவர் மடியில் கட்டிக் கொண்டிருந்த செங்கல் கட்டியும் கூட நன்றாய் நடித்தது ! -- காந்தன்



அரசன் மகனுடன் அச்சுரங்கப் படிகளில் இறங்கிக் கொண்டே, ''வஸுமதி, நீ ?'' என்றான். வஸுமதி தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு விம்மியபடி, ''என் அன்பே, மறந்துவிடுங்கள் என்னை.... நான் உங்களுக்குத் தகுதியற்றவள். சந்திரவர்மன் என் தந்தை. இதை வெளியிடாததற்கு என்னை மன்னித்தருள்வீர் ! போய் வாருங்கள்.... என் வழி வேறுவிதமானது'' என்றாள்.

அரசன் பெருங் குரலெடுத்து, ''வஸுமதி! ....ஈ......ஈ.....!'' என்று கூவி அலறினான். அவள் சட்டென இரண்டாக விரிந்த அந்தச் சுரங்க வாயிலைச் சேர்த்து மூடிவிட்டாள். அரசனுடைய குரல் ஆழத்தில் எங்கோ கேட்டது. கட்டாந்தரையில் அவள் 'தொப்' பென விழுந்து, புரண்டு அழுது புலம்பினாள். பெருந்தீ அவள் இருந்த இடத்திலும் தொற்றிக் கொண்டது.

* * *

ஒரு கையில் வாளும், மறு கையில் ஒன்ளெரி பந்தமும் ஏந்திச் சந்திரவர்மனின் படையினர் கோட்டை முகப்பு வாயில் வழியாக உள்ளே புகுந்துவிட்டனர். அவர்களுக்கெல்லாம் முன்னால் பளபளக்கும் கவச உடையில் சந்திரவர்மனே சென்றான். ரத்தம் துளியும் சிந்தாமல் பட்டணம் அவர்கள் வசமாகிவிட்டது. வச்சிரசேனன் அவனை வரவேற்க முன்னால் வந்தபோது, சந்திரவர்மன், இடிக் குரலில், ''அடே, துரோகி, உன் 'நாட்டையே நீ காட்டிக்கொடுத்துவிட்டாயே! நீ எதைத்தான் செய்யமாட்டாய் ? அரண்மனைக்குச் செல்லும் வழி எது ?'' என்றான்.

அவன் அதைத் தேட வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. வானளாவிச் சுடர் எழ அவ்வழிய மௌரிய காலத்து அரண்மனை எரிந்து சாம்பராகிவிட்டது. சிங்காதன அறை, மந்திராலோசனை அறை நாளோலக்கம், ஓவியக் கூடம் யாவும் கருகிப் போய்க் கூரையற்ற வெறுங் கம்பங்களாக நின்றன. கண்களில் சினம் தெறிக்க, சந்திரவர்மன் வச்சிரசேனனைப் பார்த்து, ''அரசன், பட்டமாதேவி இவர்களெல்லாம் எங்கே?'' என்று கேட்டான். அதே சமயம் 'அப்பா!' என்று ஒரு பெண்ணின் குரல் அண்மையில் அழுவது சந்திரவர்மனின் செவியில் படவே, அவன் திரும்பியபோது தன் மகள் வஸுமதி அலங்கோலமாக வருவதைப் பார்த்து, திடுக்குற்று நின்றான். அவள் அவன் காலடியில் விழுந்து ''என் காரியம் முடிந்து விட்டது, அப்பா! ஆனால்....'' என்று அவள் கூறுவதற்குள், ''அரசன் எங்கே போய்விட்டான்?'' என்றான் சந்திர வர்மன்.

''அவர் தப்பித்துக் கொண்டு போய்விட்டார் அப்பா. அவரோ, அவருடைய மகனோ உன் கையில் சிக்க மாட்டார்கள்.''

''எப்படிப் போனார்கள்?''

''ஒரு சுரங்க வழியாக நானே அனுப்பி விட்டேன்.''

''என்ன காரியம் செய்தாய் மகளே!''

''அப்பா, இதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், நான்... நான்.... எல்லாவற்றையும் இழந்து நிற்கிறேன். என் பெண்மையை ஒரு பாவி பாழாக்கி விட்டான். நான் உயிர் வாழ்வதைவிட மரிப்பதே மேல்'' என்ற வஸுமதி வச்சிரசேனனைச் சுட்டிக் காட்டி, ''இந்தப் பாவிதான்'' என்று கூறி மூர்ச்சையாகிக் கீழே சாய்ந்தாள்.

சந்திரவர்மன் துவளும் தன் மகளைக் கையால் தாங்கிக் கொண்டான். வச்சிரசேனனை எரித்துவிடுவது போல் நோக்கினான். அவன் இரு கண்களையும் தன் கூரிய விரல் நகங்களால் கிளறிவிடப் பாய்ந்தபோது வஸுமதி மயக்கம் தெளிந்து, ''அப்பா, சற்றுப் பொறுங்கள். இந்தப் பாதகனை இப்படிக் கொல்லக் கூடாது. துளித் துளியாக வதைத்துக் கொல்ல வேண்டும். பாழுங் கிணற்றில் தள்ளப்பட்டு, அவன் பல நாட்கள் துடித்து, அழுகிச் சாக வேண்டும்! அப்போது தான் என் மனம் அமைதியுறும்'' என்றாள்.

''அப்படியே செய்கிறேன், அம்மா'' என்ற சந்திரவர்மன், ''இவனைப் பிடித்து இந்தக் கற்றூணில் பூட்டுங்களடா!'' என்று உத்தர விட்டான். அவனுடைய ஆணையைப் படை வீரர் நிறைவேற்றினர்.

வஸுமதி தணிந்த குரலில், ''அப்பா, இனி தந்தைக்குரிய கடமையைச் செய்யுங்கள். இந்த உடலைத் தந்தவர் நீங்களே. எதற்கும் உதவாத என்னை, உங்கள் கையாலேயே குத்திக் கொன்றுவிடுங்கள்'' என்றாள்.


இதைக் கேட்டதும், கற்றூணில் கிடக்கும் வச்சிரசேனனின் உடல் வெலவெலத்தது. வஸுமதி மீண்டும் தந்தையை வேண்டிக்கொண்டாள்: ''மாசற்றது என் மனம். ஆனால் என் மெய் இந்த மிருகத்தால் பாழாகிவிட்டது. இதைக் குமைப்பதே மேல். தயங்காதீர்கள்.'' தந்தை முன் மண்டியிட்டுத் தன் நெஞ்சத்தைக் காட்டி, ''கூசாமல் செய்யுங்கள்!'' என்றாள்.

''மகளே!'' என்று குரலில் ஒரு கம்பலை ஆட, சந்திரவர்மன் கூரிய வேலைத் தூக்கி அவள்மீது குறி வைத்தான். ''புத்தம் சரணம் கச்சாமி!'' என்று வஸுமதியின் உதடுகள் மெல்ல உச்சரித்தன. அப்போது தூணில் பிணைக்கப்பட்டிருந்த வச்சிரசேனன் கண்ணை மூடிக்கொண்டு ''ஐயோ!'' என்றலறினான். வில்லேந்திய அறுவர் அவன் மீது குறிவைத்துக் கணைகளை எய்தனர். அவனது உடல் கற்றூணிலேயே தொய்ந்தது.

''எரிந்துபோன இந்நகரில் எனக்கு என்ன வேலை? ஒரு மகள் இருந்தாள்... அவளும் போய்விட்டாள். எனக்கென்ன இருக்கிறது இனிமேல்? திரும்பிச் செல்கிறேன்'' — சந்திரவர்மன் சோகத்தில் ஆழ்ந்தான்.

ரண வாத்தியங்கள் ஒலித்தன. சந்திரவர்மனுடைய படை வீரர்கள் வந்த வழியே திரும்பினர். பாடலி நகரம் என்னும் ஐசுவரியம் கொழித்த பூம்பதி ஒரு பெண் பாவத்தால் அழிவுற்றது. அன்று புத்த பகவானின் வாக்கு எவ்வளவு உண்மையாகப் பலித்து விட்டது!

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam


ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush Shirtings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon

